இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 152 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 14 வியாழக்கிழமை 27.04.2017

## அரச பயங்கரவாதமும் நாட்டில் கட்டவிழ்ந்தது

*ஒப்புக்கொள்கிறார் சந்திரிகா*

கொழும்பு, ஏப். 27
நாட்டில் அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்டதாக முன்னாள் அரச தலைவர் சந்திரிகா >> 23

## இன்று பாண் கிடையாது!

யாழ்ப்பாணம், ஏப். 27
கடையடைப்புப் போராட்டம் இன்று இடம்பெறுவதால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாண் உள் >> 23

## வடக்கு மாகாண சபை அமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு >> 24

## இன்றைய கடையடைப்புக்கு ஆதரவு வழங்கும் தரப்புக்கள்

**அரசியல் கட்சிகள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
தமிழர் விடுதலைக் கூட்டணி
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

**பொது அமைப்புக்கள்**

காணாமல் போனோரைத் தேடிக் கண்டறியும் குழு
யாழ்ப்பாண மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்
கிளிநொச்சி பனை தென்னை வலய அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினர்
வலி.தெற்கு வர்த்தக சம்மேளனம்
மட்டக்களப்பு சிவில் சமூகம்
யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சம்மேளனம்
யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
யாழ்ப்பாண மாவட்ட பார ஊர்தி உரிமையாளர் சங்கம் >> 22

## வீதியோரங்களில் போராடும் எமக்காக இன்று வீட்டிலிருந்து ஆதரவளியுங்கள்

### கிளிநொச்சி மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் மிக உருக்கமான வேண்டுகோள்

கிளிநொச்சி, ஏப். 27
66 நாள்களாக வீதியோரத்தில் நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். இன்று ஒரு நாள் எங்கள் உறவுகளுக்காக, வீட்டில் இருந்து நீங்கள் போராடுங்கள். வடக்கு கிழக்கில் இன்று நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்தை ஒவ்வொருவரும் தாங்களாக உணர்ந்து கடைப்பிடியுங்கள். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், கண்ணீருடன் உருக்கமாக வேண்டு >> 24

காணாமற்போனோர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டி

# தமிழர் தாயகம் இன்று முடங்கும்

### கடையடைப்புப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பும் ஏகோபித்த ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 27
வடக்கு - கிழக்கு, தமிழர் தாயகத்தில் இன்று கடையடைப்பு நடைபெறவுள்ளது. இதனால் தாயக தேசம் முற்றாக முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றைய போராட்டத்துக்கு வடக்கு கிழக்கைச் சேர்ந்த முதன்மையான அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பன தமது முழுமையான தார்மீக ஆதரவை வழங்கியுள்ளன. கடையடைப்புப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்று காணாமற்போனோரின் உறவினர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கு - கிழக்கில் தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் போராட்டம் தொடர்பில் அரசு பாராமுகமாக இருப்பதால், அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் வடக்கு - கிழக்கு தாயக தேசம் தழுவிய கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர். அதற்கு அமைவாகத் தமிழர் தாயகத்தில் இன்றைய தினம் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் >> 23

## இன்றைய கடையடைப்பால் அரசியலில் பெரும் தாக்கம்

*அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 27
இன்றைய கடையடைப்புப் போராட்டம் அரசியல் மட்டத்தில் பெரிய தாக்கத்தைச் செலுத்தும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை >> 24

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மைத்திரிக்கு மனு

முல்லைத்தீவு, ஏப். 27
வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காணாமற்போனோரின் உறவினர்களால் இன்றைய தினம் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. பேரணி முடிவில் அரச தலைவருக்கான மனு கையளிக்கப்படவுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தின் முன்பாக >> 24

## கூட்டு அரசின் வெற்றியே இன்றைய கடையடைப்பு

*அமைச்சர் ராஜித இப்படி விளக்கம்*

கொழும்பு, ஏப். 27
நாட்டில் முழு ஜனநாயகத்துடன் கூடிய கூட்டு அரசு ஏற்படுத்தப்பட்டமையாலேயே வடக்கு கிழக்கில் இன்று கடையடைப்புப் போராட்டம் சுதந்திரமாக நடைபெறவுள்ளது என அரசு >> 24

## அரசமைப்பு வெற்றியில் தமிழர்களின் எதிர்காலம்

*கூட்டமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 27
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் பொதுமக்களை இருட்டில் வைத்திருக்க முடியாது. புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சியில் வெற்றி >> 04

## வெளிநாடுகளின் தலையீடின்றியே தமிழருக்குத் தீர்வு

*அமைச்சர் மங்கள விடாப்பிடி*

கொழும்பு, ஏப் 27
தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் விடயத்தில் வெளிநாட்டுத் தலையீட்டைத் தமிழ் கடும்போக்குவாதி >> 04

## காணாமற்போனோருக்கான அலுவலகத்தை அரசு நிறுவ கடும் அழுத்தம் கொடுங்கள்

*பிரிட்டன் தூதுவரிடம் சம்பந்தன் வலியுறுத்து*



கொழும்பு, ஏப். 27
காணாமற்போனோரைக் கண்டறிவதற்கான அலுவலகத்தை உடனடியாக அமைப்பதற்கு >> 24

## பன்னாட்டுத் தீவிரவாதத்தை முறியடிக்கும் வகையிலேயே புதிய பாதுகாப்புச் சட்டம்

*அனுமதியளித்தது அமைச்சரவை*

கொழும்பு, ஏப். 27
நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிப் புதிய பாதுகாப்புச் சட்டமொன்றைக் கொண்டு >> 21

## தந்தை செல்வா முன்வைத்த கூட்டாட்சியே சரியான தீர்வு

*அவரின் நினைவுப் பேருரையில் அமைச்சர் ராஜித எடுத்துரைப்பு*

கொழும்பு, ஏப். 27
தந்தை செல்வா முன்வைத்த கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வே இந்த நாட்டுக்குப் பொருத்தமானது என்று அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். >> 21

## உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அதிகாரம் பகிர அரசு யோசனை

*தந்தை செல்வா நினைவுப் பேருரையில் தெரிவித்தார் ஜயம்பதி விக்கிரமரட்ண*



யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப் 27
மாகாண சபைகளுக்கு மட்டுமல்ல அதன் கீழ் இயங்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அதிகாரங்களை வழங்குவது குறித்து கூட்டு அரசு சிந்தித்து வருகிறது. இவ்வாறு தெரிவித் >> 24

## கூட்டுப்படைத் தளபதியாக பீல்ட் மார்சல் பொன்சேகா

*அரச தலைவர் மைத்திரி யோசனை*



கொழும்பு, ஏப். 27
நாட்டில் சிவில் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் பேணவும், சட்ட ஒழுங்குகளை முறையாக நிலைநாட்டவும் அமைச் >> 22

## இலங்கை - இந்தியா இடையே நேற்று வர்த்தக உடன்பாடு

கொழும்பு, ஏப். 27
இலங்கை-இந்தியா இடையே வர்த்தகப் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. >> 22

## தந்தை செல்வாவை மூவின மக்களும் கொண்டாடவேண்டும்

*ராஜித வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 27
"இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும், தந்தை செல்வாவைக் கொண்டாட வேண்டும். அவரது >> 04

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மாகாண ஆளுநராகவிருந்தாலும் நீதிமன்றை அவமதித்தல் குற்றமே

## யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 27

"நீதிமன்றில் வழக்கு விசாரணையில் இருக்கும் போது அதனுடன் தொடர்புடைய அதிகாரி மீது பழிவாங்கல் நடவடிக்கை எடுக்க முனைந்தால், அவர் மாகாண ஆளுநராக இருந்தாலும், நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்குள்ளாக வேண்டியிருக்கும். வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த ஜெகூவுக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தொடர்பில் மன்றுக்கு சரியான விளக்கம் முன்வைக்கப்பட வேண்டும். அவருக்கு வழங்கப்படாதுள்ள சம்பள நிலுவையும் வழங்கப்பட வேண்டும்"

இவ்வாறு கட்டளையிட்டார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

ஜெகூவுக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் பழிவாங்கலா? என்பதை ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு மேல் நீதிமன்று அறிவுறுத்தல் வழங்கியது.

வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ஜெகூவால், வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட நிர்வாகத்தினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்ற போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவுகளை வழங்கினார்.

வழக்குத் தொடுநரின் சட்டத்தரணி, வழக்குத் தொடுநருக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்ற விடயத்தையும், அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதையும் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

வழக்குத் தொடுனர் தரப்பு, அரச தரப்பு சமர்பித்தல்களை ஆராய்ந்த நீதிபதி, "வழக்கு மன்றுக்கு வந்த பின்னர் ஏதாவது பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ள முனைந்தால் அவர் ஆளுநராக இருந்தாலும், நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு உள்ளாக வேண்டி வரும்.

பழிவாங்கலுக்குச் சார்பாக அரச சட்டத்தரணி முன்னிலையாகக் கூடாது. ஒருவர் அனுமதி பெற்றோ? அல்லது பெறாமலோ? வெளிநாட்டுக்குச் சென்று வருகிறாரோ? அப்பொழுதும் அவர் அந்தப் பதவியில் இருக்கலாம். இந்த மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். அவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தொடர்பில் சரியான தகவல் வேண்டும். ஆளுநர் சொல்கிறார் என்பதற்காக அதிகாரிகள் யாரும் ஆராயாமல் கையெழுத்துப் போட வேண்டாம். அதிகாரிகள் மன்றுக்கு தந்த கடிதங்களில் ஆளுநரின் கடிதங்கள் எவையும் இல்லை. இரண்டு வாரங்களுக்குள் குறித்த நபரின் சம்பளம் தொடர்பாகவும், அவருக்கு வழங்கப்பட்ட திடீர் இடமாற்றம் தொடர்பாகவும் மன்றுக்குப் பதிலளிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார். வழக்கு விசாரணை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பின்னணி

ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தில் பொதுக் கொள்கைகள் தொடர்பான முதுமாணி பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசிலைப் பெற்று வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ஜெகூ 2016ஆம் ஆண்டு அந்த நாட்டுக்குச் சென்றுள்ளார். இந்த நிலையில் 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இவரை மீண்டும் நாட்டுக்கு வருமாறு ஆஸ்திரேலிய அரசின் ஊடாக ஆளுநரின் செயலாளர் அறிவித்தல் விடுத்தார்.

இதனால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அதை விசாரணை செய்யுமாறும் எதிர் மனுதாரர்களாக வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதித் தலைமைச் செயலாளர் (பயிற்சியும் ஆளணியும்) ஆகியோரை குறிப்பிட்டு நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (வ-5,12)

# சுமந்திரன் மீது கொலைச் சதி; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஏப்.27

தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சி வழக்கின் 5 சந்தேகநபர்களின் விளக்கமறியலை மேமாதம் 3ஆம் திகதிவரை கிளிநொச்சி நீதிவான் மன்று நேற்று நீடித்தது.

பிரமுகர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 5 பேரும் நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை இந்தத் தவணையுடன் யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்படும் என்ற தகவலை கடந்த 12 ஆம் திகதி மன்றில் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினர் அறிவித்திருந்தனர்.

இன்னமும் விசாரணைகள் முடிவுறாத நிலையில் காலநீடிப்பை வழங்குமாறு பயங்கரவாதத்தடுப்புப்பிரிவினர் நேற்று மன்றில் முன்னிலையாகிக் கோரினர்.

காலநீடிப்பை வழங்கிய நீதிவான், விசார ணைகளை விரைவு படுத்துமாறு பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கு அறிவுறுத்தினார். (வ-ய)

# வடக்கு விபத்துகள் குறித்து விவரங்கள் திரட்டுவதற்கு முடிவு

## அடுத்த மாதம் முதல் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்கள் தொடர்பான விவரக் கோவைத் திரட்டு தயாரிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் விபத்துகள் அதிகரித்துள்ளன. இவை தவிர்க்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் எலும்பு முறிவு சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர் ரி. கோபிசங்கர் தலைமையில் கையாளப்படவுள்ளது.

இது குறித்து மருத்துவர் கோபிசங்கர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களின் முதன்மை வைத்தியசாலைகளிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்படும் விபத்தினால் காயமடையும் நோயாளர்கள் தொடர்பான சகலவிதமான தரவுகளும் திரட்டப்படும்.

இவ்வாறு திரட்டப்படும் தகவல்களில் விபத்து இடம்பெற்ற பகுதி, விபத்து இடம்பெற்ற நேரம், வைத்தியசாலைக்கு வந்த நேரம், தாமதத்துக்கான காரணம், சிகிச்சை அளிக்கப்பட்ட நேரம், விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தன்மை உள்ளடங்கலாக நோயாளி வீடு செல்லும் வரையிலான தகவல்களைத் திரட்டிப் பதிவிட எண்ணுகின்றோம். வடக்கில் நாளொன்றுக்குச் சராசரியாக 10 தொடக்கம் 12 விபத்துக்கள் இடம்பெறுகின்றன. மாதாந்தம் 5 அல்லது 6 உயிரிழப்புக்களும் தற்போது இடம்பெறுகின்றன.

இவ்வாறு திரட்டப்படும் அறிக்கையின் அடிப்படையில் அடுத்த ஆண்டில் இருந்து இறப்பை 15 வீதத்தினாலும் காயத்தை 20 வீதத்தினாலும் குறைக்கும் திட்டத்தைத் தயாரிக்க எதிர்பார்க்கின்றோம்.

குறித்த தகவல் திரட்டலானது மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடம்பெறும் - என்றார். (த-4-101)

## மைத்திரி அரசின் செயற்பாட்டால்

# தனி நாடாகிறது வடக்கு-கிழக்கு

## விமல் வீரவன்ஸ கொதிப்பு

கொழும்பு, ஏப். 27

வடக்குகிழக்கைத் தனி நாடாகப் பிரித்துக் கொடுப்பதற்குத் தேவையான இரண்டு முக்கிய விடயங்களான சுயாதீன நிலப்பரப்பு மற்றும் இனப்படுகொலை என்பவற்றை இந்த அரசு ஜெனிவாவில் ஒத்துக்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வரு கிறது.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து வடக்கு கிழக்கைத் தனி ஈழமாக ஆக்குவதற்குப் புலி கள் 30 வருடங்களாக மேற்கொண்டு வந்த முயற்சியை மகிந்த ராஜபக்ச முறியடித்து விட்டார். இருந்தாலும், புலிகளின் அந்தக் கனவை ஆயுதம் இன்றி நிறைவேற்றிக் கொள்வதற்குத் தமிழ் அரசியல் தலைவர்களும் புலம்பெயர் தமிழர்களும் முயற்சித்து வருகின்றனர்.

மகிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கனவு இப்போது நிறைவேறும் கட்டத்தை அடைந்துள்ளது. சுயாதீனமான நிலப்பரப்பு மற்றும் இன அடக்குமுறை, இனப்படுகொலை போன்றவற்றைத் தனிநாடு ஒன்றை உருவாக்கும் அம்சங்களாகச் பன்னாட்டுச் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது என்பதை இந்த அரசு ஜெனிவாவில் ஒத்துக்கொண்டுள்ளது. அதேபோல், புதிய அரசமைப்பின் ஊடாகக் காணி அதிகாரங்களைத் தமிழர்களுக்கு வழங்கி அவர்கள் வசம் சொந்தமாக நிலப்பரப்பு இருப்பதை நிரூ பிக்கப் போகின்றது.

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டால் அதை ஏன் ஜெனிவாவில் போய்க் கூற வேண்டும். இங்கேயே தீர்க்கலாம் தானே. ஐ.நா. சொல்வதைக் கேட்டுத்தான் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமா? - என்றார். (த-3)

# கேப்பாபிலவு மக்களுக்கு யாழ்.வணிகர் கழகம் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 27

முல்லைத்தீவு, கேப்பாபிலவில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்ப்பாணம் வணிகர் கழகம் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அண்மையில் சென்ற முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கேப்பாபிலவில் காணி விடுவிப்பை வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய ஆவன செய்து தருமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதற்காக முதலமைச்சர் யாழ். வணிகர் கழகத்தின் உதவியை நாடினார்



இதன் பிரகாரம் வர்த்தகர்களால் அனுப்பிவைக்கப்படக் கூடிய பொருள்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டது. குறித்த பொருள்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நேற்று வடக்கு முதலமைச்சரின் செயலாளரிடம் கையளித்தது.

அரிசி 240 கிலோ , மாவு 175 கிலோ , சீனி 20 கிலோ , பருப்பு 140 கிலோ , தேயிலை 8.5 கிலோ, சோயா பீன் 15 கிலோ , அங்கர் பால்மா 41 பைக்கெற்கள் என்பன நேற்றுக் கையளிக்கப்பட்டன. (த-101)

# கள் உற்பத்தி இம்முறை குடாநாட்டில் பாதிப்பு

## வருமானமின்றித் தொழிலாளர் பெரும் திண்டாட்ட நிலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனம் கள்ளின் உற்பத்தி இம்முறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் வருமானமின்றித் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

பனை மரங்களில் கள் ஊறுவது மிக மிகக் குறைவாக உள்ளமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள் உற்பத்தி குறைந்துள்ளமையால் பனம் பொருள் உற்பத்திகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ். கணேசன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு போதிய மழை வீழ்ச்சி இன்மையாலும், தற்போது நிலவும் கடும் வெப்பம், வறட்சி நிலை காரணமாகவும் கள் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்கள் வருமானமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளன.

பனம் கள் உற்பத்தி பாதிக்கப்பட்டமையால் பதநீர் மற்றும் வெல்ல உற்பத்திகளையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல சங்கங்களில் பனம் வெல்லம், பதநீர் என்பவற்றுக்குக் கிராக்கியும் ஏற்பட்டுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

# அனைத்து தனியார் நிறுவனங்களையும் மூடி ஆதரவு தருக

## மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

மட்டக்களப்பு, ஏப்.27
வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இன்று இடம்பெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குக் கிழக்கு மாகாணம் முழுவதும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றை மூடி ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.
அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,
காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிவதற்கான போராட்டம், சொந்த நிலத்தை மீட்பதற்கான போராட்டம், அரசியல் கைதிகளின் விடுதலை கோரிய போராட்டம், வேலைதேடும் பட்டதாரிகளின் போராட்டம், காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டம், மதுவுக்கு எதிரான போராட்டம், ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கு நீதி கோரிய போராட்டம் என்பன தொடர்கின்றன.
இவ்வாறான போராட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலே நீண்ட நாள்களாக நடைபெற்று வருகின்ற போதிலும், இந்தப் போராட்டங்கள் அரசினால் இதுவரை கவனத்திற் கொள்ளப்படவில்லை.
இந்த நிலையில் அரசினதும் உலகினதும் கவனத்தை ஈர்க்கும் முகமாக இன்று வடக்கு, கிழக்கில் முழுக் கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தமிழ் பேசும் சிவில் சமூகம் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளன.
எனவே, கிழக்கு மாகாணம் முழுவதிலும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் முதலானவற்றை மூடி ஆதரவு வழங்குங்கள் என்றுள்ளது. (த-21)

# சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி ஆதரவு வழங்குங்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27
வடக்குகிழக்கில் இன்று நடக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி ஒத்துழைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்த முன்னணி விடுத்துள்ள அறிக்கையில்,
காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் தமது சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அரசு பொறுப்புக் கூறவேண்டுமென வலியுறுத்தி கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்கு எங்கும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டங்களைப் பலப்படுத்தும் வகையில் எமது முழுமையான ஆதரவைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பத்திலிருந்தே வழங்கி வருகின்றது.
காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள், தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட பலகோரிக்கைகளை முன்வைத்து இன்று வடக்கு, கிழக்கு முழுவதிலும் இயல்பு நிலை மறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். இந்த இயல்பு நிலை மறுப்புப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்வதுடன், சகல பொது அமைப்புக்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக நிலையங்களை மூடியும், பொதுப் போக்குவரத்துச் சேவைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்றுள்ளது. (த-21)

# அரசின் ஏமாற்றும் படலத்துக்கு முற்றுப்புள்ளிவைக்கதிரளுங்கள்

## யாழ்ப்பாண மாவட்டப் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27
தமிழர் பிரதேசத்தில் இன்று இடம்பெறும் கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ். மாவட்டப் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையான ஆதரவை வழங்கும் என வடக்கு மாகாணப் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.கணேசன் தெரிவித்தார்.
அரசின் ஏமாற்றும் படலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
போரின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள், சிறைகளில் பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டவர்கள், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் போன்ற பிரச்சினைகளுக்கு விரைவில் உடனடித் தீர்வை அரசு வழங்க வேண்டும்.
நல்லாட்சி அரசு என்று கூறி எமது மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இப்படியான நிலையில் இன்றைய கதவடைப்புப் போராட்டத்துக்கு பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்கள் முழு ஆதரவை வழங்கும் - என்றார். (த-17)

# வலி.தெற்கு வர்த்தகர்கள் கடையடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப்.27
வடக்கு,கிழக்கில் இன்று நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குத் தமது சங்கம் ஆதரவு வழங்குவதாக வலி. தெற்கு வர்த்தகர் சம்மேளன தலைவர் லயன் சி.ஹரிகரன் தெரிவித்தார்.
அவர் விடுத்துள்ள அறிக்கையில்,
தாம் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காகவே நல்லாட்சி அரசை தமிழ் மக்கள் ஆட்சிபீடம் ஏற்றினர். ஆனால், மகிந்த விட்ட அதே தவறை நல்லாட்சி அரசும் விடுகின்றமைதான் வேதனையான விடயம். கடந்த கால அரசு போன்று இந்த ஆட்சிபீடமும் இராணுவத்துக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்குகின்றது.
இந்த நிலமை மீண்டும் தொடருமானால்நீறுபூத்த நெருப்பாகக் காணப்படும் தமிழ் மக்களின் உணர்வுகளை அரசு சீண்டுமானால் மக்கள் போராட்டங்கள் தொடர்ந்தும் வெடிக்கும். வடக்கு,கிழக்குத் தமிழர் பிரதேசமெங்கும் முழுக் கடையடைப்பு கடைப்பிடிக்கப் படுகின்றது. அதற்கு எமது வலி. தெற்கு வர்த்தக சம்மேளனமும் தனது ஆதரவை வழங்குகின்றது என்றுள்ளது. (த-21)

# உறவுகளின் கண்ணீருக்கு விடை காண வாருங்கள்

## யாழ்ப்பாண மாவட்ட பார ஊர்தி உரிமையாளர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27
காணாமற்போனோரின் உறவுகளின் கண்ணீருக்கு விடை கிடைக்க வேண்டும். அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் அழுத்தம் கொடுக்க இன்று நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்கு நாமும் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பார ஊர்தி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளதாவது, வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்றைய தினம் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கு நாம் தார்மீக ரீதியில் எங்களின் ஆதரவை வழங்குகின்றோம். எமது மக்களின் கண்ணீருக்கு விடை கிடைக்க வேண்டும்.
அந்த மக்கள் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக தங்களை வருத்திப் போராடுகின்றார்கள். அவர்களுக்காக நாம் இன்று போராடுவோம். ஒட்டுமொத்த வடக்கு கிழக்கும் இன்று முடங்க வேண்டும். இதனூடாக அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் உரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும். இன்றைய போராட்டம் வெற்றி பெற, யாழ்ப்பாண மாவட்ட பார ஊர்தி உரிமையாளர் சங்கமும் பங்காளியாக இருக்கும் என்றுள்ளது. (த-5)

# பன்னை தென்னை வள சங்கத்தினர் ஆதரவளிப்பு

கிளிநொச்சி, ஏப். 27
வடக்குகிழக்கில் இன்று நடக்கும் கடையடைப்புக்குத் தமது முழு ஆதரவை வழங்குவதாகக் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.
அதன் தலைவர் கனகையா மதனரூபன் விடுத்துள்ள அறிக்கையில், கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பன்னாடுகளின் கவனத்தை ஈர்க்கும் முகமாக இன்று நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்துக்கு முழு ஆதரவளிக்கிறோம். கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் 30 கிளை நிலையங்கள், கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகம் என்பன முற்றாக மூடப்பட்டு ஆதரவு வழங்கப்படவுள்ளது என்றுள்ளது. (த-635)

# ஆசிரிய ஆலோசகர் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 27
வடக்குகிழக்கில் இன்று நடக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் தமது முழு ஆதரவை வழங்குவதாக அதன் பொதுச்செயலாளர் ந. புகழ்சிறீந்திரன் அறிவித்துள்ளார்.
இலங்கை அரசுக்கும் பன்னாட்டு சமூகத்துக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் இன்றையதினம் கடைப்பிடிக்கப்படவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (த-8)

# கிழக்கில் முழு ஆதரவு கிட்டும்

யாழ்ப்பாணம், ஏப்.27
இன்று இடம்பெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குக் கிழக்கில் முழு ஆதரவு கிட்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கே. துரைராசசிங்கம் தெரிவித்தார்.
அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்குகிழக்கு மக்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் காணாமற்போனவர்களின் உறவுகளின் போராட்டம், வேலை தேடும் பட்டதாரிகளின் போராட்டம் மற்றும் மக்களின் நிலமீட்புப் போராட்டங்கள் என்பன காலவரையறையின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த விடயங்களைச் சுட்டிக் காட்டி அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தனது முழு ஆதரவை வழங்கும் - என்றுள்ளது. (த-21)

# கடையடைப்பு இன்று பேராதரவு தாருங்கள்

திருகோணமலை, ஏப். 27
இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு எல்லாத் தரப்பும் பேராதரவு வழங்கவேண்டும் எனக் கோரி, துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதுடன், சுவரொட்டிகளும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினாலேயே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.
திருகோணமலை மாவட்டத்தில் இன்றைய தினம் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. 50 நாள்களைக் கடந்து நாம் முன்னெடுக்கும் சுழற்சி முறைப் போராட்டத்தை, அரசோ, அரசியல்வாதிகளோ ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இன்றைய முழு அடைப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.
வர்த்தக சங்கங்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், தனியார் போக்குவரத்துச் சங்கம், மீனவர் சங்கம் உள்ளிட்ட எல்லோரும் இன்றைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (த-5)

# யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 27
வடக்குகிழக்கில் இன்று கடையடைப்புப் போராட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
காணாமல் ஆக்கப்பட்டவர்களினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு எமது ஆதரவை வழங்குகின்றோம். போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து மீன் சந்தைகளும் இயங்காது. அத்துடன் கடற்றொழிலாளர்கள் அனைவரும் தமது தொழிலுக்கும் செல்ல மாட்டார்கள் - என்றார். (த-8)

# இரு கும்பல்களுக்கு இடையே மல்லாவியில் நேற்று மோதல்

## வைத்தியசாலைக்குள் புகுந்தும் அடிதடி; நால்வர் படுகாயம்

முல்லைத்தீவு, ஏப். 27

முல்லைத்தீவு, மல்லாவி நகரப் பகுதியில் இரு கும்பல்களுக்கு இடையே நேற்று ஏற்பட்ட கைகலப்பு வாள் வெட்டில் முடிவடைந்தது. படுகாயமடைந்த ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கும் தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 5 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் ஆபத்தான நிலையில் நோயாளர் காவு வண்டிகள் மூலம் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

"மல்லாவி பொலிஸ் பிரிவில் உள்ள கல்விளான் கிராமத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்றுக்கும் திருநகர் கிராமத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்றுக்கும் இடையே நீண்டகாலமாக பகை நிலவி வந்தது. இரண்டு கும்பல்களுக்கும் இடையே மல்லாவி நகரப் பகுதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கைகலப்பு ஏற்பட்டது.

பின்னர் கத்தி, அரிவாள் கொண்டு அவர்கள் மோதியுள்ளனர். இதனால் படுகாயமடைந்த ஒரு கும்பலைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களை வைத்தியசாலையில் வைத்து மற்றைய கும்பலைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் வைத்தியசாலையில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன் போது, தாக்குதலில் படுகாயமடைந்த 4 பேர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு நோயாளர் காவு வண்டிகள் மூலம் மாற்றப்பட்டனர். அவர்கள் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனரை.

மல்லாவி வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் தலைக்கவசத்தால் தாக்குதலுக்கு உள்ளானார். அத்துடன் வைத்திய சிகிச்சை பிரிவில் உள்ள மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருள்களும் சிதறுண்டு சேதமடைந்தன.

மல்லாவிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வைத்தியசாலைக்குச் சென்ற பொலிஸார் பதற்ற நிலமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவத்தில் வாள் வீச்சில் படுகாயமடைந்த நிலையில் திருநகர் கிராமத்தைச் சேர்ந்த கமலநாதன் சுஜீபன் (வயது 21) கல்விளான் கிராமத்தைச் சேர்ந்தவர்களான, நவரத்தினம் தஜீபன் (வயது 21) சிவலிங்கம் விேனோராஜ் (வயது 21) ஆகியோர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். திருநகர் கிராமத்தைச் சேர்ந்த கமலநாதன் கஜீபன் (வயது 26) என்பவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் புகுந்து தாக்குதல் நடத்தி பணியாளர்களையும், சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நோயாளர்களையும் தாக்கியவர்களைக் கைது செய்யும் வரை வைத்தியசாலையில் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளமாட்டோம் எனத் தெரிவித்து மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 2 மணிநேரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்வதாகவும், போராட்டத்தை கைவிடுமாறும் கேட்டுக் கொண்டதை அடுத்து பணிக்குத் திரும்பிய மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள் வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்த நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்கினார்கள்.

இதேவேளை, வழங்கிய வாக்குறுதி நேரத்துக்குள் வைத்தியசாலையில் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் 12, பேரை மல்லாவி பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-101)

# சிறுமிகளை துர்நடத்தைக்குட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞனுக்கு மறியல்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 27

யாழ்ப்பாணம் வசந்தபுரம் பகுதியில் பதின்ம வயது சிறுமிகள் இருவரை பாலியல் துர்நடத்தைக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தென்பகுதி இளைஞனை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று உத்தரவிட்டது.

இரண்டு சிறுமிகளை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 20 வயதுடைய இளைஞர் யாழ்ப்பாண பெண்கள் சிறுவர் பிரிவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். மத்திய மாகாணத்தின் நாவலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞனின் சகோதரன் யாழ்ப்பாணத்தில் திருமணம் முடித்துள்ளார். அவருடன் தங்கியிருந்து சந்தேகநபரும் இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அந்தவேளையிலேயே வசந்தபுரத்தைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுடைய சிறுமியொருவர் வீட்டிலிருந்து பொருள்கள் வாங்குவதற்காக கடைக்கு சென்ற சமயம் அவரை இளைஞன் தான் தங்கியிருந்த வீட்டுக்கு அழைத்து சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி இச்சம்பவம் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரிக்கு முறையிட்டுள்ளார். சிறுவர் பாதுகாப்பு அதிகாரி இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு முறையிட்டார். விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இளைஞன் தங்கியிருந்த வீட்டுக்கு சென்ற போது, அங்கு 15 வயதான இன்னொரு சிறுமியுடன் இளைஞன் குடும்பம் நடத்தி வந்தமை தெரிய வந்துள்ளது. இதனையடுத்து பதின்ம வயது சிறுமிகளை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார். அவரை மே மாதம் 08ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-103)

# கடையடைப்புக்கு ஆதரவு வழங்குகின்றது ஈ.பி.டி.பி

யாழ்ப்பாணம், ஏப். 27

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமக்கு நியாயம் கோரி முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் நடத்தப்படும் கடையடைப்புப் போராட்டத்துக்கு ஈ.பி.டி.பியும் ஆதரவு வழங்குவதாக, அந்தக் கட்சியின் ஊடகப் பிரிவினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.

வடக்கு கிழக்கு மாகாணம் தழுவிய வகையில் முன்னெடுக்கப்படும் கடையடைப்புப் போராட்டமானது.

பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையிலும், பொதுச் சொத்துக்கு பங்கம் ஏற்படுத்தப்படாத வகையிலும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான பங்களிப்பை அனைவரும் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. (து-5)

# இந்துக்குருமார் ஒன்றியமும் போராட்டத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களால் இன்று முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்திற்கு பன்னாட்டு இந்துக் குருமார் ஒன்றியம் முழு ஆதரவை வழங்குகின்றது.

இவ்வாறு அந்த அமைப்பின் செயலாளர் சோ.கேதீஸ்வரசர்மா கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நீண்ட காலமாகப் போராடிக் கொண்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளுக்கு நீதி கிடைக்க அரசு மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு நற்செய்தி கிடைக்க வேண்டும்.

அவர்களது உணர்வுகளை மதித்து, உன்னத வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்குடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (து-5)

## முதலாம் பக்கத்தொடர்ச்சி...

### அரசமைப்பு...

பெறுகின்றோமா என்பதே எங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தந்தைசெல்வா நினைவு தின நிகழ்வு, கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது எந்தத் தேசத்திலும் இலகுவான விடயமல்ல. அது அந்த நாட்டின் தலைமைத்துவம் எவ்வாறானதாக அமைகின்றது என்பதைப் பொறுத்த விடயம். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த காலம் முதல் அனைத்து அரச தலைவர்களும் அதிகாரப் பகிர்வு குறித்து முன்னேற்றத்தை காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் அவ்வாறான ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் உரையாற்றுகையில் ஆகக் கூடிய அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தார். அதற்கான யோசனைகளை முன்வைக்குமாறு கேட்டிருந்தார் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளை நாங்கள் முழு நாட்டினதும் நன்மைக்காகவே முன்னெடுக்கின்றோம். சிங்கள மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் அதிகாரங்கள் பகிரப்படுவது அவசியமானதாகும். இலங்கையில் இன்று அனைத்து மாகாணசபைகளின் முதல்வர்களும் அதிகாரப்பகிர்வை கோரி நிற்கின்றனர்.

நாங்கள் மக்களுக்குப் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் குறித்துத் தெளிவுபடுத்த வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளை இந்த நாட்டின் மக்கள் எதிர்க்கவில்லை. நாங்கள் அவர்களை இந்த விடயம் தொடர்பில் இருட்டில் வைத்திருக்க முடியாது.

கடந்த காலங்களில் நாங்கள் பாதை தவறியுள்ளோம். ஆனால் காலங்கள் செல்லச் செல்ல அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டுள்ளோம். புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் நாங்கள் வெற்றிபெறுகின்றோமா என்பதே எங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் - என்றார். (து-5)

### வெளிநாடுகளின்...

கள் கோரிவருகின்றபோதும் அவ்வாறான தேவை இல்லாமல் உள்ளக ரீதியிலேயே தீர்வை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்கின்றோமா இல்லையா என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. தமிழர்களுக்கு விரைவில் நீதியைப் பெற்றுக் கொடுக்கின்றோமா என்பதுவே இப்போதுள்ள முக்கிய பிரச்சினை என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணையை நடத்தவுள்ள உள்ளகப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படவேண்டும் என்று பன்னாடுகள் கோருவதன் அர்த்தம் எமது நீதித் துறையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதாகும்.

மகிந்தவின் 10 வருட ஆட்சியில் இடம்பெற்ற நிகழ்வுகளே இவ்வாறான கோரிக்கையை இன்று பன்னாடுகள் முன்வைக்கக் காரணம். அவரது ஆட்சியில் நீதித் துறை எவ்வாறு அரசியல்மயமாக்கப்பட்டிருந்தது என்பதை உலகம் அறியும். ஆனால், இப்போது நீதித் துறை அரசியல் தலையீடு இன்றிச் சுதந்திரமாக இயங்கத் தொடங்கிவிட்டது. எதிர்காலத்தில் முன்பு போன்ற மோசமான நிலைமை ஏற்படாது. பன்னாட்டு நீதிபதிகளை உள்வாங்குவதா இல்லையா என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கின்றோமா இல்லையா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. நாம் நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கூறுவது வேறு நாட்டு மக்களுக்கு அல்ல. எமது நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்குத்தான் இந்த நீதியைப் பெற்றுக் கொடுக்க முற்படுகின்றோம். இந்த நாட்டில் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு பிரிவினருக்கான நீதியைப் பற்றியே நாம் பேசுகிறோம். அவர்கள் பாதிப்புக்கு உள்ளானார்கள். பல துன்பங்களை அனுபவித்தார்கள். உயிர்களை, உடைமைகளை இழந்தார்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதுதான் ஒரு ஜனநாயக அரசுக்கு அழகு. இந்த வடக்கு மக்களைப் பற்றி மாத்திரமன்றி அப்போது இதுபோல் தெற்கில் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றியும் பேசினோம். தெற்கில் இளைஞர்கள் கொல்லப்பட்டதற்கு எதிராகக் குரல் கொடுத்தோம். மகிந்த கூடத் தெற்கு மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார். இப்போது மறந்துவிட்டார். தெற்கோ வடக்கோ எல்லோரும் இந்த நாட்டு மக்கள். அவர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். அதைத்தான் நாம் செய்ய முற்படுகின்றோம். வடக்கு மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல் என்ற பெயரில் நாம் வேறு யாரையும் பலிகொடுக்க முற்படவில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வடக்கில் உள்ள சில இனவாதத் தரப்பினர் மனித உரிமை மீறல் விசாரணையில் எப்படியாவது பன்னாட்டுத் தலையீட்டை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றனர். நாம் பன்னாட்டுத் தலையீட்டுக்கான தேவையை ஏற்படுத்தாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த அரசுமீது நம்பிக்கை இன்றிக் காணப்படும் வடக்குகிழக்குத் தமிழர்களின் நம்பிக்கையை இதன்மூலம் வென்றெடுப்போம். அனைத்து தமிழருக்கும் நீதி கிடைக்கும் - என்றார். (து-3)

### தந்தை...

அடுத்த நினைவு தினத்தை, பண்டாரநாயக்க பன்னாட்டு ஞாபகார்த்த மண்டபத்தில் அனைத்துச் சமூகத்தினரும் இணைந்து கடைப்பிடிக்க வேண்டும்"

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

"இந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் பொருத்தமான கூட்டாட்சி முறையை முன்வைத்தது தந்தை செல்வாவே. அவரைத் தமிழ் மக்கள் மாத்திரம் கொண்டாட வேண்டியதில்லை. நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இணைந்து கொண்டாட வேண்டும்" என்று தந்தை செல்வாவின் நினைவுப்பேருரையில் அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

# சட்டத்தை மீறிய 21 பேரிடம் ரூபா 125,500 தண்டம் அறவீடு

தென்மராட்சி, ஏப். 27
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய 19 பேருக்கும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களை வைத்திருந்த 2 குடியிருப்பாளர்களுக்குமாக 1லட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபா தண்டம் சாவகச்சேரி நீதிவான் மன்றால் நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டது.

ஏப்ரல் மாத முற்பகுதியில் பருவகால விடுமுறைக்குப் பின்னர் கடந்த 24ஆம் திகதி நீதிமன்றச் செயற்பாடுகள் ஆரம்பமாகின. பருவகால விடுமுறை தினங்களில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய வாகனச் சாரதிகள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் நேற்றுமுன்தினம் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் டெங்கு நுளம்பு உருவாகக்கூடிய நிலையில் குடியிருப்புகளை வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சாவகச்சேரி பொலிஸார் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். நீதிமன்றச் செயற்பாடுகளில் ஏற்கனவே அழைக்கப்பட்ட வழக்குகளுடன் 21 புதிய வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுடன் தாக்கல் செய்யப்பட்ட 19 பேருக்கு ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 500 ரூபாவும் நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புக்களை வைத்திருந்த இருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபாவுமாக ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபா தண்டம் சாவகச்சேரி நீதிவான் மன்றால் விதிக்கப்பட்டது. (வ-9)

# முருகுப்பிள்ளை சுவாமிகளின் அவதார தின விழா

யாழ்ப்பாணம், ஏப்.27
ஸ்ரீலஸ்ரீ மௌன குரு முருகுப் பிள்ளை ஸ்ரீ கடவுள் சுவாமிகளின் 111ஆவது அவதார தின விழா நாளை வெள்ளிக்கிழமை தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய முன்றிலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

செல்வச் சந்நிதி கோயிலில் காலை 8 மணிக்கு அன்னத்தால் செய்யும் திருமஞ்சனம் விசகரத்தினம் ஐயா இல்லத்தில் காலை 10 மணிக்கு கடவுள் சுவாமிகளின் அவதார ஆத்மீக சொற்பொழிவுகளும், சந்நிதியார் ஆச்சிரமத்தில் மதியம் ஒரு மணிக்கு அன்னதானமும் இடம்பெறும் - என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# வடக்கு ஆயுர்வேத வைத்தியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 27
வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தியாவிலிருந்து வருகைதரும் வளவாளர்கள் மூலமாக மருத்துவ ஏடுகளை வாசிப்பது தொடர்பான 6 நாள்கள் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்பும் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் தங்களது விண்ணப்பங்களை சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பிரதி மாகாண ஆணையாளர் ப.சுரேசன் கேட்டுள்ளார். (வ)









# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## தவசி செல்லமுத்து

அன்னை மடியில் 24.06.1939 — ஆண்டவன் மடியில் 07.05.2016

திதி: பிரதமை (27.04.2017

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்

அவர்களின் முதலாம் ஆண்டு சிராத்த தின நிகழ்வு இன்று (27.04.2017) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம், அளவெட்டி.

குடும்பத்தினர், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 10ஆம் ஆண்டு நினைவு

## திருமதி மாணிக்கம் புனிதவதி (செல்வம்)

தோற்றம்: 23.01.1949 — மறைவு :18.04.2007


திதி: பிரதமை (27.04.2017)

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும்– எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்
பாசதீபம் – உங்கள் நினைவுகள்
என்றும் அழியாது கண்ணின் இமைபோல
எமைக் காத்த அம்மா
உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும்

320/2, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.



# விழிநீர் சொரிகின்றோம்



யா/பன்னாலை சேர் கனகசபை
வித்தியாசாலையின்
ஓய்வுபெற்ற அதிபர் கதிர்காமத்தம்பி
அவர்களின் அன்பு மனைவி

## கதிர்காமத்தம்பி வரதலட்சுமி

அவர்கள் 26.04.2017 காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அம்பலவாணர் குடும்பம்
பன்னாலை
T.P: 0775713328

(CS3541)(10)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## கனகரத்தினம் சுதாகர்

திதி: சித்திரைமாதம் பூர்வபட்ச பிரதமை

பிறப்பு 1971.08.20 — இறப்பு 2016.05.07

ஆண்டு ஒன்று ஆனதுவோ ஐயா
நீங்கள் இறைவனடி சேர்ந்து
மீண்டும் ஒரு முறை வரமாட்டீரோ?
என்று ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் இதயங்களில் ஏற்றி வைத்த
அன்பு என்னும் தீபம் காலம் காலமாய் கண்ணீரில்
சுடர் விட்டுக் கொண்டேயிருக்கும்
உருவம் தான் எங்களை விட்டு பிரிந்ததே தவிர
உள்ளத்தில் என்றும் வைத்து பூசிக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அரசடி அம்மன்கோயில் பின்வீதி,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன்
அம்மா, மனைவி,
சகோதரர்கள், மருமகன்

# மரண அறிவித்தல்

## திருமதி வரதலட்சுமி கதிர்காமத்தம்பி



பிறப்பு 26.04.1922 — இறப்பு 26.04.2017

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலட்சுமி கதிர்காமத்தம்பி 26.04.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-விசாலாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் Dr.துரைசிங்கம், விசாகப்பெருமாள், அம்பிகாதேவி, சரோஜாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் பூமணி, நளினா, Dr.சிவஞானசூரியர், ஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், பொன்னுத்துரை, அன்னலட்சுமி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, வைரகப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் நாதினி, பாமினி, சௌமியா, பிரசன்னரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரவீனா, அரண், அனித்தா, அனிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிஅஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (27.04.2017) வியாழக் கிழமை காலை 08.00 மணிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பி.ப. 02.00 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 4.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

A/1/6, வேலுவனராம தொடர்மாடி,
வெள்ளவத்தை.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் (வேவி) 077 760 0990 மகள் (சறோ) 077 160 7652

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 23 . 09 . 1958



இறப்பு 28 . 03 . 2017

## கனகரட்ணம் பவானந்தன்

( முன்னாள் உரிமையாளர் - S.K. கனகரட்ணம் & Son's)

யாழ்.காரைநகர், நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வைரவப் புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் பவானந்தன் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

எங்கள் அன்பு குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்கரக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் துயரத்தைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவை முன்னிட்டு இன்று (27.04.2017) வியாழக்கிழமை வவுனியா குருமன்காடு, காளிகோயில் மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

(ava/cs/3536)

குடும்பத்தினர்.

" ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

# நினைவலைகள்

ஐந்தாம் ஆண்டு — முதலாம் ஆண்டு

மலர்வு 25.05.1940 — உதிர்வு 27.03.2012





மலர்வு 05.04.1946 — உதிர்வு 07.05.2016

அமரர் கந்தையா சச்சிதானந்தன் — திருமதி புஸ்பராணி சச்சிதானந்தன்

திதி: பிரதமை 27.04.2017

எமது கண்கண்ட தெய்வங்களே !
ஆண்டுகள் சென்றாலும் ஆறவில்லை எம் மனம்
உங்கள் முகம் தேடித் தவிக்கின்றோம்
எமக்கு உயிர் தந்தீர், உடல் தந்தீர், மதி சொன்னீர், அரவணைப்பும் தந்தீர்
எம்மை உயர்ச்சி அடையவும் வைத்தீர்
எம் பாச தீபங்களே எம் உயிர் உள்ள வரை உங்களை மறவோம்
உங்கள் ஆன்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

366, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 6156

# வைரவப் பெருமான் வழிபாட்டுப் பலனை அளிக்க வல்ல "சித்திரைப் பரணி"

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

சகல உலகங்களையும், அதில் அமைந்துள்ள திருத்தலங்களையும், அங்கு அமைந்துள்ள தீர்த்தங்களையும் காவல் புரிபவர் சிறிவைரவர் ஆவார். அவர் சோத்திரங்களைக் காவல் புரிவதால் 'சோத்ர பாலகன்' என்றும், கடல் முதலான பெரிய தண்ணீர்ப் பகுதிகள் பொங்கி பூமியை அழித்துவிடாமல் கட்டுக்குள் வைத்திருப்பதால் 'தீர்த்த பாலகன்' என்றும் பலநூறு பெயர்களில் அழைக்கப்படுகின்றார். உலகையும், உயிர்களையும் காக்கும் தன்மை சிவபெருமானுக்கே உரியது என்பதால் அவருடைய ஒரு கூறே வைரவ மூர்த்தியாக எழுந்தருளி வந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றது. அது அவரைப் போலவே சந்திரப் பிறை அணிந்து, முத்தலைச் சூலம் ஏந்தி நிற்கின்றது. அவர் உயிர்களுக்குத் துன்பம் செய்யும் பகைவர்களுக்குப் பயங்கரமானவராக இருப்பதால் பைரவர் என்றும், வச்சிரக் கோட்டைபோல் விளங்கி தன்னை அண்டிய பக்தர்களைக் காப்பதால் வைரவர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

வைரவர் ஞானிகளிடம் அறிவுச் சோதியை விளக்கும் ஞான வைரவராகவும், யோகிகளுக்குக் காவலாக இருப்பதுடன் தாமே பெரிய யோகியாகவும் விளங்கி யோக வைரவராகவும், மகா வீரர்களிடம் உக்ர வைரவராகவும், நீர் , தீ, ஆகாயம், நிலம், காற்று முதலியவற்றால் உண்டாகும் சீற்றங்களில் இருந்து காக்கும் பூதவைரவராகவும் இன்னும் அனேக வடிவங்கள் தாங்கி அன்பர்களுக்கு அருள் புரிகின்றார். இவருடைய பெருமைகள் எல்லையற்றதாகும்.

**காக்கும் தெய்வம் வைரவர்**

பல மூர்த்தங்களாக வைரவர்கள் சிவனருளால் தோன்றி உல கத்தைக் காத்து வந்தாலும் உலகில் துன்பங்கள் அளவு கடந்து விடும்போது சிவபெருமானே வைரவனாகி மண்மேல் வந்து உயிர்களின துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெருக வைத்த நிகழ்ச்சிகளையும் புராணங்கள் தனிச் சிறப்புடன் குறிக்கின்றன.

வைரவர் உக்கிரமான தேவராக இருந்தாலும் பெருங்கருணை மிக்கவர், அன்பர்களுக்கு அளவற்ற செல்வங்களையும் இன்பங்களையும் அளிப்பவர். இதனால் அனைத்து சமயங்களும் வைரவரைத் தனிச் சிறப்புடன் போற்றுகின்றன. வைரவ வழிபாடு சிவாலயங்களில் ஓர் அங்கமாக உள்ளது. வேத வழிப்பட்ட சாக்த, கௌமார, சௌர சமயங்களும், ஜைமை, பௌத்தம் முதலான பிற மதங்களும் வைரவரைத் தனிச் சிறப்புடன் போற்றுகின்றன. வைரவர் மந்திர தந்திரங்களின் நாயகர், பூத, வேதாள, பிரதே, பிசாசுக் கூட்டங்களை அடக்கி அதன் தலைவராக இருப்பவர். அதனால் உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களை நீக்குபவர்.

**வைரவர் தோற்றம்**


சிவபெருமான் வலிமைமிக்க ஞான மூர்த்தியாக சிறி வைரவமூர்த்தியை தோற்றுவித்து அவரிடம் உலகைக் காக்கும் பொறுப்பை அளித்தார். அவர் உயிர்களுக்கும் அவர்களின் உடைமைகளுக்கும் பாதுகாவலராக இருப்பதுடன் அஷ்டமூர்த்தங்களில் நின்று அவற்றையும் காத்து வருகின்றார். அசுரர்கள் தொல்லையால் இந்த உலகம் துன்புற்ற பொழுதெல்லாம், சிவபெருமான தனது அம்சமாகப் பைரவரைத் தோற்றுவித்து அசுரர்களை வென்று இன்பம் பெருகச் செய்கிறார் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன.

**பிரம்மனுடைய தலைகொய்தவர்**

மும்மூர்த்திகளில் ஒருவனான பிரம்மன் அகந்தையால் அறிவு மங்கிச் சிவநிந்தனை செய்தபோது சிவபெருமான், வைரவரைத் தோற்றுவித்தவராவார். வைரவர் பிரம்ம தேவனின் ஐந்தாவது தலையை கிள்ளியெடுத்துக் கபாலமாக்கிக் கொண்டார். அவனுக்கு அச்சமூட்டி அறிவை விளக்கம் பெற வைத்தார்.

**முத்தொழில்கள்**

"ஆனந்த வைரவக் கோலத்தில் படைப்பும், காலவைரவக் கோலத்தில் காப்பும் காலாக்கினி வைரவக் கோலத்தில் ஒடுக்கலும் செய்வதாக வைரவாகமம் கூறுகின்றது. "விரித்த பல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை, தரித்தோர் கோல கால பயிரவனாகி வேழம், உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணி வாய் விள்ளச், சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே எனத் திருநாவுக்கரசர் காலவைரவர் கோலத்தை விவரிப்பார். இவ்வாறு உலகின் முத்தொழில் நாகராய் விளங்குவதால் "அண்டத் துள்ளது பிண்டத்தில் என்ற முதுமொழியின்படி ஆன்மாக்களின் (உடலாம) தலத்தின் காப்புத் தலைவர் எனப்பொருள் தரும் "சேத்திபாலர் என்ற சிறப்புக் குரியவராக சைவம் போற்றுகின்றது.



*கட்டுரையாளர்:*
*பணிப்பாளர். சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை.*


## நாய்க்குட்டி விற்பனைக்கு

லியோர் செப்பட்
2 வயது
076 835 4634

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள இயந்திரம் மூலம் கல் அரிபவர்கள், அச்சு மூலம் கல் அரிபவர்கள் மற்றும் கம்பி கட்டுபவர்கள் உடனடியாக யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு தேவை.

EIM
கோப்பாய் மத்தி, கோப்பாய்
077 312 6616

## வேலையாள்கள் தேவை

* சமையல் உதவியாளர்
* உணவு பரிமாறுபவர்
* றொட்டி (றைஸ்) போட தெரிந்தவர்கள்.
* கணக்கெழுத தெரிந்தவர்கள். (நிர்வாகம் செய்யக்கூடியவர்கள்)

Rolex Hotel
340, Hospital Road, Jaffna.
077 907 9888

## காணி தேவை

தெல்லிப்பழை சந்திக்கும் மல்லாகத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 150 மீற்றரிற்குள் வீடு கட்டக் கூடிய 3 - 6 பரப்புக் காணி தேவை.

தொடர்பு: mpiraveenan@yahoo.com
அல்லது 077 960 6133

## விற்பனைக்கு

U.K இல் இருந்து கொண்டுவரப்பட்ட பாவித்த மற்றும் புதிய குஞ்சு பொரிக்கும் இயந்திரம், கமராக்கள்(Handycam), CD Players, Jigsaw, பலகைகீறும் இயந்திரம்Driller, மெக்கானிக் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

076 615 1837

## ஓம் ஸ்ரீ துர்க்கா ஜோதிடம்



பண்டித் ராமராயூ
077 835 7307, 077 839 5119

காதல், கணவன், மனைவி, பிள்ளைகள் பிரச்சினை, பொலீஸ் முறைப்பாடுகள், வசீகரம், உத்தியோகப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினைகள், குழந்தைகள் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம், பில்லி சூனியம் போன்ற பல பிரச்சினைகளைத்தீர்த்து வைப்பார்.

25 நாள்களுக்குள் முடிவு கிடைக்கும்

எந்த மதமும் வரலாம் நேரம்:- 8.00am-6.00pm

இல: 129, மேல்மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(மாநகரசபை கட்டடம் முன்பாக மாங்கல்யா கடை அருகில்)


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

## விலைமனுக் கேள்விக்கான அழைப்பு
## கட்டட நிர்மாண வேலைகளுக்கான பெறுகைகள்

**பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து கீழ்வரும் கட்டட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.**

| Tender No | Work Item | ICTAD Registration Required | Non Refundable Tender Fee | Bid Security | Basic Cost Estimate (Millions) |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/2017/01 | Renovation of Buildings at Antimalariya Compaign Jaffna Division | C 9 or above (Building) | 500.00 | 10,000.00 | 0.690Mn |
| NP/RDHS/2017/02 | Improvement of Mortuary at Divisional Hospital Kopay | C 9 or above (Building) | 500.00 | 5,000.00 | 0.300Mn |
| NP/RDHS/2017/03 | Improvement of Kitchen at Divisional Hospital Kopay | C 9 or above (Building) | 500.00 | 5,000.00 | 0.400Mn |
| NP/RDHS/2017/04 | Improvement of Buildings at MOH Chavakacheery | C 9 or above (Building) | 500.00 | 10,000.00 | 1.0Mn |

* ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்க முடியாத கேள்வி பத்திர பணம் ரூபா 500/=

1. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2222278/4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையைக் காசாகச் செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 28.04.2017 தொடக்கம் 15.05.2017வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் 16.05.2017 திகதி 10.00 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்வி ஆவணங்கள் உடனடியாக திறக்கப்படும். இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்

**வைத்தியகலாநிதி. க.நந்தகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

THE HALO TRUST

## கண்ணிவெடியகற்றுநர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 16 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடி அகற்றலானது துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதாகும். எனவே இதனைக் கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிப்பு : எமதுமுன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர்.**

**மேற்குறிப்பிட்ட பதவி நிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 02ஆம் திகதி வைகாசி மாதம் 2017 அன்று செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத்-தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.**

**ஹேலோ ரஸ்ட்,**
**450,திருநகர் மேற்கு,கிளிநொச்சி.**

# தந்தை செல்வா நினைவு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், ஏப் 27

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வாவின் நினைவிடத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலையை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அணிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரதிநிதிகள் எனப் பலரும் மாலை அணிவித்தனர். தந்தை செல்வாவின் சமாதியில் மலர் தூவி வணங்கினார்கள். நினைவுப் பேருரைகளும் நடைபெற்றன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண கலந்துகொண்டார். இந்த நினைவுப் பேருரை நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், சிவமோகன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, பா.கஜதீபன், சு.சுகிர்தன், ஆனோல்ட், எம்.கே.சிவாஜிலிங்கம் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற- 8)



தந்தை செல்வாவின் 40ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் வவுனியாவில் நேற்று நடைபெற்றன. பிரதான மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் நிகழ்வு கள் நடைபெற்றன. வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோதரலிங்கம், வர்த்தகர் சங்கத் தலைவர் ரி. கே. இராஜலிங்கம், தமி ழரசுக்கட்சி வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர். (ற–21)

## தமிழர்அனுபவித்ததுன்பங்கள் தொடரும்நிலையேதற்போதும்

### வடக்குசுகாதார அமைச்சர்தெரிவிப்பு

போர் முடிந்து 8 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆட்சி மாற்றம் நடந்து 2 ஆண்டுகள் கடந்துள்ளன. தமிழ்மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் தொடரும் நிலையே தற்போதும்உள்ளதுஎனவட மாகாணசுகாதாரஅமைச்சர் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பெற்றோர்கள் , நண்பர்கள் அவர்களைத் தேடி அலைகின்றனர். அவர்கள்தங்களுடைய பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு வேண்டி காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதுதெரியாதுவீதியில்மாதக்கணக்காகப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின்போராட்டத்துக்குத்தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஒத்துழைப்பு வழங்குகின்றன. கடந்த ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட சட்டமூலம் கூட இன்று வரை கிடப்பிலே கிடப்பதாகவே நாம் உணர்கின்றோம். நில அபகரிப்புத் தொடர்பாகவும் மக்கள்போராட்டம்நடத்துகின்றனர். நிரந்தரமான சமாதானத்தைநோக்கிநாம்நகர்வதாக இருந்தால் எமக்கு நிரந்தர அரசியல் தீர்வு தேவை. இந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் மக்கள் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தஅரசமைப்புத்திருத்தம் தொடர்பான மேலதிக நடவடிக்கைளும் தடைப்பட்டுள்ளன தந்தை செல்வாவின் 40 ஆண்டு நினைவு தினத்திலே தமிழ் பேசுகின்ற மக்கள் எல்லோருக்கும் நிரந்தரமானஅமைதியும்சமாதானமும் வேண்டி நாங்கள் பிரார்த்திக்கின்றோம். அரசுக்கும், சர்வதேசத்துக்கும் அழுத்தத்தைக்கொடுப்பதன் ஊடாக எமது இலக்கை அடைய அனைவரும் ஒன்றுமையாகச் செயற்பட வேண்டும்-என்றார்.(ற–21)

## இருட்டில் உள்ள மக்களை வெளிச்சத்துக்கு கொண்டுவரும் பொறுப்பு இளம் சந்ததிக்கே

### சட்டத்தரணி சா.செ.சந்திரகாசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

இருட்டில் உள்ள மக்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் பொறுப்பு எமது இளம் சந்ததியினரையேசாரும். இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணி சா.செ. சந்திரகாசன் தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளிலேவெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எழுத்தறிவை நாம் மறக்கக் கூடாது என்பதற்காக பாடசாலை ஆரம்பிக்கும் போது தந்தை செல்வாவின் உருவம் பொறிக்கப்பட்ட கையேடுகளை வழங்கி வருகின்றோம். எமக்குக் கிடைத்த அறிவை நாமே வைத்திருப்பதில் எந்தப்பயனும்இல்லை.அதனை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும்- என்றார்.

நிகழ்வின் சிறப்புவிருந்தினராக கலந்து கொண்ட மூத்த பேராசிரியர்சி.க.சிற்றம்பலம் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது

அந்தக் காலத்திலேயே எமது தந்தை செல்வா மக்களுக்கு எப்படியான அரசியல், தலைமைவேண்டும்என்று நன்றாகத்தெரிந்துபணியாற்றியவர்.

சலுகை அரசியல் என்பது எமதுஇனத்தையேகொன்றுவிடும். உரிமை அரசியலே மக்களை வாழ வைக்கும் என்ற கோட்பாட்டில் தந்தை செல்வா வாழ்ந்தார்-என்றார்.

நிகழ்வில் தந்தை செல்வாவின் திருவுருவப்படத்திற்கு மாலைஅணிவிக்கப்பட்டது. மாணவர்களுக்குப் பரிசில்கள்வழங்கப்பட்டன. (ற-ரி)

## யாழ்ப்பாண ப.நோ.கூ. சங்கத்தின் ஊழியர் தொழிற்சங்கம் புத்துயிர்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் தொழிற் சங்கம் கடந்த 25 வருடங்களுக்குபின்னர் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை பணியாளர்கள் சகலரும் ஒன்றுகூடி ஊழியர் தொழிற்சங்கத்தின் செயற்பாடுகளை மீளவும் ஆரம்பித்து வைத்தனர். ஆரம்ப நிகழ்வில் சங்கத்தின் உப தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தொழிற்சங்கத்தின் நிர்வாகத் தெரிவில் போட்டிகள் இன்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ச.சதீஸ்குமார் தலைவராகவும், இ.வதனவாசன் செயலாளராகவும், அ.அன்ரனி சில்வா பொருளாளராகவும், செ.ரொமியூலஸ் உப தலைவராகவும், ப.வ. பிரியந்தன் உப செயலாளராகவும், தெரிவாகினர்.

மற்றும் கி.திறிகரன், பா.நந்தகுமார், வி.அலெக்ஸ், திருமதி.இ.கு.புஸ்பராசா, திருமதி கு.குகமதி, ஈ.ஜனகன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

“மே தினமான தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சங்கப் பணியாளர்கள் ஒன்றுசேர்ந்து மீளச்செயற்பட ஆரம்பித்திருக்கும் இந்த தொழிற்சங்கம் வெகுசிறப்பாகச் செயற்பட வேண்டும். பணியாளர்களுக்கு இப்படிப்பட்ட அமைப்பு தற்போதைய காலத்தின் தேவைக்கு மிகவும் முக்கியமானது. தற்போதைய அமைதிச் சூழலில் தொழிலாளர்களுக்கு இருக்கும் சம உரிமைகள் அனைத்தும் மதிக்கப்பட வேண்டும்" என்று நிகழ்வில் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்ட சங்கத்தின் உபதலைவர் என்.எஸ்சத்தியதாசன் தெரிவித்தார். (வ-17)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, ஏப். 27

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் மன்றத்தின் நிதியத்தின் மூலம் 5 முஸ்லிம் மாணவர்கள் உட்பட 150க்கு மேற்பட்ட மாண வர்களுக்கு கல்வி உதவுதொகை வழங்கல் நிகழ்வும் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என்று மன்றச் செயலாளர் வை.சிவராசா அறிவித்தார்.

மன்றத்தலைவர் ந.சிவபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தே.பாபுவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்வர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

மன்ற உறுப்பினர் மர்ஹூம் எம்.எச்.எம்.மக்றூப்பின் நினைவாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிதி ஐந்து முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. மன்றத்தின் கல்வி அபிவிருத்தி நிதியம் மூலம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களில் 100 பேருக்கு வருடாந்தக் கல்வி அபிவிருத்தி நிதியும் 56 மாணவர்களுக்கு மன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் மாதாந்தக் கல்வி நிதியும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்களால் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டதையடுத்து கடந்த காலங்களில் மாணவர்களுக்கு 750 ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்த மாதாந்த கல்வி நிதி ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்ற விதவை நிதியம் மற்றும் சிறப்புத் தேவையுடையோருக்கான நிதியம் போன்றவற்றிலிருந்து மூவருக்கு உபகார நிதி வழங்கப்படவுள்ளது. மன்ற அங்கத்துவத்தில் 25 வருடத்தை நிறைவு செய்தவர்கள் 5 பேர் கௌரவிக்கப்படுவதுடன் மன்றச் சேமிப்பு நிதியத்தில் கடந்த வருடம் அதிக அளவு சேமிப்பு நிதியை வழங்கிய உறுப்பினர்களும் கௌரவிக்கப்படுவர்என்றார். (வ-9)

ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.11.1947
மறைவு 14.05.2010

அமரர்
சங்கரப்பிள்ளை கந்தசாமி
(முன்னாள் முகாமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையம் கைதடி சந்தி)
திதி:பிரதமை (27.04.2017)

அன்போடு அரவணைத்து
பண்போடு எம்மை வளர்த்த எங்கள் அப்பாவே
பாதியிலே எம்மை பரிதவிக்கவிட்டு
பறந்து சென்றது எங்கே அப்பா
வாழ வழி செய்த எங்கள் அன்பு தெய்வமே
ஏழாண்டு சென்றாலும் உங்களை மறவோம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அப்பா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வன எல்லைக் கற்கள் நடும்போது ஆலோசனைகளைப் பெறுங்கள்

### திணைக்களத்திடம் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஏப்.27

நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட காடுகளை எல்லைப்படுத்துவதற்கு வனவளத் திணைக்களத்தினர் எல்லைக் கற்களை நடும்போதும் பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், கிராம அமைப்புகளின் ஆலோசனைக்குஅமையவே அவற்றை நடவேண்டும்.

இவ்வாறு நெடுங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நெடுங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதன் இணைத்தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், வடக்கு முதமைச்சரின் பிரதிநிதியாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வனவளத் திணைக்களத்தினரால் கடந்த காலங்களில் எல்லைக் கற்கள் நடப்பட்டபோது அவை பொதுமக்களின் காணிகளுக்குள்ளும் நடப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுவது என்று கடந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. நெடுங்கேணியில் உள்ள அரச திணைக்களங்கள் கூட வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகளால் காணிகளை இழந்துள்ளன. அரச தலைவருக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் வனவளத்திணைக்களத்தினரின் செயற்பாடுகள் உள்ளன என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

"நாமும் அரச தலைவரின் பணிப்புகளை நடைமுறைப்படுத்துகின்றோம். தன்னிச்சையாகச் செயற்படவில்லை. வனவளத்திணைக்களத்துக்கென வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட காணிகளையே எல்லைப்படுத்துகின்றோம். கடந்த ஆட்சியில் நடைபெற்ற சில தவறுகளுக்கு நாம் பொறுப்பாக முடியாது." என்று கூட்டத்தில் கலந்து கொண்ட வனவளத் திணைக்களத்தின் அதிகாரி குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக இணைத் தலைவர்கள் ஆராய்ந்தனர்.

"இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதை இன்னமும் வளவளத் திணைக்களத்தினர் நடைமுறைப்படுத்தவில்லை. காடுகளுக்கு எல்லைக் கற்கள் நடும்போது பிரதேச செயலர், கிராம அலுவலர், கிராம அமைப்புகளின் ஆலோசனைக்கு அமையவே அவற்றை நடவேண்டும்." என்று அவர்கள் தீர்மானம் எடுத்தனர்.

இந்த விடயத்தைக் கருத்தில் எடுத்துச் செயற்படுகின்றோம் என்று வனவளத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ற-7)

## மக்களுக்குச் சேவையாற்றவே அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்

### *காதர் மஸ்தான் எம்.பி. சுட்டிக்காட்டு*

வவுனியா, ஏப்.27

அரச அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே பணியில் அமர்த்தப்பட்டவர்கள்என்பதைஉணர்ந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நெடுங்கேணிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான புரிந்துணர்வுகள் பிரதேசத்தினுடைய அபிவிருத்திக்கு முக்கியமானதாகும்.

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட நெடுங்கேணி பிரதேசத்தை அரச அதிகாரிகளினதும் மக்களினதும் ஒருமைப்பாட்டுடன் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கின்றது. அதிகாரிகள் அரசியல்வாதிகளின் இலாபத்துக்காகவோ அல்லது தங்களது சுய லாபத்துக்காகவோ நம்மை நம்பியுள்ள அப்பாவி மக்களை துன்பப்படுத்தாமல் அவர்களுக்கான சேவைகளை உரிய முறையில் வழங்க வேண்டும். என்றார். (ற-21)



# கழிவுகளின் காட்சித் தீவாக மாறிவருகிறது காக்கைதீவு

### வீதியோரம் எங்கும் விலங்கு எலும்பு எச்சங்கள் பெரும் அசௌகரியத்துடன் பயணிக்கும் அவலம்

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்ப்பாணம், கல்லுண்டாய் வீதியோரத்தில் பெருந்தொகையான விலங்கு எலும்பு எச்சங்கள் கொட்டப்பட்டுள்ளன. வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களையும், சுகாதாரச் சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் முன்னரும் சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிலையில் யாழ். மாநகர சபை தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தது. ஆயினும் தற்போதும் தொடர்ச்சியாக விலங்கு எச்சங்கள் கொட்டப்பட்டு வருகின்றன. முன்னரை விட தற்போது அதிகளவில் அவை கொட்டப்படுகின்றன என்று பிரதேச மக்கள் கூறு கின்றனர்.

யாழ். மாநகர சபையால் சேகரிக்கப்படும் கழிவுகள் காக்கைதீவில் ஓரிடத்தில் சேகரிக்கப்படுகின்றன. அதைச் சாக்காக வைத்து ஓட்டுமடம்சந்தியில் இருந்து காரைநகர் செல்லும் வீதியின். இரு மருங்கிலும் வெளியாள்களால் கொண்டுவரப்படும் கழிவுகள் கொட்டப்படுகின்றன. வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படும் கழிவுகளை ஆள்களற்ற நேரத்தில் அவர்கள் வீதியோரங்களில் கொட்டிச் செல்கின்றனர். விலங்கு எச்சங்களே இவ்வாறு அதிகம் கொட்டப்படுகின்றன.

இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் எலும்புகள், தலையோடுகள் வீதியோரங்களில் சிதறிக் கிடக்கின்றன. அவற்றைக் கட்டாக்காலிநாய்களும், காகங்களும் இழுந்து வந்து வீதிகளில் போடுகின்றன. அவற்றால் விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பங்களும்உள்ளன. அந்தப் பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது. வீதியில் பயணிப்போர் மூக்கைப் பொத்தியவாறு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நிலைமை பல மாதங்களாகத் தொடர்கின்றபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

மக்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினை தொடர்பாக "உதயன்" பத்திரிகை கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி சுட்டிக்காட்டியது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன், "யாழ். நகரப் பகுதிகளில் கழிவுகளைக் கொட்டுவதைத் தடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. காக்கைதீவில் கழிவுகளைக் கொட்டுவோரை ஆதாரத்துடன் இனங்காண்பதற்காக காவலாளிகள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்."என்று கூறியிருந்தார். தற்போதும் அந்தப் பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்றுபிரதேசமக்கள் கூறுகின்றனர்.

"காக்கைதீவில் நிகழ்வொன்றில்கலந்துகொண்ட வடக்கு முதலமைச்சர் காக்கைதீவு விரைவில் காட்சித் தீவாக மாறும் என்றார். ஆனால் இங்கு நடப்பவையோ அதற்கு மாறாக உள்ளன. அந்த வீதியால் பயணிக்கும்போது பெரும் சகிப்புத் தன்மையுடனே பயணிக்கவேண்டியுள்ளது. விலங்கு எச்சங்கள் எங்கும் சிதறிக் கிடக்கின்றன. காகங்கள் அவற்றை எம்மீதும் போடுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெறுமனே அறிக்கைகளை விடாது காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும்." என்று மக்கள் தெரிவித்தனர். (ற-21)



மூன்று மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலை.

## பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்கு பொது அமைப்புக்களின் வரவு அவசியம்

### *இணைத் தலைவர்கள் தீர்மானம்*

முல்லைத்தீவு, ஏப்.27

வவுனியா வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு இனிவரும் காலங்களில் கிராமங்களில் இருந்து இரு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எவரும் அழைக்கப்படவில்லை.

"மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பொதுமக்கள் கலந்து கொள்வது இயலாத காரியம். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொண்டுதங்கள் பிரச்சினைகளை எமக்குத் தெரியப்படுத்தும் போது தான் எம்மாலும் இறுக்கமான தீர்மானங்களை எடுக்க முடியும். இந்தக் கூட்டத்துக்கு அவர்களுக்கும் அழைப்புவிடுக்கப்பட வில்லை.

எதிர்வரும் காலங்களில் நடைபெறும் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கிராமங்களில் இருந்து இரு பிரதிநிதிகள் கலந்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும்" என்று பிரதேச இணைத்தலைவர்களில் ஒருவரான வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தீர்மானமாக முன்மொழிந்தார்.

(ஐ-7)

# நெடுங்கேணிப் பகுதிக்கு போதிய வீடுகள் ஒதுக்கப்படுவதில்லை

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஏப்.26
நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு போதிய வீடுகளைத் தாருங்கள். பொது மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாதுள்ளது என்று நெடுங்கேணி பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்தார்.
நெடுங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே பிரதேச செயலர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.
"நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு ஆயிரத்து 617 வீடுகள் தேவையாகவுள்ளன. ஆனால் 120 வீடுகளுக்கே அனுமதி கிடைத்துள்ளது. தேவை அதிகமாக உள்ள நிலையில் சிறிய அளவு தொகையான வீடுகளே கிடைக்கின்றன. அவற்றைப் பகிர்ந்து வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வீடுகள் கிடைக்காத மக்கள் கிராம அலுவர்கள் மீது குற்றஞ் சாட்டும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தேவையற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. போதிய வீடுகள் ஒதுக்கப்படும் போது இந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்" - என்று பிரதேச செயலர் சுட்டிக்காட்டினார்.
"வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும்போது உரிய புள்ளித் திட்டத்தை வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுத்திப் பயனாளிகளைத் தெரிவு செய்தால் ஏன் இந்தப் பிரச்சினை உருவாகும்?" என்று இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்மான் கேள்வி எழுப்பினார்.
"புள்ளித் திட்டங்கள் உரிய முறையிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனினும் அலுவலர்கள் மீது குற்றஞ் சுமத்தப்படுகின்றது. பிரதேச செயலகத்துடன் மக்கள் முரண்படும் நிலை ஏற்பட்டுள்ளது" - என்று பிரதேச செயலர் குறிப்பிட்டார்.
"அரச உத்தியோகத்தர்கள் பலரும் இறுதிப் போரில் இழப்புகளைச் சந்தித்துள்ளனர். வழங்கப்படும் வீட்டுத் திட்டங்களில் 10 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்." என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டினார். நெடுங்கேணி பிரதேச செயலர் குறிப்பிட்ட விடயங்களை இணைத் தலைவர்கள் ஆராய்தனர்.
"வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படவுள்ள வீடுகள் கல்வீடா, பொருத்து வீடா என்பது இன்னமும் முடிவாகவில்லை. வவுனியா மாவட்டத்தில் போரால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு நெடுங்கேணி. ஒதுக்கப்படும் வீடுகளில் அதிகமானற்றை நெடுங்கேணிப் பிரதேச செயலக பிரிவுக்கு ஒதுக்கவேண்டும்"-என்று இணைத் தலைவர்கள் தெரிவித்தனர். (ந-7)

## தராதரங்களை மறந்து பொலிஸார் ஒற்றுமையுடன் சேவையாற்றவேண்டும்

### வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஏப்.27
"பொலிஸ் சேவையில் இணைந்து சேவையாற்றுகின்ற பொலிஸார் தமது தராதரங்களை மறந்து ஒற்றுமையுடன் சேவையாற்ற வேண்டும்."
இவ்வாறு வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.
வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் தமிழ் சிங்களப் புது வருட நிகழ்வு வவுனியா பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை பொலிஸ்மா அதிபரின் வழிநடத்தலில் செயற்படும் பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற பொலிஸார், தமது தராதரங்களை மறந்து போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். இதனால் அவர்களிடையே தராதரவேறுபாடுகள் காணப்படாது. பொதுமக்களுக்கும் சிறந்த சேவையை வழங்க முடியும். இவ்வாறான ஒரு சேவையையே நானும் பொலிஸ்மா அதிபரும் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.
பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமான 15 கிலோ மீற்றர் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டியை வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோனும், மரதன் ஓட்டப்போட்டியை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமாரவும் ஆரம்பித்து வைத்தனர்.
நிகழ்வில் பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி, சட்டி உடைத்தல், யானைக்குக் கண் வைத்தல், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம்பெற்றன. இரவு பொலிஸாரின் இசை நிகழ்வும் இடம்பெற்றது. (ஜ)

## குடி தண்ணீர் பற்றாக்குறை என பல்கலை மாணவர்கள் போராட்டம்

வவுனியா, ஏப்.27
வவுனியா பல்கலைக்கழக வர்த்தகப் பிரிவு மற்றும் விஞ்ஞான பிரிவு மாணவர்கள் நேற்றுக் காலை முதல் விடுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீருக்கு பற்றாக்குறை நிலவுகின்றது என்று தெரிவித்து வகுப்புப் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.
பம்பைமடு பல்கலைக்கழக விடுதியில் 5தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து குறைந்தளவிலான குடி தண்ணீரையே பெற்றுக்கொள்ள முடிகின்றது. சில குடி நீர் வடிக்கட்டும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன. அவற்றிலிருந்து குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடிய வில்லை என்று மாணவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக வவுனியா பல்கலைக்கழக முதல்வர் ரி. மங்கலேஸ்வரன் குடி தண்ணீர்பற்றாக்குறைநிலவுகின்றதை ஏற்றுக்கொண்டார்.
" தற்போது பாவனையிலிருக்கும் இயந்திரத்தினூடாக தேவையான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். உடனடியாக பெருந்தொகைப்பணம் செலுத்தி மாணவர்கள் கேட்கும் அதிகவளான வீற்றர் பெற்றுக்கொள்ளும் சுத்திகரிக்கும் இயந்திரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாது. எம்மிடம் தற்போது நீர்வடிகட்டும் இயந்திரங்கள் ஐந்து மாணவர்கள் விடுதியில் பொருத்தப்பட்டுள்ளன. விடுதியில் 900 மாணவர்கள் உள்ளனர். தற்காலிக தீர்வாக முதலாம் திகதி முதல் விமானப்படையினரின் நடமாடும்சேவை மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்குவதற்கு தீர்மானிக்க ப்பட்டுள்ளது" - என்று அவர் தெரிவித்தார். (ந - 21)



வவுனியா நகரசபையின் நடமாடும் சேவை நேற்று பட்டாணிச்சூர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தாண்டிக்குளம், பட்டாணிச்சூர், பட்டகாடு பகுதிகளை உள்ளடக்கி நடமாடும் சேவை நடத்தப்பட்டது. 7ஆம் வட்டாரம், 11ஆம் வட்டாரம் போன்ற பகுதிகளில் ஆதனவரியாக நிலுவையாக உள்ள ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை அறவீடு செய்வதே இதன் பிரதான நோக்கமாக அமைந்தது. ஆதனவரி அறவீடுகளுக்கு நடுக்கட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு வீடுவீடாகச் சென்று அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ந – 21)

## டெங்கு நுளம்பு கட்டுப்பாடு: 16 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

முல்லைத்தீவு, ஏப்.27
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைக்காத 16 பேருக்கு எதிராக சுகாதாரப் பிரிவால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நுளம்புக் கட்டுப்பாடு வாரத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்புச் சுகாதார வைத்திய அதிகாரி எம்.கெங்காதீஸ்வரன் மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் பயனாக மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எம். நிர்மலாந்தன் தலைமையில் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோருடன் இணைந்து 15 குழுக்களாகப் பிரிந்து விஸ்வமடு, உடையார்கட்டு, வள்ளிபுனம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன.
அதன்போதே 16 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந - 115)

# இளையோரைப் பிழையான வழிக்குக் கொண்டுசெல்லச் சதி

## *சாந்தி சிறிஸ்கந்தராஜா எம்.பி. தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஏப்.27
போரின் பாதிப்பில் இருந்து மீண்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்காக வன்னி மக்கள் பல்வேறு நெருக்குவாரங்களை எதிர்கொள்கின்றனர். இந்த பாதிப்புகளைப் பயன் படுத்தி நன்கு திட்டமிட்டு இளையோரை பிழையான வழிகளுக்குக் கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளை இனவாதிகள் திரைமறைவில் செயல்படுத்துகின்றார்கள்
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.
தொழில்நுட்ப கலை கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை துணுக்காய் பிரதேச அறநெறி ஆசிரியர்களுக்கு கனடாவில் இருந்து வந்த வைத்திய கலாநிதி இலம்போதரனால் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்காந்தராசாவும் சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் பிரதேச செயலாளர், கலாச்சார உத்தியோகத்தர் மற்றும் சிவஸ்ரீ உருத்திரமூர்த்தி குருக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



அந்த நிகழ்வில் ஆற்றிய உரை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
இறுதிப் போரால் வன்னி மக்கள் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டனர். உயிரிழப்பு, பொருள் இழப்பு என அனைத்தையும் இழந்த மக்கள் அதில் இருந்து மீண்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.
அதைப் பயன்படுத்தி நன்கு திட்டமிட்டு இளையோரை பிழையான வழிகளுக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளை திரை மறைவில் இனவாதிகள் செயற்படுத்துகின்றார்கள். இளையோரை அப்பொறியில் இருந்து மீட்டெடுக்க வேண்டியதும் எமது கடமையே.
கனடா வாழ் உறவான மருத்துவர் இலம்போதரன் அவர்கள் இந்தப் பயிற்சி நெறி மூலம் மல்லாவி பிரதேச அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அப்பால் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களும் இளையோரின் ஒழுக்கம் தலைமை தாங்கும் பண்பு, விட்டுக்கொடுக் கும் மனப்பாங்கு, முதியோரை மதித்தல், சைவசமய ஆசார சீலர்களாக ஆக்குதல் ஆகிய விழுமியங்களுக்கு அப்பால் ஆன்மிக ரீதியாக அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார் - என்றுள்ளது. (ந-101)

# வடக்கில் இன்னும் போரின் காயங்கள் ஆறாத நிலையில்

*பிரிட்டன் தமிழர் பேரவை சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஏப். 27
வடக்கில் போர் முடிந்து 8 வருடங்கள் கடந்தும், மிலேச்சத்தனமான போரின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை. வீர சுதந்திரம் கோரிய தமிழர்கள் இன்று தங்களது நிலத்தைவிட்டு உலகெங்கும் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பிரிட்டன் தமிழர் பேரவை தெரிவித்தது.

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு தினம் தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர்களின் கடல், நிலம், வீடு, தோட்டம், உடமை அனைத்தையும்சிங்களதேசம்கையகப்படுத்திவிட்டது. மிச்சமாக இருப்பதையும் காவு கொள்ளும் செயற்றிட்டங்களை மௌனமாக முன்னெடுக்கிறது. எமது உணர்வுகளை மட்டும் அவர்களால் சூறையாட முடியவில்லை. உலகப் பந்தின் எந்த மூலையில் நாம் நின்றாலும் என்றோ ஒரு நாள் எமது மண்ணுக்கு நாம் மீண்டும் செல்வோம்,எமதுமண்ணை மீட்டெடுப்போம் என்ற உறுதியையும் அவர்களால் சிதைக்க முடியவில்லை.

வருடங்கள் உருண்டோடிச் செல்ல தமிழர்கள் தமது புண்ணிய பூமியை மறந்து விடுவார்கள், அடைக்கலம் தேடிய நாடுகளில் தமது நாளாந்த வாழ்க்கையின் தேவைகளுக்குள் மண்ணை மறந்து கரைந்து விடுவார்கள் என்று தப்புக் கணக்குப் போடுகின்றது சிங்கள தேசம். எமது அடுத்த தலைமுறையைக் காக்க அறவழியிலும் பின்னர் ஆயுதமேந்தியும் நாம் போராடினோம். அளப்பரிய உயிர்த் தியாகங்களைப் புரிந்தோம். அங்கங்களை இழந்தோம். மாறாத வடுக்களை உடலெங்கும் சுமந்தோம். உறவுகளைப் பிரிந்தோம். அவமானப்படுத்தப்பட்டோம் என்பதை மறந்து விடுவார்கள் என்று கனவு காண்கின்றது சிங்கள தேசம். கலை, பண்பாடு, மொழி, விழுமியங்கள் சிதைந்து போய் விடும் என்று மனப்பால் குடிக்கின்றது.

உலக நாடுகளின் கவனம் எமது பக்கமாகத் திருப்பப்பட வேண்டும். எமது இன அழிப்பைப் புரிந்து கொள்ளவேண்டும். அதனைத் தடுத்து நிறுத்தும் சரியான காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும் என்பதே உலகத் தமிழர்களின் நிலைப்பாடு. அந்த அடிப்படையில் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு கூரல் ஒவ்வொரு வருடமும் உலகின் மனச்சாட்சியைத் தட்டிக் கேட்கவேண்டும். முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு தினம் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி மாலை 5 மணிக்குப் பிரிட்டன் நிலக்கீட் தொட்ருந்து நிலையத்தில் நடைபெறும்- என்றுள்ளது. (த-ஜ-10)

## கொலைச் சந்தேகநபருக்கு இராஜதந்திரப் பதவியா?

*குற்றச்சாட்டை மறுக்கிறார் கோத்தா*



கொழும்பு, ஏப். 27
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கிலுள்ள முதன்மைச் சந்தேகநபருக்கு, இராஜதந்திரப் பதவியைத் தாம் வழங்கியதாக வெளியான செய்திகளை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

இது பொய்யான செய்தி என்று கீச்சகப் பதிவு ஒன்றை இட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச, இது மக்களைத் தவறாக வழிநடத்தும் செய்தி என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்தச் செய்தியை மறுக்கும் வகையில் சஞ்சய அமரதுங்க என்பவர் எழுதிய வலைப்பதிவு ஒன்றையும் அவர் இணைத்துள்ளார்.

இந்தப் பதிவில் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இரகசியப் புலனாய்வுநடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

அந்தப் பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேஜர் பண்டார புலத்வத்த, தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு நியமிக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது. அவருக்கு ஜேர்மனியில் தான் பதவி வழங்கப்பட்டது. அது இராஜதந்திரப் பதவி அல்ல. இரகசியப் புலனாய்வு அதிகாரியாகவே அவர் ஜேர்மனியில் பணியாற்ற நியமிக்கப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் உள்ள நாடுகளில் இருக்கும் இலங்கைத் தூதுரகங்களில், இலங்கை இராணுவம் புலனாய்வு அதிகாரிகளை நியமிப்பது வழக்கமான நடைமுறைதான். 2005 ஆம் ஆண்டில் இருந்து, ஐரோப்பிய நாடுகளில் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.

தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் லதீப்கே, இத்தகைய பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது அதிகாரி.

அதற்குப் பின்னர் இராணுவம் மற்றும் காவல் துறையைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட புலனாய்வு அதிகாரிகள் இத்தகைய நோக்கங்களுக்காக வெளிநாடுகளில் பணியாற்ற அனுப்பப்பட்டனர்.

இப்போதும்கூட இது நடைமுறையில் உள்ளது. தூதரகங்களில் இளநிலைப் பதவிகளில் இருந்து இவர்கள் இரகசியப் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்வர். இவர்கள் பாதுகாப்பு ஆலோசகர்களாக அனுப்பப்படவில்லை.

2010ஆம் ஆண்டில் மேஜர் பண்டார புலத்வத்த இராணுவப் புலனாய்வுப் பிரிவில் செயற்பாட்டு நிலையில் இருந்தவர் என்பதால், அவருக்கு ஜேர்மனியில் நியமனம் வழங்கப்பட்டிருந்தால் அது இராணுவத்தின் முடிவாகவே இருக்கும்.

குறிப்பிட்ட நாடு ஒன்றுக்குப் புலனாய்வு அதிகாரி ஒருவரை இராணுவம் அனுப்பவேண்டும் என்றால், பாதுகாப்பு அமைச்சின் ஊடாக, பாதுகாப்புச் செயலரின் கையெழுத்துடன் அயலுறவு அமைச்சுக்குப் பரிந்துரை அனுப்பப்படும்.

மேஜர் புலத்வத்த ஏன் இந்தப் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டார்?, ஏன் அவரது நியமனம் ரத்துச் செய்யப்பட்டது? என்ற கேள்விக்கு இராணுவம்தான் பதிலளிக்க வேண்டுமே தவிர பாதுகாப்பு அமைச்சு அல்ல- என்றுள்ளது. (த-4)

## அழுத்தங்கள் வரினும் சு.கவின் மே தினத்தில் பங்கேற்கவேமாட்டோம்

*பிரசன்ன ரணதுங்க உறுதி*



கொழும்பு, ஏப். 27
எமது குழுவின் மீது எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் கண்டியில் நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்குச் செல்லமாட்டோம்.

இவ்வாறு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு சவாலுக்காகவே, மே தினத்தைக் கொண்டாடக் காலிமுகத்திடலை ஒன்றிணைந்த எதிரணிக்கு அரசு கொடுத்தது. அந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து இலட்சக்கணக்கான மக்களை, அங்கு கொண்டுவரவேண்டியது ஒன்றிணைந்த எதிரணியின் பொறுப்பு. எம் மீதான அச்சத்தின் காரணமாகவே, காலிமுகத்திடல் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தச் சவாலை நாங்கள் வெற்றி கொள்வோம். கண்டி, கெட்டம்பே விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கட்டாயம் பங்குபற்றவேண்டுமெனச் சகல உறுப்பினர்களுக்கும் கட்சியினால், கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பங்கேற்காதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் இடம்பெறும் மேதினக் கூட்டத்துக்குச் செல்வதற்கு நாங்கள் தீர்மானித்தது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீதுள்ள எதிர்ப்பினால் அல்ல. இந்த அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதற்கான மக்கள் பலத்தை நிரூபிப்பதற்காகவே-என்றார். (த-4)

## பேர்த்தியின் முதல் பிறந்த நாளுக்கு பென்ஸ்கார் பரிசளித்தார் அமைச்சர்

*சம்பவம் சமூக வலைத்தளங்களில் வெளியானதால் பெரும் பரபரப்பு*

கொழும்பு, ஏப். 27
தனது பேர்த்தியின் முதலாவது பிறந்த தினத்துக்கு, சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான பென்ஸ் காரொன்றை, முன்னாள் இராஜாங்க அமைச்சரொருவர் பரிசளித்துள்ளமை சமூக ஊடகங்களில் புகைப்படங்களுடன் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக இருந்து பதவி விலகிய பிரியங்கர ஜயரத்னவே தனது பேர்த்தியான ஜவோனியாவுக்கு அந்தக் காரைப் பிறந்த நாள் பரிசாக வழங்கியுள்ளார்.

இந்த விவகாரம், சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை அடுத்து, அந்த ஊடகங்களுக்குப் பதிலளித்துள்ள பிரியங்கர ஜயரத்ன, "பரிசளிக்கப்பட்டதாகக் கூறப்படும் அந்த வாகனம் என்னுடையது அல்ல. அது எனது மருமகனுடையது. ஒரு வருடத்துக்கு முன்னரே அந்த வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனையும் எனது மருமகனே செய்திருந்தார். எனது, பேர்த்தியின் முதலாவது பிறந்த தினத்துக்கு பென்ஸ் காரைப் பரிசளித்துள்ளதாகக் கூறப்படுவதில்எவ்விதமான உண்மையும் இல்லை. இது, எனது அரசியலுக்குச் சேறுபூசும் நடவடிக்கை. ஒருவயதான குழந்தைக்கு, எவராவது பென்ஸ்காரைப் பரிசாக வழங்குவார்களா?, விளையாட்டுக் காரைத்தான் பரிசாக வழங்குவார்கள்" என்று அவர் குறிப்பிட்டார்.

"பென்ஸ் கார் வாங்குமளவுக்கு என்னிடம் பணமில்லை. நானே, பழைய ஜீப் வண்டியில்தான் பயணிக்கிறேன். எனது பேர்த்தியின் பிறந்த நாளுக்கு சுமார் 18ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு சோடித் தோடுகளையே பரிசாக அளித்தேன்" என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும், அந்த பென்ஸ் காரின் முன்பக்கம், இலக்கத்தகடு பொருத்தவேண்டிய இடத்தில், "ஹப்பி பேர்த்டே ஜவோனியா" என ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

### துறைமுக அதிகார சபையின் முன்னாள் தலைவர் மீது வழக்கு

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் முன்னாள் தலைவர் பிரியாத் பந்துவிக்கிரம உட்பட மூன்றுபேருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாகக் கொழும்பு முதன்மை நீதிமன்று அறிவித்துள்ளது.

கடந்த அரச தலைவர் தேர்தலின்போதுஇலங்கைத் துறைமுக அதிகாரசபையின்319ஊழியர்களைக் கடமைக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியமையால், அரசுக்கு 650 லட்சம் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவித்து லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முன்னாள் தலைவர் பந்துல விக்கிரம வெளிநாடு சென்றுவர நீதிமன்றம் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த - 4)

## இளம் தாயும் குழந்தையும் உடலங்களாகக் கிணற்றில்

கொழும்பு, ஏப். 27
கெக்கிராவ மரதன்கடவல பிரதேசத்தில் கிணறு ஒன்றிலிருந்து தாய் மற்றும் குழந்தை ஆகியோரின் சடலங்களை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

37 வயதுடைய மினுவன்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த தாயும் அவரது 6 வயதுக் குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

பிள்ளையுடன் சென்றுகொண்டிந்தபோது தவறிக் கிணற்றுக்குள் விழுந்திருக்கலாம் என்றும், பின்னர் அவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகிறது. (த-4)

# மத்திய மாகாண சபையின் உறுப்பினர் சக்திவேல் கைது

## முச்சக்கர வண்டிச் சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில்



கொழும்பு, ஏப். 27
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்கும் சாரதி ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட முறுகலைத் தொடர்ந்து அங்கு பதற்றம் ஏற்பட்டதால் அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

லிந்துலை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மெராயா நகரத்தில் வசிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவரை தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர் லிந்துலைப் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் மத்திய மாகாண சபை உறுப்பினரைக் கைது செய்யுமாறு கோசமிட்டு ஒரு பகுதியினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற லிந்துலைப் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தி மத்திய மாகாண சபை உறுப்பினரைப் பொலிஸ் பாதுகாப்புடன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு நிலைமையை ஆராய்ந்த பொலிஸார் மத்திய மாகாண சபை உறுப்பினரைக் கைது செய்ததாகத் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர், மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேலின் வீட்டுக்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த வாழ்த்து விளம்பரப் பலகையை நேற்றுக் காலை தாக்கி உடைத்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

"தாக்குதலுக்குள்ளான நபர் பல காலமாக மெராயா நகரத்தில் பெண்களுக்கு இடையூறுகளை விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டார் என்பதை மக்கள் பிரதிநிதியான என்னிடம் நகரப் பொது மக்கள் தெரிவித்து வந்தனர். குறித்த நபரால் விளம்பரப் பலகை தாக்கப்பட்டுள்ளது. பாடசாலை செல்லும் மாணவிகளுக்கு இவர் பல இடையூறுகளை விளைவித்துள்ளதாக என்னிடம் முறையிட்டுள்ளனர். குறித்த சாரதியை நான் தாக்கவில்லை" என்று மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

"மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் என்னைத் தாக்கினார். எதற்காகத் தாக்கினார் என்று எனக்குத் தெரியாது. விளம்பரப் பலகையை நான் தான் உடைத்தேன் எனக் கூறிப் பொல்லாலும், இரும்பினாலும் நான் தாக்கப்பட்டேன். எனக்கு உடம்பில் காயமேற்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன்" என்று தாக்குதலுக்கு உள்ளானவர் தெரிவித்தார்.

அதேவேளை மெராயா நகரத்திற்கும், மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் வீட்டுக்கும் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத் தில் முற்படுத்தப்பட்டார். அவரை 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி விசாரணைக்கு வரும். (த-4)

# காணிகளைப் பெறமுடியாததால் வீடு அமைக்க முடியாத நிலை

## வவுனியா வீடமைப்பு அதிகார சபை பொறுப்பதிகாரி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 27
நெடுங்கேணி பிரதேச செயலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 100 வீடுகள் புதிதாக அமைத்துக் கொடுக்க முடியும். ஆனால் காணிகள் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று வவுனியா மாவட்ட வீடமைப்பு அதிகார சபை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை நெடுங்கேணியில் ஆரம்ப காலத்தில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களைச் சீரமைக்கும் பணிக்காக 19.5 மில்லியம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு அதிகார சபை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

"அனைத்து இடங்களிலும் புதிய வீட்டுத்திட்டங்கள் அமைத்துக் கொடுக்கின்றீர்கள். நெடுங்கேணிக்கு புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கவில்லையா?" என வடமாகாண சபை உறுப்பினர் ஜீ.ரி.லிங்கநாதன் கேள்வி எழுப்பினார். "நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் எங்களால் 100 அமைத்துக் கொடுக்க முடியும். அவற்றுக்கான காணிகளை பிரதேச செயலாளர் பெற்றுத்தர வேண்டும்." என்று வீடமைப்பு அதிகார சபை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நெடுங்கேணி பிரதேச செயலாளர் காணிகள் பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்தார். (ற-7)

# கட்சியின் முடிவை மகிந்த மீறினாலும் நடவடிக்கைதான்

## சுதந்திரக் கட்சி திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 27
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கட்சியின் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும். கட்சியின் தீர்மானத்தை மீறும் நபர்களுக்கு எதிராக - அது மகிந்தவாக இருந்தாலும் சரி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசநாயக்க தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். சிறிலங்கா சுதந்திர கட்சியைப் பிரிக்கும் நகர்வுகளை மகிந்த ராஜபக்சவே மேற்கொண்டு வருகின்றார். அதற்கு இடம் கொடுக்க முடியாது. அது வரவேற்கக்கூடிய விடயமுமல்ல என்றும் துமிந்த மேலும் கூறினார். (த4)

# இலவசக் கல்வியை அரசு பாதுகாக்கும்

## அமைச்சர் லக்ஸ்மன் உறுதியளிப்பு

கொழும்பு, ஏப். 27
இலவசக் கல்வியைப் பாதுகாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி நாட்டில் இலவசக் கல்வி முறையை ஏற்படுத்தியது. அதனை அழிக்க இடமளிக்கப்படமாட்டாது.

இவ்வாறு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் நாடாளுமன்றச் சபைத் தலைவருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகங்களின் தராதரங்களினைப் பாதுகாக்க எதிர்வரும் 2 மாதங்களுக்குள் புதிய சட்டவரைவு அறிமுகப்படுத்தப்படும்.

தனியார் மருத்துவக் கல்லூரியைக் கடந்த அரசுதான் ஆரம்பித்தது. அன்று அதனை எதிர்க்காதவர்கள் இன்று தனியார் பல்கலைக்கழகங்களை எதிர்க்கின்றனர்.

தனியார் மருத்துவக் கல்லூரி பற்றி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்வது அவசியம். அரசு சகல பல்கலைக்கழகங்களுக்கும் சகல வசதிகளையும் வழங்கியுள்ளதுஎன்றார்

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் ராஜித தெரிவித்ததாவது: அரசு சட்டம், ஒழுங்கு என்பனவற்றுக்கு அமைய செயற்படுகிறது. தனியார் மருத்துவக் கல்லூரி பற்றி மருத்துவப் பேரவை எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது தொடர்பாகச் சுகாதாரத் துறையினர் அரச தலைவருடன் பேச்சு நடத்தவுள்ளனர். நாட்டில் 6 ஆயிரம் மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. அரசு வைத்தியசாலைகளை மேம்படுத்த கூடுதலான நிதியை செலவிடுகிறது. தெற்காசியாவில் தனியார் மருத்துவக் கல்லூரி இல்லாத ஒரே நாடு இலங்கை - என்றார். (த-4)

# தாயும் தந்தையும் கொலை

## சந்தேகத்தில் மகன் கைது

கணவன் – மனைவி இருவரும் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களது மகன் ஒருவரே இந்தக் கொலையைப் புரிந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டும் பொலிசார் மகனைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர். இந்தக் கொடூரச் சம்பவம் கொழும்பு ஹோமாத்தகம பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் 73 வயதான தாய் மற்றும் 76 வயதான தந்தை ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர். 36 வயதான மகன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொலைச் சம்பவத்துக்கான காரணம் வெளியாகவில்லை. விசாரணை நடத்துவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சந்திரகுமாரன் மலர்விழி

தோற்றம்
17.03.1961

மறைவு
28.04.2016

திதி: 27.04.2017

எங்களை எல்லாம் உன் அன்பினால்
கட்டி ஆண்ட எங்கள் குல தெய்வமே
உனக்கு மரணமும் வந்ததுவோ !
ஓர் ஆண்டு என்ன ஊழிக்காலம் வரை
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலா
நீ மரணிக்கவில்லை என்றென்றும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்

யாமாலை
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

என்றும் உன் அன்புக்
குடும்பத்தினர்.

# குப்பைப் பிரச்சினைக்குக்கூட இந்த அரசிடம் தீர்வு இல்லை

## கடுமையாகச் சாடுகிறது மகிந்த தரப்பு

கொழும்பு, ஏப். 27
நாட்டில் குப்பைப் பிரச்சினைக்குக்கூட உரிய தீர்வு முன்வைக்க முடியாத நிலையில் கூட்டாட்சி அரசு உள்ளது. ஆகவே நாட்டு வளங்களை விற்பனை செய்தாவது ஆட்சியைக் கொண்டு நடத்தவதற்கு அரசு முற்படுகிறது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளையிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் தற்போது குப்பை விடயம் தொடர்பில் பீதியடைந்துள்ளனர். எனவே கூட்டு அரசு குப்பைப் பிரச்சினைக்குக் கூடத் தீர்வு முன்வைக்க முடியாத நிலையில் உள்ளது. அந்தப் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கும்போது சமயத் தலைவர்கள் மற்றும் மக்களினதும் ஆலோசனைக்கமைவாகத் தீர்வு காணவேண்டும். அதனைவிடுத்துச் சட்டத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க முனையக்கூடாது.

அரசு அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கையைக் கைச்சாத்திட முனைந்தது. அதற்கெதிராகக் கூட்டு எதிர்க்கட்சி தொடர்ச்சியாக எதிர்ப்பைத் தெரிவித்து வந்தது. அதனால் இதுவரை அந்த உடன்படிக்கை கைச்சாத்திடமுடியாத நிலையில் உள்ளது. எனினும் நாட்டுவளங்களை எவ்வாறாவது விற்பனை செய்தாவது ஆட்சி நடத்துவதற்கே அரசு முற்படுகிறது-என்றார். (த-4)

# கொழும்பு வருவோர் குப்பைப் பொதியுடன் ஊர் திரும்ப நேரிடும்

## முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 27

"கொழும்பில் குவியும் குப்பைகளை அகற்றுவதற்கு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளதால் கொழும்புக்கு நாளாந்தம் வந்து செல்லும் வெளிப் பிரதேசத்தவர்கள் தமது அலுவல்களை முடித்துவிட்டுச் செல்லும்போது குப்பைப் பொதியொன்றையும் எடுத்துச் செல்ல நேரிடும்."

இவ்வாறு கொழும்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் நாளாந்தம் 750 தொன் குப்பை சேகரிக்கப்படுகின்றது. இதில் கொழும்பு மக்களின் குப்பைகள் 250 தொன். 500 தொன் குப்பைகள் வெளிப் பிரதேசத்தவர்களினதே. எனவே இந்தக் குப்பைப் பிரச்சினை கொழும்பு மக்களின் பிரச்சினையல்ல, நாட்டின் தேசியப் பிரச்சினை.

மீதொட்டமுல்ல விவகாரத்தில் ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்துவதை விட்டுவிட்டு மீண்டும் இவ்வாறானதோர் இடர் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

1996 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபை முதல்வராகக் கரு ஜயசூரிய இருந்த காலத்தில் சிறந்த குப்பை அகற்றும் முறையொன்று முன்மொழியப்பட்டது. அப்போது தினேஷ் குணவர்தன போன்றவர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

1994 ஆம் ஆண்டு முதல் சுதந்திரக் கட்சியின் ஆட்சியே நிலவி வருகின்றது. இந்தக் காலப்பகுதியில் சரியான திட்டம் முன்வைக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. கொழும்பு மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தில் இருந்தமையால் எதனையும் செய்ய முடியாதிருந்தது.

2006ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதையடுத்து அந்தக் கட்சியின் ஆதரவுடன் சுயாதீனக் குழுவொன்று ஆட்சியமைத்தது. இந்த ஆட்சியை 2008ஆம் ஆண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கலைத்துவிட்டுச் சிறப்பு ஆணையாளரின் கீழ் கொழும்பு நகரை நிர்வகித்தார்.

இந்தக் காலப்பகுதியில் அரச தலைவர், நாடாளுமன்ற மற்றும் மாநகர ஆளுகை மகிந்தவின் கீழேயே இருந்தது. அவர்கள் அந்தக் காலப்பகுதியை சரியான முறையில் பயன்படுத்தாது இரண்டு வருட கூட்டாட்சியைக் குறை கூறுகின்றனர்.

2012ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையின் முதல்வராக ஐக்கிய தேசியக் கட்சியூடாக ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவானபோதும் முழு அதிகாரமும் நகர அபிவிருத்தி அதிகார சபையூடாகக் கோத்தபாய ராஜபக்சவின் கீழ் வந்தது.

இந்தக் குப்பை விவகாரத்தை வைத்து ஆட்சியைக் கவிழ்க்க முற்படுகின்றனர். குப்பை அகற்றுவதற்காக வேறு பிரதேசங்களைத் தெரிவு செய்யும்போது அதனையும் ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் குழப்புகின்றனர். மீதொட்டமுல்ல பகுதியில் குப்பை கொட்டுவதற்குப் பதிலாக ஜாஎல, ஏகல பகுதியைத் தெரிவு செய்தபோது மதத் தலைவர்கள் அடங்கலான குழுவொன்று கடும் எதிர்ப்பை வெளியிட்டது. அதுபோல கரதியான உள்ளிட்ட பகுதிகளிலும் இதே நிலைமை தொடர்கின்றது.

இவ்வாறு விஞ்ஞானபூர்வமாகப் பிரிக்கப்பட்டுக் குப்பை அகற்றும் முறையொன்றை அறிமுகப்படுத்தும்போது அதனை எதிர்ப்பது ஆரோக்கியமான சமூகத்துக்கு அழகானதல்ல. குப்பை அகற்றுவதற்கு அவர்கள் எதிர்ப்பு வெளியிடுவதைப் போல் கொழும்பு நகர எல்லைக்குள் வெளிப் பிரதேசத்தவர்கள் குப்பை கொட்ட முடியாது எனக் கொழும்பு வாழ் மக்கள் வீதியில் இறங்கினால் நிலைமை மோசமடையும். மனிதாபிமான ரீதியில் இவ்விடயத்தைப் பார்க்கவேண்டும்.

அப்போது தான் பிரச்சினைக்குத் தீர்வொன்றை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (த - 4)

# கல்வித்துறையை தனியார் மயமாக்க அரசு முற்பட்டால் பெரும் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27

""ஏனைய துறைகளைத் தனியார் மயமாக்குவதற்கு முயற்சிப்பது போன்று, கல்வித்துறையைத் தனியார் மயமாக்க முற்பட்டால் பெரும் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்."

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை அதிபர் சேவைச் சங்கம் மற்றும் அகில இலங்கை ஆசிரிய கல்விச் சேவைச் சங்கம் என்பன இணைந்து கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசின் கல்விக்கொள்கை தொடர்பில் பெரும் விமர்சனம் இருந்து வருகின்றது. கல்வித்துறையைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கையை அரசு திட்டமிட்ட முறையில் மேற்கொள்கிறது.

இது எமது எதிர்கால மாணவர்களுக்கு இலவசக் கல்வியை அனுபவிக்க முடியாத நிலையை ஏற்படுத்தும்.

இதனால் அரசின் கல்விக்கொள்கை தொடர்பாக சகல தொழிற்சங்கங்களும் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கல்வித்துறையில் கொள்கை ரீதியான மாற்றங்களை மேற்கொள்ளும்போது தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடவேண்டும் - என்றார். (த - 4)

# பொலிஸ் உதவியுடன் விகாரைக்குக் கட்டடம்

## அமைக்கக் கோருகிறது பொதுபல சேனா

கொழும்பு, ஏப். 27

"மாணிக்கமேடு தீகவாவி புனிதப் பகுதியில் காணி அனுமதிப் பத்திரத்தை வைத்துள்ளவர்களை வெளியேறுமாறு கூறிவிட்டுப் பொலிஸாரின் உதவியுடன் விகாரைக்கான கட்டடம் அமைக்கும் பணியை முன்னெடுங்கள்."

இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் நாயகம் கலகொட அத்தேஞானசார தேரர் அம்பாறை மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தீகவாவி புனிதப் பிரதேசம் எனக் கூறப்படும் மாணிக்கமேடுப் பகுதியிலுள்ள இரு நிலப் பகுதிகளை முஸ்லிம்கள் தங்களது பெயருக்கு எழுதிக்கொண்டுள்ளனர். அதற்கு அதிகாரிகள் உடந்தையாக இருந்துள்ளனர் என்று பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இவ்வாறு முஸ்லிம்களின் பெயரில் உறுதியுள்ள மாணிக்கமேடுப் பகுதியில் உள்ள காணியில், பௌத்த விகாரைக்குரிய கட்டடமொன்றை நிர்மாணிக்கக் கடந்த வாரம் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அந்தக் காணி உறுதியுள்ள முஸ்லிம்கள் இந்த நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் இந்த நடவடிக்கை ஒரு வாரத்துக்குப் பிற்போடப்பட்டது.

இந்த நடவடிக்கையை உடன் ஆரம்பிக்குமாறு கோரி, நேற்றுமுன்தினம் தீவிரவாத பௌத்த அமைப்பான பொதுபல சேனா அம்பாறை மாவட்ட செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியது. இதன்போதே ஞானசார தேரர் மாவட்டச் செயலாளரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"பணத்தைக் கொடுத்து காணி உறுதிகளைச் செய்து கொண்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள முடியாதளவுக்கு நாங்கள் சிறுபிள்ளைகள் அல்லர். எந்தவொரு அதிகாரத்துக்கும் பயப்படத் தேவையில்லை.

பொலிஸாரின் உதவியைக்கொண்டு உடனடியாகக் கட்டடப் பணிகளை ஆரம்பியுங்கள்" - என்றார் ஞானசார தேரர். (த - 4)

# தூத்துக்குடியில் கைதான ஏழு மீனவர்கள் விடுவிப்பு

கொழும்பு,ஏப்.27

இந்தியக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 7 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட்டன.

புத்தளத்தைச் சேர்ந்த குறித்த மீனவர்கள் கடந்த 4ஆம் திகதி தூத்துக்குடி கடற்பரப்பில் வைத்து இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இராமநாதபுரம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட மீனவர்கள் சென்னை புழல் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு மீண்டும் கடந்த 21 ஆம் திகதி இராமநாதபுரம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இலங்கை மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கமைய, மீனவர்களையும், படகுகளையும் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த - ஐ)

# திணைக்கள தலைவர்களுக்கு இடமாற்றம் வழங்கிய அர்ஜுன

கொழும்பு, ஏப். 27

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், தாம் பதவியேற்று 10 நாள்களின் பின்னர், திணைக்களத் தலைவர்களுக்கு இடமாற்றம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் மனிதவள அபிவிருத்திப் பணிப்பாளராகப் பணியாற்றிய கல்யாணி குணதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக் குழுவில் நேற்றுமுன்தினம் வாக்குமூலமொன்றைப் பதிவு செய்தபோது அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

திணைக்களப் பிரதானிகள் மட்டுமன்றி, உதவி மற்றும் பிரதிப் பணிப்பாளர் பதவிகளிலும் மாற்றம் ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார். (த -4)

# 17 புதிய அமைப்பாளர்களை சு.கவுக்கு நியமித்தார் மைத்திரி

கொழும்பு, ஏப். 27

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் புதிதாக 17 தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளனர். அரச தலைவர் அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர போன்றோரும் உடனிருந்தனர்.

சுதந்திரக் கட்சியின் மூத்த உப தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜனகபண்டார தென்னகோன், தம்புள்ளை தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த, கண்டி பாத்ததும்பர தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

தம்புள்ளை தொகுதியின் இணை அமைப்பாளர்களாக மத்திய மாகாண சபை உறுப்பினர் டபிள்யூ.எம்.யசமான்ன மற்றும் தம்புள்ளை வர்த்தக சங்கத்தின் தலைவர் யூ.ஆர்.தயானந்த சிறி ஆகியோர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாத்ததும்புர தொகுதியின் புதிய அமைப்பாளராகப் பாத்ததும்பர பிரதேச சபையின் முன்னாள் தலைவர் டபிள்யூ.எம்.சமரஜீவ பண்டார வெலகெதர நியமிக்கப்பட்டுள்ளார். லொஹான் ரத்வத்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாதுகாப்பு பிரதியமைச்சருமான அநுருத்த ரத்வத்தையின் மகன்.

இதேவேளை, மகியங்கனைத் தொகுதியின் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரான மாகாண சபை உறுப்பினர் விதானகம நீக்கப்பட்டு அவருக்குப்பதிலாக கே.ஜீ.குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். இதனைத் தவிர, மாவட்ட அமைப்பாளர்கள் 13 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். நிஸங்க ஹேரத், அசங்க் தொடம்வல, அசேல ஏக்கநாயக்க, லின்டன் விஜேசிங்க ஆகியோர் கண்டி மாவட்ட அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.அகிலதாஸ், பீ.கோபால் கிருஷ்ணன் மற்றும் கந்தசாமி கருணாகரன் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கும், என்.அருணதிலகன், முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நியமிக்கப்பட்டு நியமனக் கடிதங்கள் அரச தலைவரால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தனது தந்தையான ஜனக பண்டார தென்னக்கோனிடமிருந்து, அமைப்பாளர் பதவியைப் பறித்தமையை அடுத்து, அவரது மகனான பிரமித் பண்டார தென்னக்கோன், மத்திய மாகாண இளைஞர் நடவடிக்கை, கிராமிய அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார். (த - 4)

# ட்ரம்ப்பின் செயலை நியாயம் செய்கிறார் இவன்கா

பேர்லின், ஏப். 27
ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் நடந்த மகளிர் மாநாட்டில் பேசிய இவன்கா ட்ரம்ப், தனது தந்தையும் அமெரிக்க அதிபருமான டொனால்ட் ட்ரம்ப்பின் செயல்களை நியாயப்படுத்தினார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
குறித்த மாநாட்டில் இவன்கா ட்ரம்பும் கலந்துகொண்டார். அவர் உரையாற்றுகையில்:
"எனது தந்தை ட்ரம்ப், பெண்களை ஆதரிக்கும் மிகப்பெரிய சம்பியன்" என்று புகழாரம் சூட்டினார். அப்போது பார்வையாளர்கள் பகுதியில் முணுமுணுப்புக்கள் இருந்தன என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
கடந்த வருடம் அமெரிக்க அதிபர்



தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலின் போது, ட்ரம்ப் மீது பல்வேறுபட்ட பாலியல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பெண்களை விலை மாதர்களாகச் சித்திரித்து ட்ரம்ப் மேற்கொண்ட உரையாடல்களும் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)



# தினகரன் நேற்றுக் கைது

சென்னை, ஏப். 27
அ.தி.மு.கழகத்தின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன். இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் நேற்று அதிகாலை கைதானார்.
அ.தி.மு. கழகம் சசிகலா தரப்பு, ஓ.பி.எஸ். தரப்பு என இரண்டாக உடைந்ததை அடுத்து கட்சிச் சின்னம் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் முடக்கப்பட்டுள்ளது. எவருக்கு சின்னத்தை வழங்குவது என்பது தொடர்பில் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.
இந்த நிலையில் அ.தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், சசிகலாவின் ஆதரவாளராகவும் இருந்த டி.டி.வி. தினகரன் இரட்டை இலையை மீட்டெடுக்க சுகேஷ் என்ற இடைத்தரகருக்கு 50 கோடி லஞ்சம் கொடுக்க முயன்றார் என்று ஆதாரத்துடன் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.
இந்தக் குற்றச்சாட்டில் தினகரன் கடந்த 22 ஆம் திகதி முதல் டெல்லி பொலிஸாரால் விசாரிக்கப்பட்டார். நான்கு நாள்களாக நடைபெற்ற தீவிர மற்றும்குறுக்குவிசாரணைகளுக்குப் பின்னர் தினகரன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.
ஆரம்பத்தில் சுகேஷ் எவர் என்றே தெரியாது என்று மறுத்துவந்த தினகரன், அலைபேசி உரையாடல் ஒலி வடிவத்தையும், இருவரும் சந்தித்துப் பேசிய காணொலிகளையும் காட்டிய பின்னர் சுகேஷுடன் பேசியதை ஒப்புக்கொண்டார் என்று தெரியவருகிறது.
இந்த விடயத்தில் சட்டத்தரணி குமார் என்பவரும் தினகரனுக்கு ஆதரவாக இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அவரிடமும் டெல்லி பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர். (ம)

# அதிபர் நிக்கோ…

கரஸ்கஸ், ஏப். 27
வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராகத் தோற்றம் பெற்ற கலவரங்கள் தற்போது அங்கு மிகப்பெரிய அளவில் உருவெடுத்துள்ளன.
தென்னமரிக்க நாடுகளில் ஒன்று வெனிசூலா. அங்கு அதிபராக நிக்கோலஸ் மதுரா உள்ளார். இவரது ஆட்சியில் வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சியையும் உணவுத் தட்டுப்பாட்டையும் அந்த நாடு எதிர்கொண்டது. மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளை அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. உணவு, உலர் உணவு என்பன கிடைப்பதென்பது அரிதிலும் அரிது. உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் ஆகியவற்றால் கொட்டப்படும் கழிவு உணவைத் தெரிந்து எடுத்து பசியாற்றுவதற்கும் அங்கு வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை.

## அமெரிக்காவில் ஒரே நாளில் இருவருக்கு சாவுத் தண்டனை

வொஷிங்டன், ஏப். 27
அமெரிக்காவின் ஆர்கன்சஸ் மாநிலத்தில் ஒரே இரவில் 2 கைதி களுக்கு விஷ ஊசி மூலம் சாவுத் தண்டனை நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.
அமெரிக்காவில் ஒரே நாளில் இருவருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது, 17 ஆண்டுகளுக்குப் பிறகு இதுவே முதல்முறையாகும்.
ஆர்கன்சஸ் மாகாண அரசு இருப்பு வைத்துள்ள விஷ ஊசி மருந்து இன்னும் சில தினங்களில் காலாவதி ஆகவுள்ளது. இதனாலேயே சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அதை தண்டனையை நிறைவேற்ற அந்த மாநில அரசு தீவிரம் காட்டுகிறது என்று அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
இன்னும் ஒரு வாரத்தில் 8 பேருக்கு அந்த அரசு சாவுத் தண்டனை நிறைவேற்றவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ம)



## எனக்கு 39: உனக்கு 64

பரிஸ், ஏப். 27
பிரான்ஸ் அதிபர் தேர்தலின் வேட்பாளர் இமானுவல் மக்ரோன், அவரின் மனைவி பிரிஜ்ஜெட் இருவருக்கும் இடையில் உள்ள வயது வேறுபாடுதான் சமூக வலைத்தளங்களில் தற்போது வைரல்.
மக்ரோனுக்கு தற்போது 39 வயது. அவருடைய மனைவிக்கு வயது 64. மக்ரோன் 17 வயதில் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது தன்னுடைய ஆசிரியையைத் திருமணம் செய்வேன் என்று அவருக்கு வாக்களித்தாராம். தற்போது தான் வாக்களித்ததைப்போல் அவரையே திருமணம் செய்துள்ளார். திருமணம் நடைபெறும்போது மக்ரோனுக்கு வயது 29. பிரிஜ்ஜெட்டுக்கு வயது 53. மக்ரோன் பிரான்ஸின் அதிபராகப் பதவியேற்றால் பிரான்ஸின் முதல் பெண்மணியாக பிரிஜ்ஜெட் திகழ்வார். (ம)



## படகு விபத்தில் 30 பேர் சாவு

டகார், ஏப். 27
செனகல், காம்பியா நாடுகளில் ஏற்பட்ட இரு வேறு படகு விபத்துக்களில் ஒட்டுமொத்தமாக 30 பேர் உயிரிழந்தனர்.
மேற்கு ஆப்பிரிக்காவின் அட்லாண்டிக் கடல் பகுதியில் அடுத்தடுத்து உள்ளன செனகல் மற்றும் காம்பியா நாடுகள். மத்திய செனகலின் தீவு பகுதியில் 72 பேருடன் சென்ற படகு நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர். 50 பேர் மீட்கப்பட்டனர். உயிரிழந்தவர்களில் பலர் ஆண்கள்.
அதேபோல், மற்றொரு விபத்து காம்பியாவின் தியாபுகுக் மற்றும் தபஜங் ஆகிய கிராமங்களுக்கு இடையில் உள்ள ஆற்றில் நிகழ்ந்தது. இந்த விபத்தில் 8 மீனவர்கள் உயிரிழந்தனர். (ம)

# வடகொரியாவில் இருந்து வெளியேற அமெரிக்கர்களு…

வொஷிங்டன், ஏப். 7
அமெரிக்கா - வடகொரியாவுக்கு இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் வடகொரியா. தென்கொரியாவில் இருக்கும் அமெரிக்கர்களைப் பாதுகாப்பாக வெளியேறுமாறு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் அதிகாலை (இலங்கை நேரப்படி) உத்தரவிட்டார்.
வடகொரியாவின் அத்துமீறிய அணுவாயுதத் திட்டங்களுக்கு எதிராகத் தனது விமானம் தாங்கிப் போர்க் கப்பலான வின்சனை கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்கா நிறுத்தியுள்ளது. எனினும் வடகொரியா மிரண்டுவிடவில்லை.
அமெரிக்காவில் விமானம் தாங்கிப் போர்க் கப்பலைத் தாக்கும் வல்லமை தனக்கு உண்டு என்று அந்த நாடு முழக்கமிட்டது.
இதனையடுத்து மிகப்பெரிய நீர்மூழ்கிப்





போர்க்கப்பலை…
நேற்றுமுன்தி…
இதனால் கொ…
இரட்டிப்பாகியு…
இந்த நிலையி…
கொரியாவில்…
பாதுகாப்பாக…
ரவிட்டார்.
வடகொரியா ஏ…

# கோலஸ் மதுரோவுக்கு எதிராக பெரும் போராட்டம்

இவ்வாறு சென்றால் அந்த நாடு இன்னும் சில மாதங்களில் 700 சதவீதம் பணவீக்கத்தை எதிர் கொள்ளும் என்று உலக நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

இதனால் மதுரோவைப் பதவி விலக வேண்டும் என்று வலியு றுத்தி அங்கு எதிர்கட்சித் தலைவர் லொபாஸின் தலைமையில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. லொபாஸ் கைதுசெய்யப்பட்டு சிறையிடப்பட்டார். இதனால் அங்கு பதற்றநிலை இரட்டிப்பாகி யுள்ளது. மதுரோ பதவி விலக வேண்டும், பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும், லொபாஸ் விடுதலையாக வேண்டும் என்று வலியுறுத்தி இலட்சக்கணக்கான இளைஞர்கள் தலைநகர் கரஸ் கஸ் உள்ளிட்ட பல நகர்களில் வன்முறை ரீதியில் போராடி வரு கின்றனர் என்று பன்னாட்டு ஊட கங்கள் குறிப்பிட்டன. (ம)



# துருக்கியின் தாக்குதலில் குர்து இன ஆயுததாரிகள் உயிரிழப்பு

பக்தாத், ஏப். 27

சிரியா மற்றும் ஈராக் நகரில் குர்து இன ஆயுததாரிகள் உள்ள நிலைகள் மீது துருக்கிப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 23 ஆயுததாரிகள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போராடி வரும் தரப்பில் குர்துப் படைகளும் அடங்குகின்றன.

அவர்களுக்கு அமெரிக்கா அதரவு வழங்குகிறது.

இதனால் துருக்கியின் இந்த தாக்குதல் அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையில் மனக்கசப்புக்களைத் தோற்றுவிக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

குர்து தரப்பினர் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு ஈராக் அரசு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. தாக்குதல் நடத்தப்பட்டது ஏன் என்று துருக்கி அதிபர் எர்டகன் ஈராக்குக்கு விளக்கம் கொடுத்துள்ளார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)





# போர் முனையில் 4 லட்சம் மக்கள்

சிரியாவின் ரக்கா நகரில் கிட்டத்தட்ட 4 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் போர் முனையில் சிக்கித் தவிக்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்தது.

சிரியா, ஈராக்கில் பெரும் பகுதியை ஐ.எஸ். ஆயுததாரிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அமெரிக்கக் கூட்டுப் படைகளின் ஆதரவுடன் ஈராக்கின் பெரும் பகுதியை அந்த நாட்டின் அரச படை மீட்டுள்ளது. தற்போது அமெரிக்க கூட்டுப் படைகளின் கவனம் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுத தாரிகளின் தலைமையகமான சிரியாவின் ரக்கா நகர் மீது திரும்பியுள்ளது. அந்தநகரை அமெரிக்காவின் ஆதரவு பெற்ற குர்து படைகள் சுற்றி வளைத்துள்ளன. அதேநேரம் அமெரிக்கக் கூட்டுப் படைகளின் போர் விமானங்கள் ரக்கா நகர் மீது இடைவிடாது குண்டுகளை வீசி வருகின்றன.

அந்த நகரில் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுத தாரிகளைத் தவிர்த்து 4 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். போர் முனையில் சிக்கியுள்ள அவர்களின் நிலைமை தொடர்பில் ஐ.நா. கவலை தெரிவித்தது.

இதுகுறித்து ஐ.நா. சபையின் செய்தித் தொடர்பாளர் பர்ஹான் ஹக், "சில வாரங்களாக ரக்கா நகர் மீதான தாக்குதல் தீவிரமாகி உள்ளது.

இதனால் மருத்துவமனைகள், பள்ளிகள், குடிநீர் ஆதாரங்கள், சந்தைகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. ஐ.எஸ். தீவிரவாதிகள், அமெரிக்க போர் விமானங்களின் குண்டு வீச்சுக்கு நடுவில் கிட்டத்தட்ட 4 லட்சம் மக்கள் சிக்கியுள்ளனர். அவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி உள்ளது" என்று தெரிவித்தார். (ம)

# சசியின் பதாகைகள் தூக்கி எறியப்பட்டன

## ஓ.பி.எஸ்.தரப்பின் வலியுறுத்தலை அடுத்து

சென்னை, ஏப். 27

அ.தி.மு. கழகத்தின் தலைமையகத்தில் இருந்து சசிகலாவின் படத்தை அகற்ற வேண்டும் என்று ஓ.பி.எஸ். தரப்பினர் நேற்றுமுன் தினம் வலியுறுத்தியிருந்த நிலையில் கட்சியின் தலைமையகத்தில் வைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய பதாகைகள், படங்கள் என்பன நேற்று அப்புறப்படுத்தப் பட்டன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஜெயாவின் மறைவின் பின்னர் சசிகலா பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்தார். ஊழல் குற்றச்சாட்டில் தற்போது அவர் சிறை சென்றுள்ளார். சசிகலாவையும், அவரால் நியமிக்கப்பட்ட டி.டி.வி. தினகரனையும் மக்கள் ஏற்கவில்லை.

இதனால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு கட்சியை நடத்துவது என்று தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் இணைந்து செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் அ.தி.மு. கழகத்தின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள சசிகலாவின் படம் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் அணியிலுள்ள மதுசூதனன் நேற்றுமுன்தினம் கோரிக்கை வைத்தார்.


இத்தகைய பின்னணியிலேயே அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகைகள் அகற்றப்பட்டன. (ம)

# ளுக்கு ட்ரம்ப் உத்தரவு

ப்பலையும்கொரியத்தீபகற்பத்துக்கு
முன்தினம் அனுப்பியது அமெரிக்கா.
ம் கொரியத் தீபகற்பத்தில் பதற்றம்
ாகியுள்ளது.
லையிலேயே வடகொரியா, தென்
ாவில் இருக்கும் அமெரிக்கர்களை
பாக வெளியேறுமாறு ட்ரம்ப் உத்த
ர்.
ரியா ஏவுகணைத் தாக்குதல் நடத்தி

னால் அது பத்து நிமிடங்களில் ஜப்பானை
அடையும் என்று ... இதனால் பாதுகாப்பாக
இருக்குமாறும் ஜப்பான் தன் மக்களை அறி
வுறுத்தியுள்ளது.

முன்னதாக, வடகொரியாவின் சிறப்புத் தூதர் அர்ஜென்ரா பெனாஸ், "மூன்றே குண்டுகளில் உலகை அழிக்கும் சக்தி வட கொரியாவுக்கு உண்டு" என்று தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



பாகிஸ்தானுக்கு நெருக்கமாக அமைந்துள்ள ஆப்கானிஸ்தானின் எல்லையில் அமெரிக்கா அண்மையில் 'வெடிகுண்டுகளின் தாய்' என்று அறியப்படும் மிகப்பெரும் குண்டை வீசியது. குண்டு விழுந்து வெடித்த இடங்களின் ஒளிப்படங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் இருந்த மரங்கள் பொசுங்கியுள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பதுங்குமிடங்கள் பல தகர்க்கப்பட்டுள்ளன. காட்டுத் தீ ஏற்பட்டதைப்போல் அந்த இடம் காட்சியளிக்கிறது என்று நேரில் ஆய்வு நடத்திய பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி குறித்து உலக வங்கி பாராட்டு

## நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



இலங்கையில் இடம்பெற்றுவருவதான பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன பாராட்டுத் தெரிவித்துள்ளதான தகவல் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் இடம்பெற்றிருந்ததான உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டிலேயே இந்தப் பாராட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர ஜி 24 நிதி அமைச்சர்களின் சந்திப்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பங்கேற்றுள்ளதுடன், ஜி 24 நிதி அமைச்சர்கள் சபையின் முதலாவது இணைத் தலைவராக ரவி கருணாநாயக்க நியமனத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் மிடிசுஹிரோ புர்சாவா மற்றும் உலக வங்கியின் உப தலைவர் அன்டி டிக்சன், அமெரிக்க மத்திய வங்கி ஆளுநர் ஜெனட் யெலன் ஆகியோருடன் அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்துரையாடியுள்ளதாகவும் நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



> “கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 1.7 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த தொகை மதிப்பீடானது 26 சத விகித அதிகரிப்பாகப் பதிவாகியுள்ளது.”

# எதிர்வரும் ஆண்டுகள் சுற்றுலா முதலீட்டு ஆண்டாக அறிவிப்பு

## சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ள அரசு நடவடிக்கை

அபிவிருத்தியின் ஊடே நாட்டை மீள் எழுச்சி பெறச் செய்தல் என்பதான நோக்கு நடப்பாண்டுக்கான பிரகடனமாக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வருகின்ற 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளை இலங்கையின் சுற்றுலா முதலீட்டு ஆண்டாக அரசு பிரகடனப் படுத்தியுள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவர் தலைமையில் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றிருந்ததான முதலாவது ஆசிய ஹோட்டல் மற்றும் சுற்றுலா முதலீடு சார் மாநாட்டின் போதே மேற்கண்ட விடயங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இதுவரைகாலமும் சுற்றுலா துறை சார்ந்து எதிர்நோக்கி வருவதான சாவால்களை 2020 ஆம் ஆண்டளவில் வெற்றி கொள்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்ந்தும் முன்னேற்றகரமான பாதையில் பயணிப்பதான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 1.7 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த தொகை மதிப்பீடானது 26 சதவிகித அதிகரிப்பாக பதிவாகியுள்ளது.

அதேவேளை கடந்த ஆண்டின் இதே மாத காலப்பகுதியுடன் ஒப்பிட்டு நோக்குகையில் 14.6 சதவிகித அதிகரிப்பாக தொகை மதிப்பீடுகள் உள்ளதனை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

இதன்படி இந்த ஆண்டு நிறைவுறுவதற்குள்ளாய் இலங்கைக்கு வருகை தரவுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது 2.2 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

திறைசேரி முறிகள் விவகாரம்;

# விசாரணை ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு

மத்திய வங்கியின் திறைசேரி முறிகள் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அரசதலைவரின் கீழான விசாரணை ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரச தலைவரின் பணிப்புரைக்கமைவாக எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளதான தகவல் விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் சுமதிபால உடுகமசூரியவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கானஆவணம்ஆணைக்குழுவிற்குகிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதுவரையாக 14 பேரிடம் ஆணைக்குழு சாட்சியங்களைபதிவுசெய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தநிலையில்மத்தியவங்கியின்உள்ளகக்கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் கல்யாணி குணதிலக்க கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணை ஆணைக்குழு முன்பாகசாட்சியமளிப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.

## நுட்பம்

iPad Pro



# ‘புதிய ஐபாட் புறோ’

## அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்கிறது

ஐபோன் வகைகளின் சிறந்த உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம் செய்யும் அப்பிள் நிறுவனம் எதிர்வரும் மார்ச் மாதம் 10.5'அங்குல அளவுடையதான புதிய ஐபாட் புறோ இனை அறிமுகம் செய்யவுள்ளது.

ஏற்கனவே ஐபாட் புறோ பதிப்பில் சில சாதனங்களை அப்பிள் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்த வெளியீடுகளில் ஒன்று 9.7 அங்குல அளவினையும் மற்றையது 12.9 அங்குல அளவையும் கொண்டமைந்திருந்தது.

இவைதவிர அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த சில நாடுகளின் கல்வித்துறை சார்ந்தோர் 10 அங்குல அளவினை விடவும் கூடியதான அளவுடைய ஐபாட்களையே பயன்படுத்தி கொள்கின்றனர். குறிப்பாக 9.7 அங்குல அளவுடையதான ஐபாட்கள் அவர்களுடைய பாவனையில் மிகச் சிறியதாக இருப்பதுடன் 12.9 அங்குல ஐபாட்களின் விலை அதிகூடியதாகவும் இருக்கின்றது.

இந்தநிலையிலே மேற்படி பிரச்சினைகளுக்குரித்தான தீர்வை முன்மொழியும் விதமாக 10.5 அங்குல அளவுடைய புதிய ஐபாட் புறோ அறிமுகம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பிள் நிறுவனங்களின் உற்பத்தியான ஐபோன்களுக்கு பாவனையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்துவருகின்றமை நோக்கத்தக்கது.

# தங்க நாணயங்களுக்கான உற்பத்தி வரி நீக்கம்




வர்த்தக நாமம் கொண்ட தங்க நாணயங்களுக்கான உற்பத்தி வரியை இந்திய மத்திய உற்பத்தி மற்றும் சுங்க.வரிகள் வாரியம் நீக்கியுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து மேற்படி நாணயங்களுக்கு ஒரு சதவீத உற்பத்தி வரி விதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் த்ங்க நாணயங்களின் விலை நிர்ணயத்தில் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் வர்த்தக நாமம் கொண்ட வெள்ளி நாணயங்களுக்கான உற்பத்தி வரி விலக்கு நீடித்திருக்குமெனக் கூறப்படு கின்றது. ஏற்கனவே சுங்க வரி அல்லது உற்பத்தி வரி செலுத்தப்பட்ட 99.5 சதவீதம் மற்றும் அதற்கு மேற்பட்டதான தூய்மை கொண்ட தங்கத்தின் மூலம் தயாரிக்கப்படுகின்ற வர்த்தக நாமம் சூடிய தங்க நாணயங்களுக்கு மட்டுமே இந்த சலுகை பொருந்தும் என தெரியப்படுத்தப்பட்டுள்ளது.



# எமது மூதாதையரின் உணவுப் பழக்கங்களும் வைத்திய முறைகளும்

என்னதான் விஞ்ஞானம் தன்னுடைய உச்சவளர்ச்சியைக் காட்டியுள்ள போதும் எமது மூதாதையரின் மூலிகை கைவைத்தியத்திற்கும் அவர்களின் பத்திய முறைக்கும் ஈடாகாது. ஆரோக்கியம் என்னும் போது தமிழரின் மருத்துவத்துக்கே செல்ல வேண்டும் அவர்களின் உழைப்பு நீண்ட ஆயுள், தேகாரோக்கியம், என்பன தற்போதுள்ள எமது மக்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்கள் ஆங்கில வைத்தியமுறைகளைக் கையாண்டு தேக சுகங்களை இழப்பதுடன் வீண் பண விரயமும் அலைச்சலும் ஏற்படுவதுடன் அவர்களின் ஆயுளும் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இரா.தனம்

ஒரு மனிதனின் ஆயுட்காலமானது சுமார் 100 ஆண்டுகள் என்பதும், திடகாத்திரத்துடனும் ஆரோக்கியமாகவும் இருக்கும் காலம் 60 ஆண்டுகள் என்பதும் அனைவரினதும் கணிப்பீடாகும். எமது மூதாதையர் ஓரளவு வயதினராகும் போதே பெண்களும் வயலிலும் , வீடுகளிலும் கடினமான உழைப்பாளிகளாக இருந்தனர். அதிகாலையிலே எழுந்து தமது வீட்டு வேலைகளை முடித்து மதியத்தில் கணவனுக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு செல்வர் உணவு பரிமாறியதும் கணவனுக்கு ஒத்தாசையாகச் சில வேலைகளை மேற்கொள்வர்.

**காலை உணவு**

காலையிலே கணவனுக்கு உணவாக பழைய சோற்றை தயிர் விட்டுக் கரைத்துக் கஞ்சியாகக் கொடுப்பவர். அத்துடன் ஒடியல் பிட்டு, குரக்கன் பிட்டு, தவிட்டுப் பிட்டு போன்றவற்றையும் உணவாகக் கொள்வர் ஆனால் பழைய சோற்றுக் கஞ்சியுடன் பினாட்டைக் கொடுக்கத் தவறமாட்டார்கள். மதிய உணவுடன் கட்டாயமாக ஒடியல் மாபிட்டு அல்லது தவிட்டுப் பிட்டு அல்லது குரக்கன் மாபிட்டு என்பதில் ஏதாவது ஒன்றிருக்கும் மதியக் கறியாக இலை வகையான கனாந்தி இலைவறை, முருங்கை இலை சுண்டல், வட்டுக்காய்க் குழம்பு என்பனவற்றோடு குளத்திலே பிடிக்கப்படும் கச்சல் தீயல் மீன் குழம்பு, உடும்பு இறைச்சி என்பனவற்றுடன் மதிய உணவைப் பரிமாறுவர் உணவை அளவாகவே உட்கொள்வர். ஆண்கள் மதிய வேளைகளில் நாய்களுடன் சென்று உடும்பு வேட்டையாடுவர் இடையிடையே மான், மரை, அழுங்கு, முள்ளம்பன்றி போன்றவற்றையும் வேட்டையாடுவர். அவற்றின் இறைச்சிகளை நெருப்பிலே காயவிட்டு கருவாடாக்கி ஏதாவது மரக்கறியோடு சேர்த்துச் சமைப்பர். அது மிகவும் ருசியாகவே காணப்படும்.

பன்றி இறைச்சி மிகவும் ருசியான இறைச்சியாகும். அதுவும் நெய்பன்றி இறைச்சி மிகவும் சுவையானது அதனைக் கொண்டு வந்து பெரிய சட்டிகளில் வெட்டிப் போட்டு அடுப்பிலே வைத்ததும் அது உருகி அந்த நெய்யிலே இறைச்சியும் வேகி விடும் இறைச்சி பொன்னிறமானதும் அதனை இறக்கிப் பெரும் பானைகளிலே போட்டுச் சீலையால் கட்டி வைத்து விடுவர் கறிசமைக்கும் போது அதிலே இரண்டு அகப்பை எடுத்துச் சூடாக்கி தூள் இட்டுப் பரிமாறுவர். இப்படியாக எமது மூதாதையர் இயற்கையான மரக்கறிகளையும் இறைச்சி, மீன் என்பனவற்றையம் உணவாகக் கொண்டனர். அது மட்டுமல்ல சிலர் இறைச்சியைத் துண்டு துண்டாக வெட்டி 1 போத்தலில் இட்டுத் தேன் நிறைய விட்டு ஒரு கிழமை தேனிலே அவிய விட்டு அதனைச் சாப்பிடுவர் சிலர் போத்தலிலே உள்ளியை உடைத்துப் போட்டு அதிலே தேன் விட்டு ஊறவிட்டு தேனுடன் உள்ளியையும் சேர்த்துக் காலை உணவாகக் கொள்வர். இவர்கள் காலை முதல் மாலை வரை வயலில் வேலை செய்வதால் மது அருந்தும் பழக்கம் அவர்களிகிடையாது. ஆனா சிலர் மருந்தும் விருந்தும் மூன்று வேளை என்பது போல அதனை மிகவும் இரகசியமாக எவருக்கும் தெரியாது அருந்துவர் ஆனால் அதனை ஒருநாள் அல்லது மறு நாளையும் முடித்துக் கொள்வர் அதுவும் கடுமையான வேலைகள் செய்யும் போதே அதனைப் பாவிப்பர்.



**கடுமையான உழைப்பு**

எனவே மூதாதையரின் கடுமையான உழைப்பு உணவு உட்கொள்ளும் முறை. அவர்களது தேகாரோக்கியம், பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றில் முன்னிலையான ஒரு வாழ்க்கையை வாழ்ந்திருந்தனர். ஆனால் இவர்கள் நோய்வாய்ப்படுவது மிகவும் அரிதாகவே காணப்பட்டது. வயது முதிர்ந்துதான் தான் அவர்கள் இறக்க நேரிடும் ஆனால் எந்த வகையிலும் அவர்களது உடம்பு குறைவதில்லை சோர்வடைவதில்லை திடகாத்திரமாகவே காணப்படுவர்.

**சித்த மருத்துவம்**

சித்த வைத்தியத்துறையிலே தமிழன் மிகவும் நம்பிக்கை கொண்டவன் இதனால் அன்றைய கால கட்டத்திலே மேலைத்தேய இரசாயன மருந்துகளைவிடுத்து சித்த வைத்தியத்தை நாடி மிகவும் ஆரோக்கியசாலிகளாகத் திகழ்ந்தனர். எனவே ஆண், பெண் இருபாலாரும் விவசாய வேலைகளில் ஈடுபட்டுக் கடின உழைப்பாளிகளாக இருந்தனர். தொடர்ந்து வேலை செய்யும்போது தேனீருக்குப் பதிலாக மருத்துவ குணமுள்ள இலைகளாக வல்லாரை, கொத்தமல்லி தூதுவளை போன்ற இலைகளை கஞ்சிபோல தயாரித்து அதிகாலையில் எழுந்த உடனே பருகி வருவதால் உடலுக்கு ஏற்படும் அசதி சோம்பல் ஏற்படாது மிகவும் ஆரோக்கியமாக வாழ்ந்தனர். அது மட்டுமல்ல பெண்கள் இரவு சோறு சமைக்கும் போது அரிசியைக் கூட போடுவார்கள் காலை உணவாக அதனைத் தயிர் விட்டோ அல்லது தேங்காய் பாலோ விட்டுக் கரைத்து எடுத்துச் செல்வர் அது ஆண்களுக்கு மிகவும் பிடித்தமானது ஒன்றாகும். பழங்கஞ்சி உடலுக்கு மிகவும் உகந்ததாகும். ஆனால் வேலையில்லாது வீட்டிலே முடங்குவது கிடையாது ஏன் கர்ப்பிணித் தாய்மாரைக் கூட நல்லவேலை செய்ய வேண்டும், நெல் குற்ற வேண்டும். மா இடிக்க வேண்டும் நன்றாக நடக்க வேண்டும் அப்போது தான் சுகப்பிரசவம் கிடைக்கும் என வயது முதிர்ந்தவர்கள் கூறுவார்கள். மகப்பேற்றின் போது கூட முருங்கைப் பட்டையுடன் வெந்தயத்தையும் வெள்ளைப் பூட்டையும் சேர்த்து அவித்துக் குடிக்கக் கொடுப்பார்கள் முருங்கைப் பூவைக் கூட அவித்துக் கொடுப்பார்கள் இதனால் எந்தவித ஆபத்துமின்றி குழந்தைகளைப் பெற்றெடுப்பர்.

மகப் பேறடைந்த தாயொருவருக்கு எமது மூதாதையர்களால் வழங்கப்படுகின்ற பத்திய உணவுகளை ஒரு மருந்துவிச்சி போல அருகிருந்து தவறாது கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். வயிற்றுப் புண் நீங்க காயம் என்ற பெயரில் அரைத்து வெறுவயிற்றிலே கொடுப்பர் ஆனால் தண்ணீர் மூன்று நாள்களுக்குக் கொடுக்கமாட்டார்கள்.

கொத்தமல்லி, வேர்க் கொம்பு , மஞ்சள், சின்னச் சீரகம், மிளகு வெள்ளைப் பூடு என்பவற்றை எடுத்து அம்மியில் அரைத்து அந்தக் கலவையுடன் முருங்கைப் பிஞ்சுடனோ அல்லது வாழைக்காயுடனோ சேர்த்துப் பழப்புளி விட்டுக் கறிசமைப்பர். தீட்டாத புழுங்கல் அரிசிச் சோற்றுடன் (கிச்சடி இது நன்றாக அவிய வேண்டும்) கொடுப்பர் குழந்தையும் பெற்ற தாயும் வெகு சிரத்தையுடன் பார்த்துக் கொள்வர். பிறந்த குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட நாள்களுக்குப் பின்பு எண்ணை தேய்த்துக் கை,கால்கள் என்பவற்றை இழுத்து நெஞ்சை அமர்த்தித் தலையை வட்டமாக வருமாறு அழுத்திப் பிடித்து இளவெயிலில் படுக்க விடுவர். இதனால் அவர்களுக்குத் தேவையான குருதிச் சுற்றோட்டம் போதியளவு கிடைப்பதால் அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே ஆரோக்கியமானவர்களாகவும் ஆற்றல் உள்ளவர்களாகவும வளர்கின்றனர்.

**பெண்களுக்கான உணவுகள்**

பெண்கள் பூப்படைந்து விட்டால் அவளுக்கு வழங்கப்படுகின்ற உணவுகள் வேறுவகையினதாகும். பச்சரியை மிதமான நீர் விட்டுக்" காய்ச்சி நல்லெண்ணெயில் கத்தரிக்காயைப் பொரித்துக் கொடுப்பர். அது மட்டுமல்ல கத்தரிக்காயை (பிஞ்சு) இடித்துப் பிளிந்து சாற்றையும் கொடுப்பர். வயிற்றில் உள்ள காயம் மாறுவதற்காக வேப்பிலையையும், மஞ்சளையும் சேர்த்து அரைத்து சிறு உருண்டையாக்கிக் கொடுப்பதுடன் புரதச் சத்து அதிகமுள்ள உழுந்து நல்லெண்ணெய் என்பனவற்றை அதிகமாகக் கொடுப்பர்.

பெரியவர்கள் சிறியவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் பலவிதமான நோய்களுக்கு வீட்டு வைத்தியம் அல்லது கைவைத்தியம் என்பனவற்றைக் கையாள்வார். எமது நாடு உஷ்ணப்பிரதேசமாக இருப்பதால் அடிக்கடி சளி ஏற்படுவது உண்டு. இதற்கு கைவைத்தியமாகத் தூதுவளை இலையுடன் கொத்தமல்லியைச் சேர்த்து அவித்துக் கொடுத்தல் கற்பூரவள்ளிச் சாற்றைக் கற்கண்டு கலந்து உண்ணக் கொடுத்தல் செவ்வரத்தைப் பூவை இடித்து அதன் சாற்றைக் குடிக்கக் கொடுத்தல் போன்ற கைவைத்திய முறையைக் கையாள்வார்.

காய்ச்சல் என்பது எல்லா நோய்களுக்குமுரிய பொதுவான ஒரு அறிகுறியே இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசரப்பட்டு நோவு கொல்லிகளைப் பாவிக்காது புளிக்கஞ்சிச் சாயம் என்பவற்றைக் கொடுத்து உடம்பு சோர்வடையாது பார்த்துக் கொள்வர். இவைகளுக்கு மாறாது விட்டால் சித்த வைத்தியரை நாடுவர்.

வயிற்றோட்டம் வருவது உடலுக்கு ஒவ்வாத ஒன்று உடலிற்குள் சென்றுவிட்டால் வயிற்றோட்டம் ஏற்படுவது உண்டு. அப்போது கைவைத்தியமாகத் தேயிலைச் சாயத்தில் தேசிக்காயைப் பிழிந்துவிட்டுத் தேனையும் கலந்து கொடுக்கும் போது வயிற்றைக் குளிரவைக்க முடியும். எனவும் ஓமத்தை வறுத்தெடுத்து அதற்குள் நீர்விட்டுக் கொடுப்பதாலும் வயிற்றோட்டத்தை நிறுத்துவர். பெரியவர்கள் சிறியவர்களிடையே காணப்படும் வயிற்றிலே உள்ள பூச்சிகளை இல்லாது ஒழிக்க வேப்பெண்ணையை நாளாந்தம் கொடுத்துவருவதால் பூச்சித் தொல்லை இல்லாமலே போய்விடும் என வேப்பெண்ணையினைக் கொடுப்பர். மேலும் பொக்குளிப்பான் (அம்மை நோய்) வந்தால் அவரைத் தனியான அறையில் வேப்பிலையால் படுக்கை அமைத்து அதில் படுக்க வைப்பர். வாசலிலேயும் வேப்பிலையைக் கட்டித் தொங்கவிடுவர். வேப்பிலையில் கிருமிகளை அழிக்கும் சக்தி இருப்பதாகவும் அதனால் அதனை இந்த நோயாளர்களுக்கு அவசியம் எனவும் கூறுவர். அந்த வீட்டில் எண்ணெச் சட்டி வைக்க மாட்டார்கள். இவர்களுக்கு மிளகாய் இல்லாதபடி வெண்டிக்காய் தீயல், இதரை வாழைப்பழம், இளநீர், தயிர் என்பவற்றைக் கொடுப்பர்.

சிலர் பனம் கள்ளில் வெங்காயத்தைக் கூடுதலாக வெட்டிப் போட்டு அது நன்றாக அவிந்த பின் அதனையும் கொடுப்பர். இதேபோன்று அனைத்து நோய்களுக்கும் கைவைத்திய முறையினையும் பத்திய முறையினையும் எப்போதும் கையாள்வதில் தவறமாட்டார்கள்.

**மூலிகை வைத்தியம்**

மூலிகை மருத்துவம் என்பது இயற்கையான மூலிகைகளின் மருத்துவ இயல்புகளைக் கொண்டு நோயுற்ற போதும் நோய் வருமுன்னும் அதனைப் பாவிப்பார்கள்.

என்னதான் விஞ்ஞானம் தன்னுடைய உச்சவளர்ச்சியைக் காட்டியுள்ள போதும் எமது மூதாதையரின் மூலிகை கைவைத்தியத்திற்கும் அவர்களின் பத்திய முறைக்கும் ஈடாகாது. ஆரோக்கியம் என்னும் போது தமிழரின் மருத்துவத்துக்கே செல்ல வேண்டும் அவர்களின் உழைப்பு நீண்ட ஆயுள், தேகாரோக்கியம், என்பன தற்போதுள்ள எமது மக்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்கள் ஆங்கில வைத்தியமுறைகளைக் கையாண்டு தேக சுகங்களை இழப்பதுடன் வீண் பணவிரயமும் அலைச்சலும் ஏற்படுவதுடன் அவர்களின் ஆயுளும் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. ஆகவே இயன்றளவு இயற்றையான கைவைத்திய முறைகளைக் கையாளப் பழக வேண்டும் நீண்ட ஆயுளும் தேகாரோக்கியம் பெற்று சுகமாக வாழ வேண்டும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# சிந்திக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது

வடக்குக் கிழக்குப் பகுதிகள் மீண்டும் போராட்டங்களால்தமது இயல்புநிலையைத்தொலைத்து நிற்கின்றன. காணாமற்போனவர்களின் நிலையை அறியத்தரக் கேட்டுஅவர்களின்உறவினர்களால்அழைப்புவிடுக்கப்பட்ட முழுஅடைப்புப்போராட்டம்வடக்குக்கிழக்கில்இன்று முழு அளவில் கடைப்பிடிக்கப்படுகிறது. இதுபோன்ற போராட்டங்கள்அண்மைக்காலங்களாகஇங்குவழக்கமாகிவிட்டன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கூட்டு அரசு பதவியேற்ற பின்னர் வடக்குக் கிழக்கில் இப்படி அடிக்கடி போராட்டங்கள்நடக்கின்றன. மகிந்தராஜபக்சவின்ஆட்சிக் காலத்தில் முற்றுமுழுதாக இராணுவ அடக்குமுறைக்குக் கீழ் அழுத்தப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மக்களுக்கு ஆட்சி மாற்றத்தின் பின்னர் கிடைத்திருக்கக்கூடிய ஒரு சுதந்திர வெளி இத்தகைய போராட்டங்களுக்கு உந்துசக்தியாக அமைந்திருக்கிறது என்றாலும்கூட, மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமையும்,நீதிநிலைநாட்டப்படாமையும், போரின்பின்னரான காலத்திலும் தமிழர்கள் புறக்கணிக்கப் பட்டமையுமே இத்தகைய போராட்டங்களுக்கு வழிவகுக்கின்றன என்பது புரிந்துகொள்ளப்படவேண்டியது.

இந்தப் போராட்டங்கள் தமிழ் மக்கள் தமது ஆதங்கத்தை, எதிர்ப்பை, கோபத்தை கொழும்பு அரசுக்கு வெளிக்காட்டுவதற்கானது. தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கும், தமக்கு நீதி வேண்டியும் அவை நடத்தப்படுகின்றன. ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் தலைமைகள் இல்லாமல் இயல்பூக்கமாக மக்களால் நடத்தப்படுபவை.

கொழும்புஅரசால்இந்தப்போராட்டங்கள்கண்டுகொள்ளப் படாமல்இருக்கும்போது அல்லது சொற்பத்தொகையினரே போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். இது ஒட்டு மொத்த மக்களினதும் கருத்து அல்ல என்று இந்தப் போராட்டங்களைக் கொழும்புபுறமொதுக்கும்போது, பரந்துபட்ட மக்கள்போராட்டங்களின்தேவை எழுகிறது. எனவேதான்கடையடைப்பு, முழு அடைப்பு என்று போராட்டங்கள் விரிவடைகின்றன. இன்றைய போராட்டமும் அப்படியேதான் நடக்கிறது.

இந்தப் போராட்டங்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுவது, போராட்டங்கள் எடுத்துக்கொண்ட விடயங்களை ஒட்டு மொத்தத் தமிழர்களும் ஆதரிக்கிறார்கள் என்கிற செய்தி கொழும்பைஎட்டவேண்டும்என்பதும்,அதற்கூடாகஇந்தப் போராட்டங்களைப் புறந்தள்ளிவிடாமல் கவனித்து, அக்கறைசெலுத்தித் தீர்வுகளைத் தரவேண்டும் என்பதும்தான்.

ஒட்டுமொத்தத் தமிழர்களினதும் குரல் இந்த விடயத்தில் ஓங்கிஓரணியில்ஒலிக்கும்போதே இதுசாத்தியமாகும்என்ற எதிர்பார்ப்பிலேயே இதுபோன்றமுழுஅடைப்புப்போராட்டங்கள்இடம்பெறுகின்றன. அவற்றுக்குப் பெரும்பாலானவர்கள் தமது முழு ஆதரவையும் வழங்குகிறார்கள்.

இங்கு சிந்திக்கப்படவேண்டிய விடயம் என்னவென்றால், இத்தகையஅடைப்புப்போராட்டங்களால்தமிழர்கள்வெற்றியைப்பெறும்அதேநேரத்தில், அதனால்பாதிப்பையும்அவர்களே எதிர்கொள்கிறார்கள் என்பதுதான். குறிப்பாகக் கடைகள் அடைக்கப்படும் போதும், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் முடங்கும் போதும், பாடசாலைகள் இயங்காதிருக்கும்போதும், போக்குவரத்து முடங்கும் போதும் அவற்றால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்பையும் தமிழர்களே எதிர்கொள்கிறார்கள்.

உரிமையை வென்றெடுப்பதற்கு இத்தகைய தியாகங்களை ஓர் இனம் பொறுத்துக்கொள்வது தேவையானதே, நியாயமானதே என்ற வாதம் ஏற்புடையது என்றாலும்கூட தமிழர்கள்நலிந்துபோயுள்ள இன்றைய நிலையில்நாம் ஏன்மாற்றுவழிகள் குறித்துச் சிந்திக்கக்கூடாது ?

எமது தேவையெல்லாம் கொழும்பு அரசுக்கும் உலக நாடுகளுக்கும் எமது கருத்தை வெளிப்படுத்துவதுதான். கடைகளை அடைத்து, அலுவலகங்களை மூடி, போக்குவரத்தை நிறுத்தி, பாடசாலைகளை முடக்கித்தான் அவற்றைச்செய்ய வேண்டுமா? ஓய்வு நாளில் அனைவரும் ஓரிடத்தில் ஒன்றிணைந்துஒருபெரும்சக்தியாகத்திரள்வதன்மூலமும்அதனைச் சாதிக்கமுடியும். நாம்செய்யவேண்டியதெல்லாம்அந்தஒரு நாளில் வீடுகளைவிட்டு வெளியே வரவேண்டியதுதான். அதுதான் உண்மையான போராட்டமாகவும் இருக்கும்.

# வடக்கின் கல்வித் தரம் உயர்வது எப்போது?

செல்வழகன்

இப்போதெல்லாம் வடக்கு மாகாணம் ஒவ்வொரு பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின்போதும் பேசுபொருளாகிவிட்டது. ஆறு பெருகி, செம்மனச் செல்விக்காக அணை கட்ட கூலியாளாக வந்த சிவபெருமானை மன்னன் தென்னவன் பிரமராயன் அடித்தபோது, அந்த அடி எல்லோர் முதுகிலும் பட்டதாக திருவாதவூரடிகள் புராணத்தில் படித்திருக்கிறோம். இங்கு வடக்கு மாகாணம் கல்வியில் அண்மைக் காலமாக இறுதி இடங்களில் நிற்கும் நிலையில், உரிய தரப்பினர்கள் அதற்கான பொறுப்பைத் தாம் ஏற்காது, ஒருவர் மாறி ஒருவர் மீது குற்றத்தைச் சுமத்தும் நிலையே காணப்படுகின்றது. தவறுகளில் இருந்து பாடங் கற்காத எந்தச் சமூகமும் முன்னேற்றம்காணமாட்டாது என்பதற்குவடக்கு மாகாண கல்விச் சமூகம் நல்லதொரு முன்னுதாரணம் எனலாம்.



மாணவர்களது கல்வித்திறன் பின்னடைவு கண்டிருக்கிறது என்றால், அதற்கான காரணங்களை தேடிக் கண்டறிவதற்குப் பதிலாக, நொண்டிச் சாட்டுகளை முன்வைத்துத் தாம் தப்பிப்பதிலேயே துறைசார்ந்தோரால் காலங் கடத்தப்பட்டு வந்துள்ளது. 2009 போரும், முள்ளிவாய்க்கால் அவலமும், எப்படி அரசியல்வாதிகளது இருப்புக்காக உச்சரிக்கப்படுகிறதோ, அதேபோன்றுதான் உலக வங்கியிடமும், ஏனைய கொடையாளிகளிடமும் கல்வி அதிகாரிகள் தப்பிப்பதற்கான உபாயமாகவும்அதே முள்ளிவாய்க் கால் அவலம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதன் விளைவே இந்தத் தொடர் பின்னடைவுகளுக்கு வித்திட்டுள்ளது.

இத்தகைய பின்னடைவுக்கு வடமாகாண கல்வியமைச்சர், அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு பெரிய பங்கு உள்ளபோதிலும், தனியே அவர்களைநோக்கிப் பந்தை எறிந்து விட்டு, எவரும் தப்பித்துவிட முடியாது. அவர்களது தந்திரோபாயங்கள், செயற்திட்டங்கள், மதிப்பிடல்களில் உள்ள குறைபாடுகள் இது விடயத்தில் முக்கியமானவையும் மூலாதாரமானவையுந்தான். ஆயினும், அவற்றை நடைமுறைப்படுத்தும் வலயக் கல்வி அலுவலக ஆளணியினர், பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள் முதலானோரின் ஆற்றல், அர்ப்பணிப்பு, தந்திரோபாய அணுகுமுறைகள் என்பனவும் இதில் முக்கியத்துவம்பெறுபவையே.

இந்த வருடமும் வடக்கு மாகாணம், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மாகாண மட்டத்தில் 9ஆவது இடத்தை வகிப்பதாகப் பரீட்சைத் திணைக்களத்தால் பட்டியலிடப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் 2 லட்சத்து 86ஆயிரத்து 251பேர்தோற்றிய இந்தப் பரீட்சையில் 2 இலட்சத்து 208 பேர் அதாவது 69.94 வீதமானோர் க.பொ.த. உயர் தரத்தில் இணைந்து கல்வி கற்கத் தகைமை பெற்றுள்ளனர்.

2009இல் 52.51 வீதமாக இருந்த க.பொ.த. உயர் தரத்துக்குச் சித்தி பெற்றவர்களது வீதம் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளமை தெரிகிறது. அதேபோல 2009இல் 2 ஆயிரத்து 38 பேர் (0.75%) எல்லாப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற நிலையில், 2016இல் அத்தொகை8ஆயிரத்து224பேராக (2.87%) அதிகரித்துள்ளது. அதேபோல 2009இல் 18 ஆயிரத்து 997 பேர் (6.98%) எல்லாப் பாடங்களிலும் சித்தியடை யத் தவறியுள்ளனர். இந்த நிலையும் வருடா வருடம் படிப்படியாகக் குறைந்துள்ளது. 2016இல் இத்தொகை 8 ஆயிரத்து 900ஆகக் (3.11%) குறைந்துள்ளது. இந்தப் புள்ளிவிவரம் இலங்கையில் க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறுகளின் உயர்வுப் போக்கை வெளிப்படுத்துகிறது. 2015இல் தென் மாகாணத்தில் க.பொ.த. உயர்தரத்துக்குத் தகுதியான மாணவர் தொகை 75.21 வீதமாக இருந்தது. 2016இல் இத்தொகை 76.66 வீதமாகும். வட மாகாணம் இரு வருடங்களிலும் இறுதி இடத்திலேயே இருந்துள்ளது. எனினும் 2015இல் 60.38 வீதமாக இருந்த இத்தொகை 2016இல் 60.66 வீதமாக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணம் ஒரு படி முன்னேறி 61.56 வீதமாக எட்டாவது இடத்தில் உள்ளது.

### மாவட்ட ரீதியிலான தரப்படுத்தலின் புள்ளி விவரங்கள்

மாவட்ட ரீதியான தரப்படுத்தலில் க.பொ.த. உயர்தரத்துக்குத் தகைமை பெற்றோர் வீதத்தில் 2015இல் கொழும்பு மாவட்டம் 76.08வீதத்துடன்முதலிடம்வகித்தது. எனினும் 75.97 வீதத்துடன் இரண்டாவது இடத்தை வகித்த மாத்தறை மாவட்டம் 2016இல் கொழும்பைப் பின்தள்ளி 78.25 வீதத்துடன் முன்னிலை வகிக்கிறது.

அடுத்த நிலைகளில் கொழும்பு, அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்கள் உள்ளன. 2015இல் வட மாகாண மாவட்டங்களான மன்னார் 10ஆம் இடத்தையும் (68.26%), வுவுனியா 16ஆம் இடத்தையும் (64.07%), யாழ்ப்பாணம் 21ஆவது இடத்தையும் (62.59%), முல்லைத்தீவு 24ஆம் இடத்தையும் (51.98%), கிளிநொச்சி 25ஆம் இறுதி இடத்தையும் (46.44%) வகித்தன. 2016இல் மன்னார் ஒன்பது இடங்கள் பின்னடைந்து 19ஆவது இடத்துக்கு (63.56%) வந்துள்ளது. -வவுனியா(65.35%), முல்லைத்தீவு (57.22%), கிளிநொச்சி(49.31%) என்பவைஅதேநிலைகளிலேயே உள்ளன. யாழ்ப்பாணம் ஒருநிலை முன்னேறி 20ஆம் இடத்தை (61.98%) அடைந்துள்ளது.

### வலய ரீதியிலான தரப்படுத்தல் நிலவரம்

வலய ரீதியிலான தரப்படுத்தலில் இலங்கையில் உள்ள 98 வலயங்களில் யாழ்ப்பாண வலயம் 46 ஆவது இடத்திலுள்ளது.

ஏனைய வலயங்களில் முறையே வடமராட்சி (56), மன்னார் (57), வவுனியா தெற்கு (59), வவுனியா வடக்கு(79), தென்மராட்சி(85), வலிகாமம் (89), முல்லைத்தீவு (84), மடு(91), தீவகம்(92), துணுக்காய் (93), கிளிநொச்சி (96) ஆகிய இடங்களில் உள்ளன.

இதில் பின்தங்கிய நிலையில் இருந்தவவுனியாவடக்கு, தீவகம், மடு, துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய வலயங்கள் முன்னேற்றம் கண்டுள்ளமை முக்கியமானதாகும். அரசியற் கெடுபிடிகளில் சிக்

கித் திணறும் கிளிநொச்சி வலயம் கடைசி நிலையில் நிற்கின்றது.

வடக்கு மாகாணம் விகிதாசார அடிப்படையில் சிறிய முன்னேற்ற அடியை எடுத்து வைத்துள்ளபோதிலும், ஏனைய மாகாணங்கள் அதைவிடப் பெரிய அடியை முன் வைத்து வடக்கைப் பின்தள்ளியுள்ளன.

இந்தச் சவாலை எப்படி முறியடிப்பது? அது பற்றி வடக்கு மாகாண சபையோ, மாகாணக் கல்வி அமைச்சோ, மாகாணக் கல்வித் திணைக்களமோ சிறிதேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. மாறாக, இதற்கு இவர்தான் காரணம் என்று பதவி நிலை அதிகாரிகள் ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டுவதிலும், அதனூடாகத் தாம் தமது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளும் உபாயத்தை வகுப்பதிலும், காலத்தைப் போக்குவதாகக் கல்வியியலாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.



*க.பொ.த. உயர் தரத்துக்குத் தகைமை பெற்றோர் தொடர்பான வலய ரீதியிலான தரப்படுத்தலில் இலங்கையில் உள்ள 98 வலயங்களில் யாழ்ப்பாண வலயம் 46ஆவது இடத்திலுள்ளது. ஏனைய வலயங்களில் முறையே வடமராட்சி (56), மன்னார் (57), வவுனியா தெற்கு (59), வவுனியா வடக்கு (79), தென்மராட்சி (85), வலிகாமம் (89), முல்லைத்தீவு (84), மடு (91), தீவகம் (92), துணுக்காய் (93), கிளிநொச்சி (96) ஆகிய இடங்களில் உள்ளன.*

ஆக, அடுத்த வருடமும் இந்த நிலையே தொடரக்கூடும். வெறுமனே புள்ளிவிவரக் கணக்குகளை வைத்துக் கொண்டு, அதற்கு நியாயங்களைக் கற்பிப்பதன் மூலம் முன்னேற முடியாது. பதிலாக, அனைவரும் ஒன்றிணைந்து செயலூக்கத்துடன் பணியாற்றும் சமூகக்கூட்டுநிலை உருவாக்கப்படவேண்டும்.

வடக்கு மாகாணம் 1980களின் ஆரம்பத்தில் இருந்து 2009 முள்ளிவாய்க்கால் அவலம் வரை பல்வேறு நெருக்கடிகளுடனேயே பயணித்துள்ளது. இருப்பினும் அது கல்வியில் முன்னிலை வகித்தே வந்திருந்தது. பொருளாதாரத் தடை, இராணுவ நெருக்குவாரங்கள் நிறைந்த, வசதி வாய்ப்புக்கள் அற்ற காலப் பகுதியில் குப்பி விளக்கொளி யில் கல்வீகற்று மாணவர்கள் உயர்பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர். இன்று அதில் தளர்வு வந்ததெனில் அதற்கான புறநிலைகள் எவை? அதற்கான தீர்வு என்ன? எனக் கண்டறிவது அவசியமானதாகும்.

### வடமாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு பணிச்சுமை அதிகமென கருத்து முன்வைப்பு

ஒப்பீட்டு ரீதியில் ஏனைய மாகாணங்களை விட வடமாகாணத்தில் ஆசிரியர்களுக்குப் பணிச்சுமை அதிகம் என்கின்றார் அண்மையில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர்.

"பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்துவிட்டன. கற்பிக்கும் பாடவேளைகள் பல தடவைகள் அடிபட்டுப் போகின்றன. பாடஞ் சார்ந்தும், சாராமலும் நடைபெறும் பல்வேறு போட்டிகள், பல்வேறு தினங்களின் கொண்டாட்டங்கள், பல்வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரல்கள் பாடசாலைகளில் திணிக்கப்படல் போன்றவற்றால் பல கற்பிக்கும் பாடவேளைகள் இழக்கப்படுகின்றன.

இதற்குள் ஆசிரியர்களின் சொந்த லீவுகளும் அடங்கினால், மேலும் பாடவேளைகள் இழக்கப்பட்டு விடும். ஆசிரியர்கள் கிடைக்கும் நேரத்தில் கற்பிக்கலாமென்றால் மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள், வேறு நிறுவனங்க ளின் செயலட்டைகள் கட்டுக் கட்டாக வந்திறங்கும். அதற்குள் மதிப்பீடு என்ற பெயரில் பரீட்சைகள் நடக்கும். ஆசிரியர்களுக்கும் எதுவும் செய்ய முடியாத நிலை. மாணவர் நிலையோ மேலும் பரிதாபம். எது செயலட்டை? எது மதிப்பீடு? எது தவணைப் பரீட்சை? எது இறுதிப் பரீட்சை? என்று தெரியாது சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த மாதிரி அச்சடித்த தாள்களைப் மாணவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் நிலையே உள்ளது என்று விபரித்தார் அந்த ஆசிரியர்.

கல்வித் திணைக்களம் கையேடுகள், ஒப்படைகள் என மதிப்பீடுகளை அனுப்பி வைத்தும், ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அவர்களைக் கற்பித்தலுக்கு மேலாக இத்தகைய வேலைகளில் ஈடுபடுத்துவதால் மாணவர்களது கற்றல்செயற்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாக நேரிடுகிறது.

பிள்ளைகளை மேலதிக வகுப்புக்களில் ஈடுபடுத்துவதிலும் பெரும் பிரச்சினை உள்ளது. அவர்கள் தனியார் கல்வி நிறுவன வகுப்புக்களுக்குச் செல்லவேண்டும் என்று கூறி மேலதிக வகுப்புக்களுக்குப் பின்னடிக்கிறார்கள். அதைவிடச் சிறுவர் உரிமைப் பிரச்சினைகள் என்று பலதும் உள்ளன என மற்றொரு அதிபர் தங்கள் தரப்புச் சிரமங்களை விவரித்தார். "மாகாண கல்வித் திணைக்களம் பல செயலட்டைகளை வெளியிட்டு, மதிப்பீட்டுப் பரீட்சைகளை வைக்கிறது. நிலையறி பரீட்சை, அலகுப் பரீட்சை என வலயக் கல்வி அலுவலகங்களும் பரீட்சைகளை வைக்கின்றன. தர வட்டங்கள், செயலமர்வுகள் என்பவற்றையும் வைக்கின்றன. அந்தப் பரீட்சைகளில் மாணவர்கள் எவ்வாறு விடையளிக்க வேண்டும் என்பதை மாகாண, வலயக் கல்வி அலுவலகங்கள் தெளிவுபடுத்துகின்றன. பாடசாலைகள் அதன்படி நடந்து கொண்டாலும், பரீட்சைத் தோல்விக்கு மட்டும் பாடசாலையைப் பொறுப்பாக்கிவிட்டு இந்த அலுவலகத்தில் உள்ளவர்கள் தாம் தப்பிக்கின்றனர். உண்மையில் பரீட்சைத் தோல்விக்கு முழுமையாக மாகாண, வலயக் கல்வி அலுவலகங்களே பொறுப்பேற்கவேண்டும்என்றுவிவரித்தார் பாடசாலை அதிபரொருவர்.

ஆனால் கல்வித் திணைக்களமும், வலயக் கல்வி அலுவலகங்களும் மேலும் மேலும் பரீட்சைகளைத் திணித்துவிட்டு, ஆசிரியர்கள் தமது அறிவுறுத்தல்களைப் பின்பற்றாததால்தான் மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையவில்லை என ஆசிரியர்களைக் குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனால் அளவுக்கதிகமான திணிப்பின் மூலம் எதுவும் நடக்கப் போவதில்லை.

பரீட்சையின் நோக்குக்கு அமைய பாட உள்ளடக்கத்தை மாணவர் விளங்கிக் கொள்ளும் வகையில் கொடுப்பதே சிறந்தது. ஆனால் சில பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்களின் அக்கறையின்மையால் செயலட்டைகள் கட்டுக் கட்டாக அலுமாரிகளில் தூங்கிக் கிடந்ததையும் மறுப்பதற்கில்லை. அப்படியானால் என்னதான் செய்யலாம்?

### கூட்டுச் செயற்பாடு அத்தியாவசியமானது

இங்குதான் எல்லோரையும் பங்குதாரர்களாகும் கூட்டுச்செயற்பாடு அவசியமாகும். முதலில் பரீட்சைப் பெறுபேறுகளை வைத்துக்கொண்டு வீழ்ச்சி நிலையை மதிப்பிடவேண்டும். அவற்றில் குறைபாடுகள் இருக்கும். குற்றச்சாட்டல்கள் இருக்கும். எனினும் அவற்றில் ஆரோக்கியமானவை என்று கருதும் விடயங்களைக் கணக்கில் எடுக்கவேண்டும்.

அடுத்து பாடசாலை தோறும் உள்ள தரம் 11 இல் தோற்றவுள்ள மாணவர்களது நிலையை தரம் 10இல் இருந்த அவர்களது மூன்று தவணைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆராயவேண்டும். இந்த ஆய்வின் பின் நல்ல பெறுபேற்று நிலைமைகள் உள்ள சில பாடசாலைகளை விட்டுவிட்டு, கவனத்தைக் குவிக்க வேண்டிய பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளித்து, அப்பாடசாலைகளில் வேலைத் திட்டங்களை முன் வைக்கவேண்டும். எனினும் எல்லாப் பாடசாலைகளினதும் முன்னேற்ற நிலைமை ஆராயப்பட வேண்டும்.

வலய மட்டத்தில் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அக்குழுக்கள் சினேகபூர்வமான சந்திப்புக்களை அதிபர், ஆசிரியர்களுடன் மேற்கொள்ளவேண்டும். அச்சந்திப்புக்களில் பாடசாலை தன்னிடம் உள்ள வளங்களைப் பயன்படுத்தி என்னென்ன வேலைகளைச் செய்யலாம்? வலயக் கல்வி அலுவலகம் வெளிவளங்களை பாடசாலைக்கு வழங்கி எவ்வாறு வலுவூட்டலாம்? என்பவை பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டும். வேறு பாடசாலை ஆசிரிய வளங்களை மாறிப் பயன்படுத்துதல், பல்வேறு கற்பித்தல் உத்திகளைக் கையாண்டு கற்பித்தல், பாடசாலையின் உள்ளக மதிப்பீட்டை வலுப்படுத்தல், ஆசிரியர்கள் பெறுபேற்று விளைவு சார்ந்து ஊக்குவிக்கப்படுதல் போன்ற பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மாகாணக் கல்வித் திணைக்களமும் வலயங்களுடன் இணைந்து மதிப்பீடுகளைச் செய்யவேண்டும். நிறுவனங்களது தலையீடுகள் அனுமதிக்கப்படலாகாது. அத்துடன் மாணவர்கள் பாடசாலையில் நம்பிக்கை வைக்கும் புறநிலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். குறிப்பாக தனியார் கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறான வேலைத் திட்டங்களை மாணவர் நலன் சார்ந்து செயற்படுத்தும்போது, வடக்கின் பெறுபேற்றையும் உயர்த்த முடியும். வெறுமனே பிள்ளைநேய அணுகுமுறை பற்றிப் பேசிக் கொண்டு, பிள்ளைநேயமற்ற வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பயனேதும் விளையப் போவதில்லை.





## வாசகர் திருமுகம்

### பதறாத காரியம் சிதறாது

எத்தகைய இடர்களைச் சந்திக்க நேர்ந்தாலும், மனது சளைக்காது அவற்றுக்கு முகம் கொடுத்து தமது துணிச்சல், விடாமுயற்சியால் இடர்களில் வெற்றி காண்பவர்கள், வடபகுதித் தமிழர்கள் எனக் கூறப்படுவதுண்டு. யாழ். குடாநாட்டு நிலத்தடி நீர் தொடர்ச்சியாக மாசடைவது காரணமாக குடாநாட்டு குடிதண்ணீர் தேவை எதிர்காலத்தில் பற்றாக்குறைக்கு உட்படவுள்ளதாக துறைசார் வல்லுநர்கள் எச்சரித்து வருகின்றனர். வருமுன் காக்கும் நோக்கில் குடாநாட்டின் எதிர்காலக் குடிதண்ணீர்த் தேவையை ஈடு செய்ய கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கு நீர் விநியோகிக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டபோதிலும், அதனால் கிளிநொச்சி மாவட்ட விவசாய முயற்சி பாதிப்புறுமென சுட்டிக் காட்டப்பட்டது. எம்மவர்கள் இத்தகைய பொதுநலன்சார் திட்டங்களில் குறை கண்டு பிடிப்பதில் வல்லவர்கள் என ஒருபுறம் விமர்சனங்கள் எழுந்தாலும், குற்றச்சாட்டை மறுத்துரைக்க முடியாது போயிருந்தது. இதற்கு மாற்றீடாக வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கடல்நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது. ஆயினும் அதன் மூலம் கடற்றொழில் மேற்கொள்வோர் காலப்போக்கில் பாதிப்புற நேருமென முன்வைக்கப்பட்ட கருத்து வலுப்பெற்றதையடுத்து, இந்தத் திட்டத்தைக் கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்திவரும் ஆஸ்திரேலியாவுக்கு துறைசார் வல்லுநர் குழுவொன்று நேரில் சென்று குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் குறித்த ஆராய்ந்து முடிவெடுக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெரும் நிதிச் செலவில் பல ஆண்டுகள் காலத்துக்குப் பயன்பெறும் எதிர்பார்ப்புடன் மேற்கொள்ள முயலும் இத்தகைய திட்டங்களால் பக்க விளைவுப் பாதிப்புக்கள் ஏற்படமாட்டாது என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டிய கடப்பாடு குடாநாட்டு மக்களாகிய எமக்குண்டு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எமக்கான நலத்திட்டங்கள் எமக்கு நீண்டகாலப் பயன்நல்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு குறித்த திட்டத்தை முன்னெடுப்பதால் எமது மக்களுக்கு ஒரு திருப்தி கிட்டுமல்லவா? எதற்கும் பதறாத காரியம் சிதறாது என்ற பழமொழி எமக்கு முன்னுதாரணம் அல்லவா?

பொ.பாலசுந்தரம், உடுவில்.

# சமந்தாவையும் இப்படி ஆக்கிட்டாங்களே?



அழகான நடிகைகளை எல்லாம் கொடூரமாக மேக்கப் போட்டு பேயாக்கும் இயக்குநர்கள், சமந்தாவையும் விட்டு வைக்கவில்லை. வருங்கால மாமனார் நாகர்ஜுனாவுடன் நடிக்கும் படத்தில் பேயாக நடிக்கிறாராம் சமந்தா.
அஸ்வின் பாபு, தன்யா பாலகிருஷ்ணா நடித்து 2015 இல்வெளியானதெலுங்குப்படம், ராஜு காரிகாதி. ஓம்கர் இயக்கியிருந்த இந்த பேய் படத்தின் இரண்டாம் பாகம் இப்போதுஉருவாகிறது. இதில்நாகர்ஜுனா, சமந்தா, சீரத் கபூர்உட்படப்பலர்நடிக்கின்றனர். ஓம்கார் இயக்குகிறார். பிவிபி சினிமாஸ் தயாரிக்கிறது.
பொதுவாக நடிகைகள் எல்லோருக்கும் பேயாக நடிக்கும் ஆசைஇருக்கும். இதை, த்ரிஷா உட்பட பலநடிகைகள்தெரிவித்திருக்கிறார்கள். அந்த வரிசையில்சமந்தாவுக்கும்அந்த ஆசை இருந்ததாம். அது இந்தப் படத்தின் மூலம் நிறைவேறி இருக்கிறது என்கிறார்.

Pinned Tweet
கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar

ஒருநாள் நாமும் இறப்போம்.
இரங்கல் செய்திகளாய் வரும்.
பின்பு மறக்கப்படுவோம்.
அப்போதும்பூமிசுழன்றுகொண்டுதானிக்கும்....










## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** நேர்மைஎண்ணத்துடன்செயற்படுவீர்கள். சிறிய பணியும், பலமடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்:** சுயநலத்துடன் சிலர் நட்பு பாராட்டலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், திடீர் செலவால்சிரமப்படுவர்.

**மிதுனம்:** இனிய நிகழ்வால் மனதில் உற்சாகம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் இருப்பர்.

**சிங்கம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டி நெருங்குவர். பணி யாளர்கள், சுதந்திர உணர்வுடன் பணியாற்று வர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். உடல்நிலைதிருப்தியளிக்கும்.

**கன்னி:** திட்டமிட்டுசெயல்பட்டுவளர்ச்சிகாண்பீர்கள். தொழில், வியாபாரத்தில்பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, சகஊழியர்களின்ஆதரவுகிடைக்கும். மாமன் மைத்துனருக்கு உதவி செய்வீர்கள்.

**துலாம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். சேமிப்பு உயரும். பணியாளர்களுக்கு, விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைப்பதில் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில்முன்னேறகூடுதல்உழைப்பு அவசியம். லாபம்சுமாராகஇருக்கும். பெண்கள், ஆடம்பரஎண்ணத்துடன்செயற்படுவர்.

**தனுசு:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். மனைவிவிரும்பியபொருளைவாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம்உயரும். பணியாளர்கள், பணிச்சுமையைச்சந்தித்தாலும், வருமானம்அதிகரிக்கும்.

**கும்பம்:** பிறரைக்குறைசொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர். உடல் நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** ஆரோக்கியம் மேம்படும். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், பெண்களுக்கு, தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 3 | | 5 | | | | |
| 5 | | | | | | 8 | 7 | |
| | 6 | | | 7 | | | | 5 |
| | | 4 | 1 | | | | | 7 |
| | 5 | | 9 | 4 | 6 | | 1 | |
| 3 | | | | | 7 | 6 | | |
| 2 | | | | 8 | | | 4 | |
| | | 5 | | | | | | |
| | | | | 9 | | 7 | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 | 7 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 4 | 1 | 9 | 8 |
| 4 | 6 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 |
| 7 | 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 4 | 2 |
| 5 | 8 | 2 | 7 | 4 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 7 | 4 | 8 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




**நோயாளி:**
டாக்டர் ஹார்ட் ஆபரேஷனுக்கு எதுக்கு கோடாரி, கடப்பாரை எல்லாம் எடுத்துட்டு வர்றீங்க...?

**டாக்டர்:** நீங்க ஒரு கல் நெஞ்சுக்காரர் என்று சொன்னாங்க... அதான்!

**நோயாளி:** ?????

# சித்திரை மாத பலன்

## தனுசு

நேர்மையாகவே அனைத்துக்காரியங்களையும் சாதித்து கொள்ளும் தனுசு ராசி அன்பர்களே, நீங்கள் சோம்பலை ஒதுக்கி விடுவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். இந்தக் காலகட்டத்தில் மன உறுதி அதிகரிக்கும். சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உயர்நிலையில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேலோங்கும். வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். வீட்டுக்குத் தேவையான வசதிகள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு வாங்குவதற்கான தடைகள் அகலும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். புதிய வாடிக்கையாளர்கள் தொடர்பு உண்டாகும். பழைய சிக்கல்கள் தீர்வதில் தாமதம் ஏற்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. திறமையான செயற்பாட்டால் பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்துச் செல்வது நல்லது. குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும். அவர்களுக்காகப் பாடுபடுவீர்கள். அக்கம்பக்கத்தினருடன் பேசும்போது கவனம் தேவை. பெண்கள் திட்டமிட்டுச் செய்தாலும் காரியங்களில் தடை ஏற்படும்.

எதிலும் முழுக் கவனத்துடன் ஈடுபடுவது நன்மையைத் தரும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வீண் அலைச்சல் ஏற்படலாம். ஆனாலும் மனதில் இருந்த குழப்பம் நீங்கி நிம்மதி உண்டாகும். கடன் பிரச்சினை தீரும். அரசியல்துறையினருக்கு நீங்கள் அவசரப்படாமல் நிதானமாக எதையும் செய்தால் வெற்றி நிச்சயம். இந்தக் காலகட்டத்தில் எதிர்ப்புக்கள் விலகும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பும் அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். ஏற்கனவே செய்த ஒரு செயலை நினைத்து வருந்த நேரிடும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விடயங்கள் தாமதமாக நடக்கும். புதிய நட்புகள் கிடைக்கும்.

**பரிகாரம்:**
சித்தர்களை வணங்கிவர போட்டிகள் குறையும். மனம் தெளிவடையும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

## மகரம்

வாக்குவாதத்தில் திறமையுடைய அதே வேளையில் மனசாட்சிக்கும் இடம் கொடுத்து நடக்கும் மகர ராசி அன்பர்களே, இந்தக் காலகட்டத்தில் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரியத்தடை, தாமதம் ஏற்படலாம். உஷ்ணம் சம்பந்தமான நோய் ஏற்படும். வீண்பயம் ஏற்படும். ஏற்கனவே செய்த காரியங்களுக்கான பலனை அடைய வேண்டியிருக்கும். சிலர் வீட்டை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடலாம். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாகச் செயற்படுவது நல்லது. வெளிநாட்டுப் பயண வாய்ப்புகள் வரலாம். சிலர் வெளியூர்ப் பயணம் செல்வார்கள். எதிர்பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். கவனமாகச் செயற்படுவது நல்லது.

கடன் தொல்லை தலைதூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். தடைப்பட்டிருந்த பணம் கைக்கு வந்து சேரும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. பெண்களுக்கு எதிலும் தேவையற்ற வீண் கவலை உண்டாகும். பயணங்கள் செல்ல நேரிடலாம். கடன் விடயங்களில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். நண்பர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம். அரசியல் துறையினருக்கு மனம் வருந்தும்படியான சூழ்நிலை உருவாகலாம். மேலிடம் நீங்கள் சொல்வதைக் காதில் வாங்காதவர்போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதாலேயே நன்மை உண்டாகும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும். நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பயனைத் தரும். மாணவர்கள் மிகவும் கவனமாகப் பாடங்களைப் படிப்பது அவசியம். சக மாணவர்களுடன் நிதானமாகப் பழகுவது நல்லது.

**பரிகாரம்:**
ஆஞ்சநேயரை வணங்கிவர எல்லா நன்மைகளும் உண்டாகும். மனக்குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1521- கண்டு பிடிப்பாளர் பேடினன்ட் மகெலன் பிலிப்பைன்சில் லாபுலாபு தலைமையிலான பிலிப்பைன்ஸ் ஆதிவாசிகளால் கொல்லப்பட்டான்.
1565 - பிலிப்பைன்சில் முதலாவது ஸ்பானிய குடியிருப்பாக சேபு ஸ்தாபிக்கப்பட்டது.
1570 - முதலாம் எலிசபெத் மகாராணி வைதீகம் சாராதவர் எனத் தெரிவிக்கப்பட்டார்.
1865 - சுல்தானா நீராவிக் கப்பல் 2400 பயணிகளுடன் சென்றவேளை வெடித்து மிசிசிப்பி நதியில் மூழ்கியதில் 1800 பேர் சாவடைந்தனர்.
1906 - ரஷ்ய பேரரசின் கீழ் சட்டசபையான டூமா முதன் முதலாகக் கூடியது.
1941 - இரண்டாம் உலகமகா போரில் ஜேர்மன் துருப்புகள் எதென்ஸ் பிரவேசித்தது.
1945 - ஜேர்மனிய படை வீரராகப் பாவனை செய்து தப்ப முயன்றவேளை பொனிட்டோ முசோலினி இத்தாலிய படைகளால் பொங்கோவில் கைது செய்யப்பட்டார்.
1961 - சியாரா லியோன் ஐக்கிய ராஜ்யத்திடமிருந்து சுதந்திரம் பெற்றது. மில்ரன் மார்கல் பிரதமரானார்.
1967 - ஒக்ஸ்போ 67 உத்தியோக பூர்வமாக கனடா கியூபெக் மொன்றியலில் திறந்து வைக்கப்பட்டது. திறப்புவிழா நகழ்வு உலகம் முழுவது ஒளிபரப்பப்பட்டது.
1974 வோஷிங்டன் நகரில் ஆயிரக் கணக்கானோர் அமெரிக்க அரசதலைவர் நிச்சாட் நிகஸனுக்கு எதிராகப் பேரணி நடத்தினர்.

## நாளை

**சித்திரை-15**
வெள்ளிக்கிழமை -28.04.2017
திதி: துதியை பி.ப.01.45
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.04.50
சுபநேரம்:05.58-07.28 வரை
ராகுகாலம்:10.28-11.58 வரை

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

## தந்தை செல்வா...

தந்தை செல்வா நினைவுநாள் நிகழ்வு கொழும்பில் நேற்று மாலை நடைபெற்றது. நினைவுபேருரையை ராஜித சேனாரத்ன நிகழ்த்தினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தந்தை செல்வா கூட்டாட்சியைத் தீர்வாக முன்வைத்தார். அந்த முயற்சிகள் தோல்வியடைந்தது. இதனால் வேறு தெரிவுகள் இல்லாமல் அவர் தமிழீழக் கோரிக்கையைத் தெரிவு செய்தார். இதற்கு இரண்டு முதன்மை சிங்களக் கட்சிகளே காரணம். இன்னமும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்தான்.

மாறி மாறி மூன்றாம் தர கீழ்த் தரமான அரசியலை அவர்கள் செய்தனர். அவர்கள் மட்டுமல்ல, பாரம்பரியமான இடதுசாரிக் கட்சிகளும்கூட ஆரம்பத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காக பேசினாலும், பின்னர் இனத்துவேச அரசியலில் ஈடுபட்டனர்.

இதற்கு நான் பொறுப்பில்லை என்று சொல்ல முடியாது. நானும் பொறுப்பாளிதான். இவை நடக்கும் போது நான் மாணவன். நான் என்னுடைய அரசியலை விஜயகுமார ணதுங்கவின் தலைமையில்தான் தொடங்கினேன். தமிழ் மக்களின் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்தேன். இதற்காக மக்கள் விடுதலை முன்னணியினர் என் மீது தாக்குதல் நடத்தினர். இன்றும் எனது உடம்பில் இரண்டு குண்டுச் சிதறல்களுடனேயே நான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவை தமிழ் மக்களுக்காக நான் குரல் கொடுத்தமைக்காக கிடைத்தவை. இதனை நான் கௌரவப் பரிசாகவே கருதுகின்றேன்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தால் சிங்கள மக்களின் வாக்குகள் குறைந்து விடும் என்று சொல்கின்றார்கள். நான் களுத்துறை மாவட்டத்தில் 2004ஆம் ஆண்டு போருக்கு எதிராகக் குரல் கொடுத்தேன். 70 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. தமிழ் மக்களின் உரிமைக்காக அதன் பின்னர் குரல் கொடுத்தேன். 2010ஆம் ஆண்டு ஒரு லட்சமாக அதிகரித்தன. அதன் பின்னர் முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்தேன். ஒரு லட்சத்து 40 ஆயிரமாக வாக்குகள் அதிகரித்தன. இதனைச் சிங்களத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் கூட்டாட்சி வேண்டும் என்று கோருவதால், அது சிங்கள மக்கள் மத்தியில் தவறான பரப்புரையாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கூட்டாட்சி என்பது பிரிவினை என்று சிங்கள மக்கள் அஞ்சுகின்றார்கள். சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனைச் செய்ய வேண்டும்.

அதிகாரங்கள் என்பது மையத்தில் இருக்கக் கூடாது. கூட்டாட்சி இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்குத் தேவை. தீர்வைக் காணும் நடவடிக்கைகள் மந்த கதியில் இருக்கின்றமை உண்மைதான். இப்போது சரியான தீர்வைக் காண வேண்டும்.

'இரண்டு தேசங்கள் இந்த நாட்டை ஒரு தாய் நாடாக ஏற்பதற்கு, இரண்டு தேசங்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

அதிகாரங்கள் பகிரப்பட்டால்தான் இரண்டு தேசங்களும் சிநேகபூர்வமாக இந்த நாட்டில் வாழலாம்' என்று தந்தை செல்வநாயகம் குறிப்பிட்டிருந்தார். அது சரியானது. தந்தை செல்வா கூறிய கூட்டாட்சி முறைமைதான் எமது நாட்டுக்குப் பொருத்தமானது என்றார். (வ-5)

## பன்னாட்டுத்...

வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பன்னாட்டுத் தீவிரவாதத் தையும் கையாளும் வகையில் இந்தப் புதிய பாதுகாப்புச் சட்டம் அமையவுள்ளது.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வழங்குவதா இல்லையா என்பது குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில் அரசின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான சட்டவரைவை முன்வைத்தார். அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் கைவிடப்பட்டிருந்தது. இந்தச் சலுகையை மீள வழங்குமாறு கோரி ஐரோப்பிய ஒன்றியத்திடம் தற்போதைய மைத்திரி அரசு விண்ணப்பித்திருந்தது.

இந்தச் சலுகையை மீள வழங்குவதற்கு ஒரு தொகுதி நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது. அதில் முக்கிய நிபந்தனைதான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றியமைத்தல்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்குவது குறித்து இன்று வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில் 52 ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்கக் கூடாது. இலங்கை இன்னமும் முன்னேற்றகரமான நடவடிக்கைளை மனிதவுரிமைகள் விடய்த்தில் எடுக்கவில்லை என்று வலியுறுத்தி கடந்த வாரம் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

புதிய பயங்கரவாத சட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. குறித்த சட்ட வரைவின் பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பான முன்மொழியப்பட்ட சட்டத்தை வரைவதற்குச் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ராஜித மேலும் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேவைக்காக நாங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்கவில்லை. உலகில் எல்லா நாடுகளும் தற்போது புதிய பாதுகாப்புச் சட்டங்களாக மாற்றியமைத்து வருகின்றன. உலகில் தீவிரவாதம் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

அதற்கு ஏற்றாற்போல் பன்னாட்டு தீவிர வாதத்தையும் கையாளும் வகையில் இலங்கையின் புதிய பாதுகாப்புச் சட்டம் அமையவுள்ளது.

இந்தச் சட்டவரைவுக்குப் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பும் இணக்கம் தெரிவித்துள்ளது. புதிய பாதுகாப்புச் சட்டம் தற்போது உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் விட அதிகமான அதிகாரம் கொண்டது. ஆனால், அதற்கு ஒரு பொறிமுறை உள்ளது. அதில் கைதுசெய்யப்படுதல், விசாரணை செய்தல் என்பன கொள்கை வகுப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் - என்றார். (த-4)

## இன்றைய...

யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ்ப்பாண பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்
வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்
வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம்
வடக்கு மாகாண ஆசிரியர் ஆலோசகர் சங்கம்
வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம்
தமிழ் மக்கள் பேரவை
இலங்கை ஆசிரியர் சங்கம்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
வவுனியா நகர சிறு வியாபாரிகள் சங்கம்
வவுனியா வர்த்தக சங்கம்
கிளிநொச்சி வர்த்தக சமூகம்
வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம்
ஒட்டுசுட்டான் வர்த்தக சங்கம்
புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம்
அம்பாறை முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு
அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு
அகில இலங்கை பொது ஊழியர் சங்கம்
யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
வவுனியா மாவட்ட சமூக விழிப்புணர்வு மக்கள் அமைப்பு
அனைத்து மதப் பேரவை
கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
வீணாகான குருமார் பீடம்
வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு
கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு
முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்
திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்
மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்
அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்
இளைஞர் திறன் விருத்தி அமையம்
கிளிநொச்சி மாவட்ட அந்தணர் ஒன்றியம்
கரைச்சி கிராம,கிராமமாதர் அபிவிருத்தி சமாசம்
கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்பு
வடமராட்சி கிறஸ்தவ ஒன்றியம்
தருமபுரம் மனிதம் சர்வமத அமையம்
பச்சிலைப்பள்ளி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
கல்முனை மாணவர் மீட்பு பேரவை
வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம்
சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்

## கூட்டுப்படை...

சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இராணுவக் கூட்டுப் படைகளின் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார். இதற்கான யோசனையொன்றை அரச தலைவர் முன்மொழிந்துள்ளார். அதற்கு பொன்சேகாவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு ஏற்படுத்தப்பட்டதற்கு முக்கிய காரணம் இந்த நாட்டில் வாழும் சாதாரண மக்களின் அபிலாசைகளை நிறை வேற்றுவதற்கே. ஆனால், கூட்டரசைச் சிலர் தமது அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்தப் பார்க்கின்றனர். தற்போது எதற்கெடுத்தாலும் நாட்டில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இதன் காரணமாக அனைத்துத் தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் இதற்கு ஏற்பட்டுள்ள சூழலைக் கட்டுப்படுத்த அரசுக்கு முதுகெலும்பு இல்லை என்று சிலர் கூறுகின்றனர். அதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கும் வகையிலேயே சரத் பொன்சேகாவுக்கு இராணுவக் கூட்டுப்படைகளின் தளபதி பொறுப்பு வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டங்கள் நடைபெறுவதால் பொருளாதார ரீதியாகவும் பெரும் பின்னடைவு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் சீர்ப்படுத்தும் தேவையும் அரசுக்கு உள்ளது. எனவே, இரண்டு வருடங்களுக்கு அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொன்சேகாவிடம் நேற்றைய (நேற்றுமுன்தினம்) அமைச்சரவை கூட்டத்தின்போது கோரினார்.

அவரும், புதிய பதவிக்கான போதியளவு அதிகாரங்கள் தமக்கு வழங்கப்படுமானால் பதவித் துறக்கத் தயார் என்று கூறினார். பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய உயரிய பதவி அல்லது முப்படைகளின் தளபதி என எந்தவொரு பதவி வேண்டுமானாலும் அவருக்கு வழங்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கக் கூடிய தகுதீ அவரிடத்தில் காணப்படுவதாலேயே அரச தலைவரால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்துப் பயப்படவேண்டியத் தேவையில்லை. அவர் இவ்வாறான உயரிய பதவி வகித்தாலும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச செயற்பட்டதைப் போன்றெல்லாம் ஒருபோதும் செயற்படமாட்டார். அதற்கு நாம் அனுமதி அளிக்கவும் போவதில்லை.

எம்மைப் பொறுத்தவரை ஆர்ப்பாட்டங்கள் நடத்தவோ அல்லது அரசுக்கான எதிர்ப்பை ஏனையோர் வெளியிடவோ ஒருபோதும் தடை விதிக்கப் போவதில்லை. ஆனால், நாட்டின் பாதுகாப்பு என்று வரும்போது மேற்கண்ட அனைத்து விடயத்திலும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலையாமல் அவற்றை நிலைநாட்டும் வகையில் தான் நாம் அமைச்சர் சரத்பொன்சேகாவுக்குப் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய பதவி வழங்கப்படவுள்ளது-என்றார்.

(த-4)

## இலங்கை...

இலங்கை இந்தியத் தலைமை அமைச்சர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த உடன்பாட்டின் அடிப்படையில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 10 பிரதேசங்களின் வர்த்தக மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள 10 உடன்படிக்கைகள் இந்தியாவுடன் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் இந்திய அரசுடன் எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடும் இறுதித் தீர்மானத்தை எடுக்கவா தலைமை அமைச்சர் இந்தியா சென்றுள்ளார் என்று ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு ராஜித பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு வரும்போதுதான் எட்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் என்று தகவல் பரவியுள்ளது. இது அடிப்படையற்ற பொய். அவருக்கு அதற்கான நேரமே இல்லை. இலங்கைக்குக் காலையில் வருகை தந்து வெசாக் நிகழ்வுகளைப் பார்வையிட்டு டிக்கோயாவுக்குச் சென்று பின்னர் உடனடியாக இந்தியாவுக்குத் திரும்பவுள்ளார். இதற்கிடையில் எப்படி ஒப்பந்தங்களில் அவரால் கைச்சாத்திட முடியும்?

நாம் தான் ஒப்பந்தங்களைச் செய்துக் கொள்ள முனைகின்றோமே ஒழிய இந்தியாவோ அல்லது ஜப்பான், சீனா போன்ற நாடுகள் எம்முடன் ஒப்பந்தம் செய்துகொள்ள அழைக்கவில்லை. ஏனெனில், அந்தளவுக்கு எமது நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடையவில்லை.

இன்று (நேற்று) தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எதிர்காலத்தில் 10 உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்படவுள்ளன.

குறித்த 10 உடன்படிக்கைகளும் 10 பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பிலேயே துறைசார் அமைச்சர்களுடன் செய்துக்கொள்ளப்படும்-என்றார்.

(த-4)

## ஆதன பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 20. கலீபா அப்துல் காதர் வீதி. ஆதன இல:- 61/9 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அபூபக்கர் பெண் நாச்சியாவின் உரிமையாளர்களும் மற்றவர்களும் எனும் பெயரில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தைச் சுபைர் கைம்பெண் ஜலிலா. இல.27/1. நாவலர் வீதி. யாழ்ப்பாணத்தையும், தற்போதைய முகவரி 265/12 புறத்தோட்டை, கொச்சிக்கடை, கம்பஹாவில் வசிப்பவர் ஆகிய சுபைர் கைம்பெண் ஜலிலா பிரசித்த நொத்தாரிசு M.M.M. ரமீஷ் LL.B முகதாவில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியில் குறித்த ஆதனம் உரியதானதெனவும் 1969ஆம் ஆண்டிலிருந்து நீண்ட காலமாக இடையூறின்றி ஆட்சி செலுத்தி வருவதாகவும் உறுதியின் மூலப்பிரதிகள் இது தொடர்பான ஆவணங்கள் 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது கைவிட்டுச் சென்றதாகவும், காணிப்பதிவகத்தில் தேடுதலின் போதும் கிடைக்கவில்லை என்றும். வெளிப்படுத்தியுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு செய்யது காசிம் செய்யது இப்றாகிம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 668/2010.10.20 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் சுபைர் கைம்பெண் ஜலிலா இல.27/1 நாவலர் வீதி. நாவாந்துறையைச் சேர்ந்த பழனிச்சாமி சுரேஸ்குமாருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விவரம் :- வட மாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார் பண்ணை தென்மேற்கு. வண்ணார்பண்ணை இறை " பம்மை வெளியும் புளியடியும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இலக்கம் :- 0591 / 2004.12.02 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர.1. குளி 13.09 ஆகும். இதற்கு எல்லை.

வடக்கு :- அந்தோனிப்பிள்ளை டெபிரிலோ, றெய்மனும் மற்றவர்களினதும் ஆதனம்.
கிழக்கு :- சூசைப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை பெண் மேரி மைக்கலனும். சந்தியாப்பிள்ளை லூர்தம்மாவின் ஆதனம்.
தெற்கு :- M.M.L. தாகிரின் ஆதனம்.
மேற்கு :- ஒழுங்கை

தற்போது இவ்வாதனத்தை பழனிச்சாமி சுரேஸ்குமார் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும். உரிமை கோராதவிடத்துக் குறித்த ஆதனமானது பழனிச்சாமி சுரேஸ்குமார் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை,யாழ்ப்பாணம்.** (c29463)

## மரண அறிவித்தல்கள்

### சபாபதி பரமேஸ்வரன்

(ஓய்வு நிலை கோட்டக்கல்வி பணிப்பாளர், முல்லை கரைத்துறைப்பற்று)



சிறுப்பிட்டி கிழக்கு ,நீர்வேலியை பிறப்பிடமாகவும் விசுவமடு கிழக்கு ,50/1 இனை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி பரமேஸ்வரன் நேற்று (26.04.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**50/1,விசுவமடு கிழக்கு ,முல்லைத்தீவு**
**077 835 9188,077 982 7125** **தகவல்: குடும்பத்தினர்**

### கனகசபை புவனேஸ்வரன் (A.K.P)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட கனகசபை புவனேஸ்வரன் 26.04.2017அன்றுகாலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும்கிருஸ்ணரூபன் (டென்மார்க்), சிவரூபன் (சுவிஸ்), சுஜாதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வறெஜி, சத்தியரூபி ஆகியோரின் பாசமிகு மாமனும் சைலேஸ், நிலாசினி, ஸ்தீபன், சதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2017) வெள்ளிக் கிழமைநண்பகல்12.00மணியளவில்அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### செல்வி புஸ்பகுமாரி குமாரசாமி

இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஸ்பகுமாரி குமாரசாமி நேற்று (26.04.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் குமாரசாமி (காணிப்பதிவகம், யாழ். ஓய்வூதியர்) குமாரசாமி நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுந்தரகுமார் (காணிப்பதிவகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), வசந்தகுமாரி, மல்லிகாகுமாரி, இராஜகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாநிதி, சதானந்தம், செல்வகுமார், அஜித்ராஜ்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரணவன், பிரணவி ஆகியோரின் அத்தையும் பிரிய தர்ஸ்சினி, சர்மிலன், லிதுசா, கீர்த்திகா, அனோஜன், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2017) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**93/6, இராசாவின்தோட்ட வீதி. யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர். 021 222 7273**

Galaxy Star
வெற்றி வாரம் 155 திகதி 26.04.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 09 18 38 58
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,435,340/-
2017.04.30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2870 திகதி: 26.04.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 12 28 49 72 K
போனஸ் இல: 18
சனிக்கிழமை ஜக்பொட்: ரூ. 58,463,472/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக.
அல்லது துரித அழைப்பு 1919
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.04.29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்

### தம்பு தர்மராஜா



கரவெட்டியை பிறப்பிடமாகவும் 5 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மராஜா 25.04.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-மனோரஞ்சிதம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மோசேஸ் -ஆசானம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கிளாரம்மாவின் பாசமிகு கணவரும் சுவர்ணா, றொகான் ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தூரனின் மாமனாரும் மனோராணி, தயாநிதி, தர்மகீர்த்தி ஆகியோரின் சகோதரனும் செறோன், செறோனி ஆகியோரின் பேரனும் சிங்கராஜா, பிறேமாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.04.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து பி.ப 1.30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**47, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**
**077 666 0482**

தகவல்
குடும்பத்தினர்.

### தமிழர்...

காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளன. பொது அமைப்புக்களில், வர்த்தகர் சங்கங்கள், போக்குவரத்துத் துறையினர், தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் என்பனவும் ஆதரவு தெரிவித்துள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் இந்த ஆதரவை அந்த அமைப்புக்கள் வழங்கியுள்ளன. மிக நீண்ட காலத்தின் பின்னர், தமிழர் தாயக தேசம் ஓரணியில் ஒருமித்து இன்று முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (கு-5)

### அரச...

குமாரதுங்க தெரிவித்துள்ளார். கேகாலைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள், மக்கள் விடுதலை முன்னணி போன்ற இயக்கங்களைப் போன்று சில சந்தர்ப்பங்களில் அரசும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. இவ்வாறு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதால் நாடு பின்னோக்கி நகர்ந்தது.

நாட்டில் நீண்ட காலமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள், மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவற்றின் பயங்கரவாதச் செயற்பாடுகள் காணப்பட்டன. இதனால் நாடு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைவை எதிர்நோக்க நேரிட்டது என்றார். (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி கந்தசாமி



யாழ். நீராவியடியை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி கந்தசாமி நேற்று (26.04.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - லட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கரட்ணம் (கிளி) மற்றும் கனகலிங்கம், மகேந்திரராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் பிரேமலதா (நோர்வே), பிரேமகாந்தன் (நோர்வே), ஸ்ரீகாந்தன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஈஸ்வரன் (நோர்வே), சுகந்தி (நோர்வே), மாலின் ஆகியோரின் அன்பு மாமியும் துசானி, சுபானி, அபிஷன், தேனுஜா, திலக்சன், துசாந் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**மின்சார நிலைய வீதி,**
**சுன்னாகம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

### இன்று...

ளிட்ட பேக்கரி உற்பத்திகள் எதுவும் கிடைக்காது என்று யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.

இன்றைய போராட்டத்துக்கு தாமும் ஆதரவு வழங்குவதாகச் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த -4)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 | 24 |
| 11 | 04 |
| 1950 | 2017 |



### கிறகோரி மத்தியூஸ்(அமிர்தம்)

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறகோரி மத்தியூஸ் 24.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறகோரி அக்னஸ் தம்பதியரின் அன்பு மகனும் அல்போன்ஸ் ஜெயமணி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயமலரின் அன்புக் கணவரும் ஜெயகீதன் (ஜெவ்றி எலக்றிக்கல்ஸ் உரிமையாளர்), ஜெயலக்ஸ்மன் (லண்டன்), லக்ஸி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மியூறின் (ஆசிரியர், கிளி/பரமன்கிராய் அ.த.க. பாடசாலை), ஐடா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜி.பி. பேர்மினஸ் (ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர், சிறைச்சாலைத் திணைக்களம்), காலஞ்சென்ற றீற்றம்மா, றோஸ், அல்போன்ஸ், றேமன் (இந்தியா), ராஜு, காலஞ்சென்ற குணா மற்றும் ஜஸ்ரின், மேசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், பிலிப்புனேஸ் மற்றும் ஜெயசீலி, ஜஸ்ரின்- நகா, சுரேஸ்-ஜெசிமா, சற்குணம்-ஜெயந்தி, ஜெயா-ஆனந்தி, ஜெனட் -அஞ்சலாமேசி, யேசுமணி, காலஞ்சென்ற கொர்னேலியஸ் மற்றும் புஸ்பராணி, யூலியட், மெற்றில்டா, பிறிஜெற், ஜெயசீலி, ஜோர்ஜ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெவ்றி, அசெலின், ஜெவ்றினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.04.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.14, சென். ஜேம்ஸ் மேற்கு வீதி,**
**குருநகர்.**

தகவல்:
குடும்பத்தினர்.
077 658 9429

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1955 | 2017 |
| 06 | 04 |
| 15 | 23 |



### இராசதுரை தேவராசா

நீர்வேலி வடக்கு குறுக்கு வீதியினை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி மேற்கு பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை தேவராசா 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் பிரகாஷின் பாசமிகு தந்தையும் சங்கீதாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் சகுந்தலாதேவி, ஜெயராசா(சேயர்) காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் ஆனந்தராசா (அப்பிள்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சௌந்தர்ராஜன், தர்மராசா காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பார்வதி, மோகனராஜா, சிவகுமார், கிருஷ்ணகுமார், நல்லம்மா, சுப்பிரமணியம், ஜெயவதனி, புஸ்பா ஆகியோரின் மைத்துனரும் உமாவதி, அனுசியாவதி, தேவராசன், பிரியதர்சினி, லோகமதி, பிரியந்தினி ஆகியோரின் சகலனும் சுதாகரன், சசிகரன், விஜிகரன், ராஜ்கரன் ஆகியோரின் சித்தப்பாவும் பிரஷன்னா, ரம்மியா, அனுஷாந், அனுஷாலினி, பூஜா, பார்த்தீபா, மோகனலாவன்ஜா, கௌசிகா, தனோஜன், சுகன்ஜா ஆகியோரின் பெரியப்பாவும் சிந்துஜா, கிருசாந், ரவிசாந், வினோசாந், ரகுசாந், பரிசாந், பிரணவன், பிரியங்கா, ஜெனுசா, ஜெனுசன், கீர்த்தனன், அஸ்வினி, கிருஷானி, சுபீக்ஷா, தியாசன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பத்திரகாளி கோயிலடி,**
**திருநெல்வேலி.**

தகவல்:
குடும்பத்தினர்.

**077 829 4927/ 021 790 2623**

## உள்ளூராட்சி...

தார் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண.

தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவிடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 வருடம் கீழ் நோக்கிய அதிகாரம் தெற்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிகாரப் பகிர்வுக்கான உப குழுவில் சிபாரிசுகளைச் செய்தவர்களில் மாகாணங்களின் தலைவர்கள் அதிகம் பங்காற்றியுள்ளனர். அவர்கள் தமது காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டு மாகாண சபைகளை எவ்வாறு அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் என ஆராய்ந்ததில் தென்னிலங்கையைச் சேர்ந்த மாகாண சபைகளின் தலைவர்கள் மிகச் சிறந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

### ஆளுநர்களுக்கு அதிகார குறைப்பு

தெற்கு மாகாண முதலமைச்சர்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு பகிரப்படுகின்ற அதிகாரங்கள் பற்றிப் பேசிவிட்டார்கள். ஆளுநர்களிடம் அதிக அதிகாரங்கள் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்களை ஆளுநர்கள் தட்டிக்களிக்கின்ற நிலமை காணப்படுகின்றது. தெற்கில் உள்ள மாகாண முதலமைச்சர்களும் ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைத்து மாகாண சபையின் அதிகாரத்தை அதிகரிக்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னிலங்கை மாகாண சபைகளும் கேட்கின்றன பொலிஸ் அதிகாரங்களை எங்களிடம் தாருங்கள் என்று. நீங்கள் கொள்கைகளை வகுக்கும்போது எங்களையும் அழையுங்கள். அப்போதுதான் நாங்கள் வகுத்த கொள்கையாக இருக்கும். அதன் ஊடாகக் கொள்கைகளை நாங்களும் இணைந்து உருவாக்கியதாக அமையும். இதனால் தெற்கில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் அமையலாம் என அவை கூறுகின்றன.

### அதிகாரப் பகிர்வுக்கு தெற்கில் சிலர் எதிர்ப்பு

அதிகளவான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தால் அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என தெற்கில் ஒரு சாரார் கூறி வருகின்றனர். ஸ்கொட்லாந்து பிரித்தானிய பிரிவினை கோரல்கள் அதிகாரப் பகிர்வால் உருவாகவில்லை. அது வரலாற்று ரீதியாக அவர்களின் பின்னணியே அடிப்படையாகும். ஆகவே அது தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆனாலும் அவ்வாறான ஒரு நிலைமைக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலமை ஏற்படலாம். ஆனால் அதற்கும் நாங்கள் இணக்கம் கண்டு முழுமையாகச் செயற்படவேண்டும்.

ஒரு சில சிங்களத் தீவிரவாதிகளின் கருத்துக்களைக் கணக்கில் எடுத்தால் ஒரு காலத்திலும் இணக்கத்துக்கு வர முடியாது. ஆகவே அவ்வற்றைக் கருத்தில் எடுக்கத் தேவையில்லை. மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது பிரிவினையை ஏற்படுத்தும் என அச்சம் இருப்பவர்களுக்கு அவற்றைப் போக்கவேண்டும்.

எந்த ஒரு மாகாண சபையும் பிரிவினை நோக்கிப் பயணிக்க முயற்சிக்கின்றது என அறிந்தால் அந்த விடயத்தில் கொழும்பு அரசு தலையிடலாம் என்ற விடயத்தை இணைக்க உத்தேசித்து வருகின்றோம்.

### கூட்டமைப்பின் நிலைப்பாடு

ஆனால், இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையின் அனைத்து விடயங்களிலும் கொழும்பு அரசு உள்நுழைகின்ற செயற்பாடுகள் இருக்காத வகையில் அமையவேண்டும் என கூறியுள்ளது.

19 ஆவது திருத்தத்தின் பின்னர் அரச தலைவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். ஒரு அரசியல் யாப்பு பற்றிய நீதிமன்றையும் முன்மொழிந்துள்ளோம். அது அரசியல் யாப்பு சம்பந்தமான தனது முடிவுகளைச் சொல்லக் கூடிய நிலையில் இருக்கின்றது.

எங்களுக்கு தற்பொழுது கிடைத்துள்ள சந்தர்ப்பம் எத்தனை தசாப்த காலங்கள் கிடைத்தாலும் கிடைக்காது. கூட்டாட்சி அரசில் ஐக்கிய தேசியக் கட்சியில் 106 ஆசனங்கள் இருக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் 93 ஆசனங்கள் இருக்கின்றன. அவற்றில் அரைவாசிப் பேர் எதிர் தரப்பில் இருக்கின்றனர்.

இரு சாராரும் ஒன்றாக இருக்கும் வரை மிகவும் சௌகரியமான பெரும்பான்மை இருக்கும். கடந்த மற்றும் நடப்பாண்டு வரவுசெலவுத் திட்டங்கள் மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமான ஆதரவுடன் நிறைவேறி இருக்கின்றன.

### புதிய அரசியல் திருத்தம் வெற்றி பெறும் நிலை

இதிலிருந்து புலப்படுவது என்னவெனில் புதிய அரசியல் திருத்தம் ஒன்றை வெற்றியுடன் உருவாக்க கூடிய நிலமை உருவாகியுள்ளது. ஜே.வி.பி அரசியல் திருத்தம் தொடர்பில் சாதகமான பார்வையைக் கொண்டுள்ளது. ஆகவே புதிய அரசியல் திருத்தம் முன்வைக்கப்படும் என்ற முழுமையான நம்பிக்கை இருக்கின்றது.

வடக்கிலும் சரி தெற்கிலும் சரி இனவாதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஆள்கள் இருக்கின்றனர். சந்திரிகா காலத்தில் முன்வைத்த தீர்மானத்தில் இது போதாது, அதிகளவில் தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் எனக் கூச்சலிட்டவர் இப்போது இந்த அரசை கவிழ்க்கவேண்டும் எனக் கூறிவருகின்றார். நான் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதிநிதியாக நாடாளுமன்றில் இருக்கின்றேன். மகிந்த ராஜபக்ச அணியில் இருந்து விடுபட்டு நல்ல அறிவுள்ள அணியுடன் பயணிப்பது தொடர்பாக உத்தேசித்துள்ளேன்.

### அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை

தெற்கில் தேநீர் மேசைகளை மட்டும் பகிர்ந்து கொள்ளும் பிரதிநிதிகள் சிலர் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனநிலையில் இல்லை. தேர்தல் ஊடாக அதிகாரத்துக்கு வர முடியாதவர்கள் அரசியல் தீர்வுக்கு எவ்வாறு முட்டுக்கட்டைகளைப் போடலாம் எனத் திட்டங்களை தீட்டி வருகின்றனர்.

எமக்கு ஒரு இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய வகையில் அரசியல் யாப்பு கிடைக்கும். அதனை வைத்துக்கொண்டு நாம் முன்னகர கூடிய வகையில் இருக்கவேண்டும். அரசியல் தீர்வு தொடர்பாக மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அதிகமான ஆதரவு நாடாளுமன்றில் கிடைத்தவுடன் தான் பொது மக்களிடம் விடப்படும். அதிகாரங்கள் கூடுதலாகப் பகிரப்படுவதனால் பொது மக்களும் சரியான பதிலை வழங்குவார்கள்.

கடந்த 10 வருடங்களாக ஆட்சி நடத்திய மகிந்த சிங்கள மக்களின் மனங்களைச் சீரழித்து விட்டார். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் அவர்களை அதிலிருந்து மீட்டு உண்மை நிலையை வெளிக்காட்டி வருகின்றன -என்றார். (த-8)

## கூட்டு அரசின்...

தெரிவித்தது.

அரச தகவல் திணைக்களத் தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய பதிலளிக்குமாறு அல்லது அவர்கள் தொடர்பில் இறப்புச் சான்றிதழ் வழங்குமாறு வலியுறுத்தி வடக்கில் நாளை (இன்று) கடையடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்த நாட்டில் 1971 ஆம் ஆண்டு முதல் காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுக்கே இன்னமும் இறப்புச் சான்றிதழ் கொடுக்கப்படவில்லை.

1994ஆம் ஆண்டு இறப்புச் சான்றிதழ் கொடுக்க முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரணதுங்க நடவடிக்கை எடுத்தார். என்றாலும் அவற்றை எளிதில் செய்துவிட முடியாது. காணாமற்போனவருக்கு இறப்புச் சான்றிதழ் கொடுத்த பின்னர் அவர் உயிருடன் ஒரு வேளை இருந்தால் அது பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.

அரச தலைவர் மாணவர்களுடன் எடுத்துக் கொண்ட ஒளிப்படமொன்றில் காணாமற்போனதாகக் கூறப்படும் பெண் பிள்ளையொன்று உள்ளதாகக் கூறப்பட்டது. எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதனை வலியுறுத்தி வடக்கில் நாளை (இன்று) கடையடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. நாட்டில் பூரண ஜனநாயகத்துடன் கூடிய கூட்டு அரசு ஏற்படுத்தப்பட்டுள்ளமையாலேயே வடக்கில் இன்று இவ்வாறான போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டு அரசு ஏற்படுத்தப்பட்டதற்காக அவர்கள் ஒரு கடையடைப்புப் போராட்டத்தை மேற்கொண்டு அரசுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்-என்றார். (த-4)

## இன்றைய...

யும் முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அந்த மக்களது பிரச்சினைகள் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களினால் அவ்வப்போது வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி இன்று வியாழக்கிழமை 'வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தினால்' மேற்கொள்ளப்படவுள்ள கடையடைப்புக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மேலதிகமாக முஸ்லிம் கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவும் ஆதரவு தெரிவித்துள்ளன. இதனால் இந்த கடையடைப்புப் போராட்டம் அரசியல் மட்டத்தில் பெரிய தாக்கத்தைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சரியான முறையில் முன்வைக்கப்படவேண்டும். சமகாலத்தில் மறிச்சுக்கட்டி, இறக்காமம் மாயக் கல்லி மலை போன்ற விவகாரங்கள் குறித்து சரியான தெளிவுபடுத்தல்கள் செய்யப்பட வேண்டும் என்றுள்ளது. (த-5)

## வீதியோரங்களில்...

கோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக நேற்று 66 ஆவது நாளாகவும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். வடக்கு கிழக்குக் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த அவர்கள், இன்றைய தினம் நடைபெறும் போராட்டம் வெற்றி பெற அனைத்துத் தரப்பினரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எங்களது உறவுகள் எங்கே ? தீர்க்கமான பதிலை எதிர்பார்த்து கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி நாம் எமது போராட்டத்தை ஆரம்பித்தோம். இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. ஏ9 வீதியின் கரையில் இருக்கும் எங்களைக் கடந்து எல்லோரும் செல்கின்றார்கள். ஏனென்று ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அரசோ, அரசியல்வாதிகளோ எங்கள் பிரச்சினையை விரைந்து தீர்ப்பதற்கு முன்வரவில்லை.

அரசு பாராமுகமாக இருப்பதால், அழுத்தம் கொடுக்கும் வகையில் வடக்கு கிழக்கு கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தோம். 66 நாள்கள் வீதிக் கரையில் நாங்கள் போராட்டம் நடத்தினோம். இன்று ஒரு நாள் எல்லோரும் உங்கள் வீடுகளுக்குள் முடங்கி, எங்களுக்காக எங்களின் உறவுகளுக்காகப் போராட்டம் நடத்த அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்தனர். (த-5-6)

## காணாமற்...

இலங்கை அரசு உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பிரிட்டன் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் தலைமையிலான குழுவினருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதுவர் இல்லத்தில் நடைபெற்றது.

சுமார் ஒரு மணி நேரமாக நடைபெற்ற இந்தச் சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள், அதில் காணப்படும் தாமதங்கள் மற்றும் எதிர்காலத்தில் அந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து நாம் விரிவான கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தோம்.

குறிப்பாகப் புதிய அரசமைப்பு அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலும், பாதுகாப்பையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தக் கூடியதாகவும் அமையவேண்டும். அவ்வாறான அரசமைப்பொன்றையே நாம் ஏற்றுக்கொள்வோம் என்பதை தெளிவாக எடுத்துரைத்துள்ளோம்.

அடுத்தாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதில் எவ்விதமான மாற்றுக்கருத்துக்களுக்கும் இடமில்லை.

இலங்கை அரசு அந்தத் தீர்மானத்தில் உள்ள விடயங்களை முறையாக முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய அழுத்தங்களை பிரிட்டன் தொடர்ந்தும் வழங்கவேண்டும். அத்துடன் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளில் பிரிட்டன் கொண்டிருக்கும் கரிசனை நீடிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டோம்.

இவற்றுக்கு அப்பால் வடக்கு, கிழக்கில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மக்களின் போராட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தோம். காணி, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள் தொடர்பில் அரசின் அசமந்தமான செயற்பாட்டின் வெளிப்பாடாகத்தான் மக்கள் இவ்வாறு தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கு நாம் முழுமையான ஆதரவையும் வழங்குகின்றோம் என்பதையும் அவர்களிடத்தில் குறிப்பிட்டோம்.

காணாமல்போனோர் விடயத்தைக் கையாள்வதற்காக சட்டவரைவு இயற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள போதும் தற்போது வரையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை அமைக்கும் செயற்பாட்டை அரசு முன்னெடுக்காது காலத்தைக் கடத்தி வருகின்றது.

ஆகவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை எட்டும் முதற்படியாக அந்த அலுவலகத்தை உடனடியாக திறப்பதற்குரிய அழுத்தத்தை அரசுக்குப் பிரிட்டன் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார். (த-4)

## காணாமல்...

இன்று காலை 10 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு தேவாலயச் சந்தியில் ஆரம்பமாகி முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சதுக்கத்தின் ஊடாகச் சென்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும். போராட்டத்தின் முடிவில் அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கான மனுக் கையளிப்பும் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்களும் இன்றைய தினம் மாவட்டச் செயலகத்துக்கு பேரணியாகச் சென்று மனுக் கையளிக்கவுள்ளனர். (த-5-7)

## வடக்கு...

வழங்கும் வகையில் வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வு ஒத்திவைக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

வடக்கு மாகாண சபையின் 91 ஆவது அமர்வு இன்று நடைபெற இருந்தது. இந்த நிலையில், காணாமற்போனோரின் உறவினர்களால் இன்றைய தினம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கடையடைப்புப் போராட்டம் காரணமாக, வடக்கு மாகாண சபை இன்று காலை கூடி, அவைத் தலைவரின் அறிவிப்புடன் சபை ஒத்திவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5-8)

# நான் முத்திரை சேகரிக்கிறேன்

★ முத்திரை சேகரித்தல் நல்ல பொழுது போக்கு மட்டுமல்ல. அறிவைப் பெருக்கிட உதவும் பொழுதுபோக்குமாகும்.

★ இதனை நான் உணர்ந்துள்ளதன் காரணமாகவே முத்திரை சேகரிப்பில் ஈடுபட்டுள்ளேன்.

★ முத்திரைகள் பல வடிவங்களிலும் வண்ணங்களிலும் வெளியிடப்படுகின்றன.

★ அவை புவியியல், அரசியல், வரலாறு தொடர்பான விவரங்களை அறிந்திட உதவுகின்றன.

★ நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும், பல அரிய கண்டுபிடிப்புக்களைச் செய்த விஞ்ஞானிகளையும் உலகப் புகழ் பெற்ற பெரியார்களையும் நாம் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றன.

★ எமது நாட்டு விவரங்களை மட்டுமன்றி, பிறநாட்டு விவரங்களையும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

★ உலகெங்கும் முத்திரை சேகரிப்பாளர்கள் உள்ளனர்.

★ இவர்கள் தமக்கென சங்கங்களையும் அமைத்துள்ளனர்.

★ முத்திரைகள் மிகக் கவனமாக அச்சிடப்படுகின்றன.

★ சில வேளைகளில் அச்சுத்தவறுகளுடனும் சில முத்திரைகள் வெளிவந்து விடுவதுமுண்டு.

★ இத்தகைய முத்திரைகள் பெறுமதி மிக்கனவாக கருதப்படுகின்றன. (உ+ம் - தலைகீழாக அச்சிடப்பட்ட முத்திரை)

★ முத்திரை சேகரிப்போர் அச்சுத் தவறுகளுடனான முத்திரைகளை மிக்க ஆர்வத்துடன் அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு முன்வருவார்கள்.

★ இதன்மூலம் முத்திரை சேகரிக்கும் பழக்கம் அறிவுக்கு மட்டுமன்றி அதிஷ்டத்துக்கும் வழிவகுத்து விடுகிறது.




★ உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேனா நண்பர்களை வைத்திருப்போர் இவர்களுடனான கடிதத் தொடர்புகள் மூலம் நிறைய முத்திரைகளையும்பல விதமான முத்திரைகளையும் பெற்றுக் கொள்வது இலகு.

# பேர் மூடா முக்கோணி





அத்திலாந்திக் சமுத்திரத்தில் கரூபியன் கடலையடுத்து மேற்கிந்தியத் தீவுகளான கியூபா, யமேக்கா, போட்டோறிக்கோ முதலான தீவுகளுக்கு வடக்கே ஒரு முக்கோணப் பரப்பு அதிசயங்களையும், பயங்கரங்களையும் உள்ளடக்கிய பிரதேசமாக விளங்கி வருகிறது. ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாக் குடாநாடு, போட்டோறிக்கோ தீவு, பேர்மூடா தீவு ஆகிய மூன்றிடங்களை இணைத்துப் பார்க்கும் போது இந்த மர்மம் நிறைந்த பேர்மூடா முக்கோணி தோன்றிவிடும். இந்த முக்கோணப் பிரதேசத்தினுள் நுழையும் கப்பல்கள் எங்கு சென்றன? என்று அறியமுடியாத விதத்தில் மறைந்து போயினவாம். இந்தப் பிரதேசத்தின் வான் பரப்பில் பறந்த விமானங்களும் மாயமாய் மறைந்தனவாம். கடந்த இருநூறு ஆண்டுகளில் இங்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட கப்பல்களும் இருபதுக்கும் அதிகமான விமானங்களும் வந்த சுவடே தெரியாமல் மாயமாய் மறைந்து போயின. இதன் பின்னர் இந்த முக்கோணப் பிரதேசம் இதன் பயங்கரம் கருதி 'பிசாசு முக்கோணி' என்று அழைக்கப்படலாயிற்று. 1945ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பேர்மூடா முக்கோணிக்கு மேல் வானத்தில் பறந்த ஐந்து குண்டு வீச்சு விமானங்கள் மாயமாக மறைந்ததன் பின்னரே இந்த முக்கோணி உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தது. இந்தப் பகுதியில் இவைகள் ஏறபட


1. சமுத்திரத்துக்கு அடியில் ஓடும் வேகமான நீரோட்டங்கள் இருத்தல்.
2. ஹரிக்கேன் சூறாவளிகள் சண்டமாருதமாக வீசுதல்.
3. சுழல் நீர்ப்பரப்புக்கள் உருவாகுதல்.
4. கடுமையான காந்த ஈர்ப்புக்குள்ளாதல்.
5. நீர்ச் சுழிகளோடு கூடிய தொனாடோ எனப்படும் நீர்த்தம்பங்கள் உருவாகுதல், போன்ற ஐந்து காரணிகள் ஒன்று சேர்ந்தோ அல்லது ஐந்தில் ஒரு காரணியாலோ இந்த மாயங்கள் நிகழ்கின்றன என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.



புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்




விடுபட்ட 9ஆவது உரு எது என்பதை இலக்கமிடப்பட்ட உருக்களிலிருந்து கண்டறிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுது.



# சிறுதுளி பெருவெள்ளம்

ஓர் அழகான மண் குடிசை. அதில் சிவப்பு நிறத்தில் சற்று தலை பெருத்த இறக்கை இல்லாத வேலைக்கார எறும்புகள் சாரி சாரியாக அணிவகுத்து நின்றன. தலைமை ஆசனத்தில் சற்றே பெருத்த வயிற்றுடன் மெல்லிய இறகுகளை ஒய்யாரமாய் ஆட்டிக் கொண்டு அனைவரையும் கண்காணித்துக் கொண்டிருந்தது ராணி எறும்பு. குடிலுக்குள் இறைந்துக்கிடக்கும் மீதியான உணவுப்பண்டங்களை அகற்றி சுத்தம் செய்து கொண்டிருந்தது ஒரு கூட்டம். மற்றொரு கூட்டம் உணவுக் கிடங்கின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தது. இன்னொரு கூட்டம் உணவு தேடலுக்கு கிளம்பிக் கொண்டிருந்தது. எல்லா எறும்புகளும் தத்தம் பணியில் ஈடுபட 20 எறும்புகள் மட்டும் வேலைக்கு செல்ல மாட்டோமென அடம்பிடித்துக் கொண்டிருந்தன. வேலைக்கார எறும்புகளின் தலைமை இது பற்றி ராணியிடம் தகவல் கொடுக்க ராணியின் கட்டளைப்படி தலைமை வேலைக்கார எறும்பு அவற்றை ராணி முன் கூட்டிவந்தது. ராணி விழிகளை உருட்டியபடி "என்ன பிரச்சினை உங்களுக்கு? ஏன் வேலை செய்ய மறுக்கிறீர்கள்? மற்றவர்கள் எல்லோரும் ஒழுங்காக வேலை செய்ய, உங்களுக்கு மட்டும் என்ன வந்தது? உடல் நலம் இல்லாவிடில் சொல்ல வேண்டியதுதானே!" என்று கோபமாகக் கத்தியது.

"அரசியாரே வணக்கம்! ஏற்கனவே எமக்குத் தேவையான உணவுகள் நிறையத் தேடியாயிற்று. மீண்டும் மீண்டும் உணவு தேட விரட்டினால்இது நியாயமா?" "போதுமென்ற மனமே உங்களுக்கு வராதா?" என்றது தலைமை வேலைக்கார எறும்பு.

"வேலைக்குச் சென்றால் தான் சாப்பிட முடியும். எவரும் வேலை செய்யாமல் சும்மா உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. அது எறும்பு இனத்துக்கே பெருத்த அவமானம்" என்றது ராணி. "ராணியாரே இன்று எனக்கு உணவுக் கிடங்கை சுத்தம் செய்யும் பணி. அதனை நிறைவேற்றி விட்டேன். அதிகப் படியான இந்த வேலையை நான் மறுக்கிறேன். என் உணவுக்கான இன்றைய வேலை முடிந்து விட்டது? என்றது வேலைக்கார ஒரு எறும்பு.

"சரி நீ போகலாம். இனிமேல் நீ வேலை செய்யும் நாள்கள் மட்டுமே உணவு உண்ண வேண்டும். உன்னோடு இருப்பவர்களுக்கும் இதே கட்டளைதான். நீங்கள் போகலாம்." என்றது ராணி. "ஆகா சாமர்த்தியமாகப் பேசி அரசியை ஒப்புக்கொள்ள வைத்து விட்டோம். இனி மகிழ்ச்சியாகப் பொழுது போக்கலாமென எறும்புகள் எண்ணின. நாள்கள் சில ஓடின.

அன்று காலையில் மழை அடைத்துப் பெய்ய காற்றும் அதனுடன் சேர்ந்து கொண்டது. வெளியில் வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் . அனைத்து வேலைக் காரர்களும் அமைதியாக உணவருந்திக் கொண்டிருக்க 20 வேலைக்காரர்கள் மட்டும் சாப்பிட அனுமதியில்லாமல் பசியால் துவண்டுபோயின. வேறு வழியில்லாது மகாராணியிடம் ஓடிச்சென்று " ராணியாரே பசி தாங்க முடியவில்லை, சாப்பிட அனுமதியுங்கள். இல்லை என்றால் நாம் உயிர் விட வேண்டிவரும்" என்று கெஞ்சின "இப்பொழுது தெரிகிறதா சேமிப்பின் அவசியம்? மழை காலங்களில் எம்மால் வெளியே உணவு தேட முடியாது. முன்பு மேலதிகமாகச் சேமித்து வைத்த உணவே இன்று எம்மைக் காப்பாற்றுகிறது. ஆண்டவன் அருளால் மழை வரப்போகிறது என்பதை முன்கூட்டியே அறியும் வல்லமையை நாம் பெற்றிருக்கிறோம். அதன் பயனாக மழை காலங்களுக்குத் தேவையான உணவை முன்கூட்டியே சேமிக்க அதிகமாக வேலை செய்ய வேண்டியது அவசியமானது. சேமிப்பின் அவசியம் புரிந்து இனியாவது ஒழுங்காக நடந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். இந்த முறை உங்களை மன்னிக்கிறேன். போய்ச் சாப்பிடுங்கள்" என்றது ராணி. தமது முட்டாள் தனத்தை நினைத்து தலைகுனிந்து நின்றன. வேலைக்கார எறும்புகள்.

இப்படியே நம்மில் பலர் சேமிப்பு பற்றிய விழிப்புணர்வே இல்லாமல் வாழ்கிறோம். இன்றிலிருந்து நாமும் சேமிப்புப் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொள்வோம்.

சிறுதுளி பெரு வெள்ளம்

## வவுனியாவுக்கு வெண்கலம்

கரணவாய், ஏப். 27
இளநிலைப் பிரிவினருக்கான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு சம்மட்டி எறிதலில் வவுனியா மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்ட சி. ஜெனோசன் வெண்கலம் வென்றார்.
கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் தொடர் நடைபெற்று வருகிறது.
நேற்றுநடைபெற்ற23வயதுஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் வவுனியா மாவட்டத்தில் இருந்த பங்குபற்றியசி.ஜெனோசன்31.53மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
(ம-108-422)






## விண்மீன் வி.கழகம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 27
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கு இடையிலான கால்பந்தாடத் தொடரில் பலாலி விண்மீன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
ஐக்கியம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.
ஆட்டத்தின்13ஆவதுநிமிடத்தில் பலாலி விண்மீன் அணியின் டேமியன் தனது அணிக்கான முதலாவதுகோலைப்பதிவுசெய்தார். வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. முதல்பாதியின் முடிவில் 1:0 என்று முன்னிலை பெற்றது விண்மீன்.
இரண்டாம் பாதியில் கலைமதி அணி பதிலடி கொடுக்க கடும் முனைப்புக்காட்டியது. பயனாக 8 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது கலைமதி.
ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கும்போது விண்மீன்அணியின்டேமியன் பதில்கோலைப்பதிவுசெய்யமுடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணிவெற்றிபெற்று இறுதிக்குத்தகுதிபெற்றது.
(ம-422-108)

## கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 27
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தத் திட்டமிட்ட யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
(ம-23)

## இமையாணன் மத்தி. வென்றது கிண்ணம்

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் இமையாணன் மத்திய அணி கிண்ணம் வென்றது.
அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகராவும்இமையாணன்மத்திய இளைஞர் கழக அணியும் மோதின. 30 பந்துகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இமையாணன் மத்திய இளைஞர் கழக அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படிமுதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா அணி தனுசியா மற்றும்ரம்மியா ஆகியோரின் உதவியுடன் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கியஇமையாணன் மத்திய இளைஞர் கழக அணியும் 2 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
கிண்ணத்தைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 10 பந்துகள் மேலதிகமாக வழங்கப்பட்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் மத்திய இளைஞர் கழக அணி இரண்டு ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குக் களமிறங்கிய அல்வாய்மனோகராஅணி ஓட்டமெதனையும் பெறாததை அடுத்து ஒட்டுமொத்தமாக 4:2 என்ற ஓட்டங்களின் அடிப்படையில் இமையாணன் அணி கிண்ணம் வென்றது. (ம-422-108)

## வென்றது பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஏப். 27
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் தேசிய ரீதியிலான எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.
கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பொலிஸ்கால்பந்தாட்ட அணியைஎதிர்த்துயாழ்ப்பாணம்குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல் எதனையும் பதிவாக்கவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்க வேண்டியநிலைஏற்பட்டது. 4:1என்றகோல்கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.
(ம-23)





## லூட்ஸ்சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 27
வலிகாமம் கால்பந்தாட் லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் வானவில் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றஇறுதிஆட்டத்தில்வென்று இளவாலை சென். லூட்ஸ் அணி சம்பியனானது.
வானவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். லூட்ஸ் அணியை எதிர்த்துஅராலிபாரதிஅணிமோதியது. 1:0 என்றகோல் கணக்கில் சென். லூட்ஸ் அணி வெற்றிபெற்றது.
ஆட்டநாயகனாக சென். லூட்ஸ்அணியின்தமிழ்ச்செல்வன். சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் ஜோமி ஆகியோர் தெரிவாகினர்.
(ம-23)

## கரப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27
நாயன்மார்கட்டுபாரதிவிளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக 'ஏ', 'பி' என இரு பிரிவாக நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் 'பி' பிரிவு ஆட்டங்கள் பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் 28 அணிகள் பங்குபற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
(ம-23)



# சம்மட்டி எறிதல் போட்டியில் வழித்துத் துடைத்தது யாழ்.





இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று அத்தனை பதக்கங்களும் கிடைத்தன.

தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். பிரகாஸ்ராஜ் 25.17 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், வை.ஜதார்த்தன் 25.15 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கே.சுவீகன் 24.44 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422-108)




## வவுனியாவுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஏப். 27

இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மெய்வல்லுநர் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.ஜிந்துசன் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் நேற்றுக் காலை நடைபெற்ற போட்டியில், கே.ஜிந்துசன் 34 நிமிடம் 45 செக்கன்கள் 18 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422-108)



## பாக். அணி அறிவிப்பு

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சர்பராஸ் அகமட்டின் தலைமையில் அணி கட்டமைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி விவரம்: அகமட் (தலைவர்), செசாட், அசார் அலி, ஹபீஸ், பாபர் அசாம், சோயிப் மலிக், உமர் அக்மல், இமட் வசீம், பஹார் ஜமான், பஹிம் அஸ்ரப், ஆமிர், ரியாஸ், ஜுனைட் கான், ஹசன் அலி, சடப் கான். (ம)

# யாழ். வீராங்கனை தர்ஜினி ஆஸியில் மிரட்டல் ஆட்டம்


கோப்புப் படம்

உலகின் உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனை என்று அறியப்படும் தர்ஜினி சிவலிங்கம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மிகவும் அபாரமாகச் செயற்பட்டு தான் பிரதிநிதித்துவம் செய்யும் அணியான அல்பன்ஸின் வெற்றிக்கு வித்திட்டார்.

ஆஸ்திரேலியாவின் சென்.அல்பன்ஸ் கழகத்துடன் இலங்கைத் தமிழ் வீராங்கனை தர்ஜினி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். தற்போது அவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு விளையாடி வருகிறார். சென். அல்பன்ஸ் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மேரிஸை எதிர்கொண்டது. 66:53 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அல்பன்ஸ் வெற்றிபெற்றது. அல்பன்ஸ் பெற்ற 66 புள்ளிகளில் 65 புள்ளிகள் தர்ஜினியால் பெறப்பட்டன. (ம)

# பாகிஸ்தான் அபார வெற்றி சதத்தை இழந்தார் மிஸ்பா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 7 இலக்குகளால் அபார வெற்றிபெற்றது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களடுத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் 286 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சேஸ் 63 ஓட்டங்களையும், கோல்டர் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும், டவ்ரிச் 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆமிர் 6 இலக்குகளையும், சாஜ் 2 இலக்குகளையும், அபாஜ், ரியாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 407 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மிஸ்பா ஓர் முனையில் ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்களைக் குவித்தார். மறுமுனையில் இலக்குகள் சரிந்து முடிந்ததால் அவரால் சதம் கடக்க இயலவில்லை. அசாம் 72 ஓட்டங்களையும், யுனிஸ்கான் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கபிரியேல், ஜோசெப் இருவரும் தலா 3 இலக்குகளையும், கோல்டர், பிஸ்கூ, ஸேஷ் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வெறும் 152 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பவல் 49 ஓட்டங்களையும், ஹெட்மையர் 20 ஓட்டங்களையும், பிஸ்கூ 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சாஜ் 6 இலக்குகளையும், ஆமிர் 2 இலக்குகளையும், ரியாஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க பாகிஸ்தானுக்கு இலக்காக வெறும் 32 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது பாகிஸ்தான். சாஜ் ஆட்டநாயகனானார்.

(ம)



# கோலூன்றிப் பாய்தலில் யாழ். தொடர்ந்து வேட்டை

யாழ்ப்பாணம், ஏப். 27

இளநிலைப் பிரிவினருக்கான தேசியமட்டத் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 18 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தங்கம், வெள்ளி, வெண்கலம் என அத்தனை பதக்கங்களையும் யாழ்ப்பாணம் மாவட்ட அணி கைப்பற்றியது.

தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் போட்டிகள் நடைபெறுகின்றன. நேற்று நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ச.ஹெரீனா 3.01 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி 2.80 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் அதே கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.தரணிகா 2.70 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

கடந்த 2013ஆம் ஆண்டு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அனித்தா 3 மீற்றர் பாய்ந்த உயரத்தை இவ்வாண்டு அதே கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ச.ஹெரீனா முறியடித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலிலும் யாழ்ப்பாணமே பதக்க வேட்டையாடி இருந்தது.

(ம-422)







# ஊவாவை வென்றது வடமாகாண அணி

யாழ்ப்பாணம், ஏப். 27

இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் வென்றது வடக்கு மாகாண அணி.

வெலிசற கடற்படை மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் வடமாகாண அணியை எதிர்த்து ஊவா மாகாண அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது ஊவா மாகாண அணி. அந்த அணி 47.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாலிக்க டில்சான் 39 ஓட்டங்களையும், டில்ருவான் 19 ஓட்டங்களையும், மதுசங்க 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரதீசன் 4 இலக்குகளையும், ஜதுசன் 3 இலக்குகளையும், கபில்ராஜ், மதுசன், ருசாந்தன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

300 பந்துகளில் 135 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய வடமாகாண அணி 26.2 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக உமா லக்சன் ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களையும், அஸ்மிக 30 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

# புனே அணி படுதோல்வி களத்தடுப்பு மிகமோசம்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மிகமோசமான களத்தடுப்பால் புனே அணி படுதோல்வியடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய புனே 5 இலக்குகள் இழப்புக்கு 182 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சிமித் 51 ஓட்டங்களையும், ரகானே 46 ஓட்டங்களையும், திரிபதி 38 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பதிலுக்குக் கமிறங்கிய கொல்கத்தா 20 ஓட்டங்களில் இருந்தபோது நரைன் வீழ்த்தப்பட்டார். ஆனால் அதன்பின்னர்தான் வேட்டை ஆரம்பமானது. களமிறங்கிய நிமிடம் முதல் நொறுக்கித் தள்ளினார் உத்தப்பா. உத்தப்பாவுக்கு வாய்ப்பை வழங்கிக் கொண்டிருந்தார் கம்பீர். உத்தப்பாவுக்கு இரண்டு, கம்பீருக்கு ஒன்று என மொத்தம் மூன்று பிடியெடுப்புக்கள் தவறவிடப்பட்டன. இது கொல்கத்தாவுக்கு மேலும் சாதகமானது. 26 பந்துகளில் அரைச்சதம் கடந்து 87



ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் உத்தப்பா. சில நிமிடங்களில் கம்பீரும் ஆட்டமிழந்தார். எனினும் பதற்றம் இல்லாமல் 7 இலக்குகளால் வென்றது கொல்கத்தா.

இந்த வெற்றியுடன் புள்ளிப்பட்டியலில் மும்பையைப் பின்தள்ளி முதலிடத்தைப் பிடித்தது கொல்கத்தா. இதைவிட தகுதிச் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பும் கொல்கத்தாவுக்கு அதிகரித்துள்ளது. (ம)

## சூதாட்டம்

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் சோட்சோபே உள்ளூர் ஆட்டமொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5 டெஸ்ட் ஆட்டங்கள், 61 ஒருநாள் ஆட்டங்கள், 23 ரி-20 ஆட்டங்களில் தென்னாபிரிக்க அணிக்காக சோட்சோபே விளையாடியுள்ளார். அண்மையில் இடம்பெற்ற உள்ளூர் ரி-20 ஆட்டமொன்றிலேயே அவர் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

**வீடு வாடகைக்கு தேவை**

கொக்குவிலை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. 075 041 5858

**வீடு வாடகைக்கு தேவை**

3 வருடத்திற்கு தொழிற்சாலையாக பயன்படுத்துவதற்கு வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய விலாசமான வீடு தேவை. யாழ். நகரை அண்மித்ததாக பலாலி வீதி, கே.கே.எஸ் வீதிக்கு அண்மையில் இருத்தல் அவசியம். வாடகை 40,000/= இற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். AJA 003547

077 553 2055

**காணவில்லை**

திருமதி
கமலாசனி அரசரட்ணம்



திருமதி கமலாசனி அரசரட்ணம் என்பவரைக் காணவில்லை. இவரின் வயது 67 நடுத்தர உயரம், பொது நிறம், சாம்பல் நிறமேற்சட்டையும் மண்ணிறப் பாவாடையும் அணிந்திருந்தார். தலைமுடி நிறம் வெள்ளை இவரைக்கண்டவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தருமாறு அன்போடு கேட்டுக்கொள்வதுடன் அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். AJA CS 003545

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
075 699 1087, 075 070 7854

# பலம்வாய்ந்த அணியை அறிவித்தது இங்கிலாந்து சொந்த மண்ணில் கிண்ணம் வெல்வதற்கு திட்டம்

மினி உலகக்கிண்ணத்தொடருக்கான பலம் வாய்ந்த அணியை இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

மினி உலகக்கிண்ணத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தத்தமது அணிகளை அந்தந்த நாடுகளின் கிரிக்கெட் சபைகள் அறிவித்து வருகின்றன. இலங்கை, பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபைகள் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.



மோர்கனின் தலைமையில் அணி கட்டமைக்கப்பட்டுள்ளது. வேகப் பந்து வீச்சாளர் மார்க் வூட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஸ்ரீவ் பின் அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. டேவிட் வில்லே அணிக்குத் திரும்பியுள்ளார்.

இங்கிலாந்து அணி விவரம்

மோர்கன் (தலைவர்), மொயின் அலி, பரிஸ்ரெவ், ஜேக்போல், பில்லிங்ஸ், பட்லர், கேல்ஸ், பிளங்கெட், ரஷீட், ரூட், றோய், ஸ்ரோக்ஸ், வில்லே, வோக்ஸ், வூட். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.